உ

நவக்ரகாய நமஃ

ஜாதகசித்தி என்னும்

அநுபோக சோதிட : :
: : பிரம்ம ரஹஸ்யம்

(இரண்டு காண்டமும் சேர்ந்தது)

செஞ்சி - ஏகாம்பர முதலியாரவர்களால்

எழுதப்பட்டு,

மயிலை. திருவேங்கட முதலியாரிடம்

சர்வ சுதந்தரமும் பெற்று,

அ. முத்துவடிவேல் முதலியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1938

இதன் விலை] (Registered Copy Right) [அணா 12

ரிஜிஸ்டர் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்:— "ஜாதகசித்தி என்னும்அனுபோக சோதிடபிரம்மரஹஸ்யம்" என்னும் இந்நூலை ம-ள-ள-ஸ்ரீ செஞ்சி - ஏகாம்பர முதலியார் அவர்களால் எழுதி முடிவு பெற்றதை மயிலை - திருவேங்கட முதலியார் மேற்படியாருக்குப் பொருளுதவி புரிந்து சகல சுதந்தரமும்பெற்று அனுபவித்து வந்ததை அடியில் கையொப்பமிட்டுள்ள யான் ஷை மயிலை-திருவேங்கட முதலியாரிடம் கிரயத்திற்குப் பெற்றுக்கொண்டமையால் இந்நூலை என்னுடைய அனுமதியின்றி, யாவரும் எவ்விதத்தும் அச்சிடாவண்ணம் மகாகனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படி ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட்டது.

இப்படிக்கு,

அ. முத்துவடிவேல் முதலியார்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

46
133.5

அட்டவணை

பெயர்	பக்கம்
அ	
அரசர்களுடைய சப்தங்கள்	11
அயனம்-2	12
அயனங்களின் பலாபலன்	15
அஸ்தமான பலன்	63
அஸ்தமான நிவர்த்தி பலன்	63
அரிட்டம்	73
அமிசை	73
அங்கவீனம்	80
அலி	89
அற்பாயுசு	108
ஆ	
ஆறுமிடம்	37
ஆயுள்	75
ஆபரணங்கள்	81
ஆறும்பாவகம் வாழ்க்கை	89
இ	
இங்கிலீஷ் மாதங்கள்-12	12
இராகுகாலம்	14
இரவு	14
இரண்டாமிடம்	36
இராசி தத்துவங்கள்	40
இராசிகளுக்குரிய நாழிகை	48
இராகு-கேது	58
இராகு கேது சம்பந்தபலன்	62
இராசியாதிபதி வக்கிரித்த பலன்	62
இராசியாதிபனை குருபார்த்த பலன்	64
இராசியாதிபதி வக்கிரித்து நின்ற பலன்	65
இராசியாதிபனுக்கு திரிகோணங்களில் சுபர்நின்ற பலன்	65
இராசியர்திபதியும் சுபரும் திரிகோணத்தி லிருந்தபலன்	65
இராசியாதிபன் நவாங்கிசத்தின் நின்ற பலன்	68
இராகு	71
இரண்டாம் பாவகம் நேத்திரம்	76
இளையவர்	80
உ	
உதையத்தில் மதிசனி நின்ற பலன்	67
உதையத்தில் மதிகுரு நின்ற பலன்	67
உதையத்திற்கு 2-5-ல் சுபரிருக்கும் பலன்	67
உதையத்திற்கு 5-ல் சுபரும் பாபரும் நின்ற பலன்	67
உதையத்திற்கு 9-ல் பாபகிரகம் நின்ற பலன்	67
உதையத்திற்கு 8-ல் பாபரிருக்கும் பலன்	67
உதையாதிபதி ஆட்சி உச்சத்திலிருக்க வரும்பலன்	68
உபதேசம் முதலியது	104
ஊ	
ஊமை	77
எ	
எட்டாமிடம்	37
எந்த கிரகங்களேனும் உச்சத்தில் நின்ற பலன்	60
எந்த கிரகங்களேனும் நீசத்தில் நின்ற பலன்	60
எட்டாம் பாவகம் தீர்க்காயுசு	94
ஏ	
ஏழாமிடம்	37
ஏழாம் பாவகம் மனைவியின் ஜாதி	90

பெயர்	பக்கம்	பெயர்	பக்கம்
ஐ		கெ	
ஐந்தாமிடம்	37	கெண்டம்	89
ஐந்தாம் பாவகம்	86	கே	
ஒ		கேந்திரத்தில் சுபரும் பாபரு மிருக்கில் வரும்பலன்	68
ஒன்பதாமிடம்	38	கேது	72
ஒன்பதாம் பாவகம் பிதாவுக் கீனம்	101	கோ	
க		கோட்சாரமாருடம் பார்க்கும் விதம்	51
கரணங்கள்-11	14	கோட்சார மாருடபலன்	51
கரிநாள்	14	ச	
கரணங்களின் பலாபலன்	28	சப்தவருஷங்கள்	11
கடகம்	46	சந்திரன்	52
கன்னி	46	சனி	57
கர்மம்	79	சாஸ்திர உபாயங்களும் பார்வையின் பலனுமறிய	68
கலியாணம்	91	சந்திரன்	69
கணவனுக்கு முன்மரிப்பவள்	108	சனி	71
கன்னியஸ்திரீ	109	சந்தோஷம்	85
கா		சன்னியாசி	104
காது குத்தல்	31	சா	
கி		சாரம் அமைப்பு	74
கிரகங்கள்	15	சி	
கிரகங்களின் புத்திரர் அல்லது நாமதேயங்கள்	15	சிங்கம்	46
கிரகப்பிரவேசம்	30	சீ	
கிரகதிசை வருஷங்களும் அதற்குரிய நாமதேயங்களு முதலியன	34	சீமந்தம்	30
கிரகங்கள் ஒவ்வொரு ராசியிலும் சஞ்சரிக்கும் காலம்	35	சு	
கிரக துடர்ச்சியின் பலன்	39	சுபக்கிரகங்கள்	35
கிரகங்களின் நட்பு பகை	41	சுக்கிரன்	56
கிரக தத்துவங்கள்	42	சுபக்கிரக சம்பந்த பலன்	61
கிரகங்கள் 9-க்கும் நட்பு ஆட்சி பகை நீசம் அறியும்படி	45	சுபரும் பாபரு மிருந்தபலன்	64
		சுக்கிரன்	71
கு		சூ	
குளிகைகாலம்	14	சூரியன்	51
கும்பம்	47	சூரியன்	69
		செ	
		செவ்வாய்	69
		சென்மநட்சத்திரத்தில் 9-வது கிரகம் நின்ற லன்	66

பெயர்	பக்கம்
சென்மநட்சத்திரத்தில் சுபரும் பாபரும் நின்றபலன்	66
செவ்வாய்	53
சோ	
சோரம்	85
த	
தனுசு	47
தனவான்	78
தத்து புத்திரர்	88
தா	
தாய்க்கரிட்டம்	82
தாயின் வியாதி	84
தாயின் வயது	84
தி	
திதிகள்-15	13
திதிகளின் பலாபலன்	16
திரிகோணராசிகள்	35
திரேகாணபலன்	62
திரேகாண பங்கபலன்	64
தின்னும் சுவை	80
து	
துவாதசபாவகம் லக்கினம்	36
துலாம்	46
தொழில்	75
ந	
நட்சத்திரம்-27	13
நட்சத்திரன் பாதபலாபலன்	17
நட்சத்திரங்கள் நிற்கும் ராசிகள்	48
நட்சத்திரங்களைக்கொண்டு கணம் மிருகம் விருட்சம் பட்சிகள் அறியும் வகை	50
நவாங்கிசபலன்	69
நடத்தை	87
நாற்கருமம்	103
நடத்தை	109
நாமகரணம்	31
நான்காமிடம்	36
நாமநட்சத்திரயெழுத்துகள்	49

பெயர்	பக்கம்
நான்காம் பாவகம் மாதுருபலன் வாகன முதலியது	82
ப	
பட்சங்கள்-2	13
பத்தாமிடம்	38
பதினோராமிடம்	38
பனிரண்டாமிடம்	38
பத்தாம்பாவகம் தூர்க்கருமம்	103
பதினோராம்பாவகம் லாபம்	105
பனிரண்டாம்பாவகம் வாழ்வு	106
பதிவிரதை	109
பலருடன் சேர்பவள்	110
பா	
பாபக்கிரக சம்பந்த பலன்	61
பாக்கியம்	102
பாவி	107
பி	
பிள்ளை பிறக்குமிடம்	73
பிதாவுக்கு நலம்	101
பிதாவுக்கரிட்டம்	101
பு	
புணர்ச்சிநாள்	30
புதன்	54
புதன்	70
புத்திரர்	108
பெ	
பெண்கள்ஜாதகம் அழகு	107
பொ	
பொருள்சேர்க்கை	78
பொருளின் தொகை	79
பொருள் சேர்க்கை	82
பொன்முதலிய விரையம்	106
ம	
மயிர்கழித்தல்	31
மகரம்	47
மருவு	75
மணிவரும் திசை	93
மலடி	109

பெயர்	பக்கம்	பெயர்	பக்கம்
மா		யோகங்களறியும் சக்கரம்	32
மாதங்கள்-12	12	ரி	
மாதங்களுக்குரிய ராசிகள்	12	ரிஷபம்	45
மாதங்களின் பலாபலன்	29	ரு	
மாலை-கொடி	74	ருதுக்கள்-6	13
மாரகதிசை	95	ருதுக்களின் பலாபலன்	15
மாரககாரணமும் இடத்தையும்		வ	
நடத்தையும்	96	வருஷங்கள்-60	12
மி		வா	
மிதுனம்	45	வாரங்கள்-7	13
மீ		வாரங்களின் பலாபலன்	25
மீனம்	48	வாரசூலை	32
மு		வாலிபத்தில் அமங்கலையாவள்	110
முகவுரை விருத்தம்	9		
முக்கிய கவனிப்பு	30	வி	
முடிசூட்ட பகைதரிக்க	32	விநாயகர் காப்பு	11
முதல்பாவகம் பிள்ளையின்குறி	73	விவாகம்	30
முன்கால வயது	95	வித்தையாரம்பம்	31
மூ		விருச்சிகம்	47
மூன்றுமிடம்	38	வியாழம்	47, 55
மூன்றும்பாவகம் சகோதரர்	80	வியாழன்	70
மூத்தவர்	80	விதவை	108
மே		வீ	
மேஷம்	45	வீடுகள்	83
யு		வே	
யுகங்கள்	11	வேளை-3	14
யோ		வேளைகளின் பலாபலன்	28
யோகங்களின் பலாபலன்	26	ஸ்	
யோகங்கள்	13	ஸ்தானம்	39

அட்டவணை முற்றிற்று.

முகவுரை

விருத்தம்

ஆதியாஞ் சப்தரிஷி மார்களோடு
அருள்பூண்ட பதினெண்பேர் பாதம்போற்றி
சேதியாம் முத்தரொடு முனிவர்மூதோர்
செப்பரிய பெரியோர்கள் சுகத்தாள்போற்றி
நீதியாம் ரவியொடு மதியுந்தேவர்
நிலையான மூவருட னிணைகள்போற்றி
சோதிடபிரம்ம ரஹஸிய மின்னூலைச்
செஞ்சி யேகாம்பரமும் வெளியிட்டேனே.

வெளியிட்ட யின்னூலின் விளக்கங்கேளீர்
வெகுசூட்சம் பார்ப்பதற்கு வைத்தோர்க்கு
ஒளிவாகக் கண்ணாடிபோலே தோற்றும்
ஓதிடும்பல னனுபோக போகமாகுந்
தெளிவாக யாசானைத்தேடா வண்ணந்
திகழ்பெறவே ரகசியத்தை வெளியாய்ச்சொல்லும்
அளவாக யிதிற்கூறு மடவதான
அரும்பலனை சொல்லுகிறே னறியத்தானே.

அறியவே லக்கினஸ் புடங்களோடு
அடைவான கிரகபுட மறியுஞ்சீறும்
தெரியவேகஷ்ட ஜாதகங்கள் தம்மை
திடமாக கணிக்குமோர் திடத்தோடின்னம்
உறியவே துவாதசப் பலன்களோடு
உற்றதோர் கெண்டமாயுளின் நிச்சயம்
குறியவே யஷ்டவர்க்கமா மின்னம்
கூறிடுங் காலசக்கரங்க ளாமே.

ஆமெனவே லக்கினமே அறியும் வாறும்
அதுவே நிச்சயமென்று தெரியும்நேரும்
காமெனுமோர் ஜாதகத்தின் காணமைப்பும்
கதிரவ னுதையங்கண்டு பிடிக்குஞ்சீறும்
தாமென இராசிகளில் நவக்கோள் தானுந்
தானின்று பலாபலன்கள் தருகுக்கூறும்
நாமெனவே வருந்திசையும் புத்தியந்திரம்
நன்றாகப் பிரிக்கும்வகை யறிந்துகேளே.

கேளப்பா திசையதனிற் புத்தியந்திரம்
கெணிதமுள சூட்சுமமாம் பிராணமோடு
நாளப்பா இவைகட்குப் பலாபலன்கள்
நடக்கும்வாறறிந்துமே யுரைக்கும் நேரும்
கேளப்பா யொன்றிரண்டு மூன்றுநான்கு
கூறுமைந்தாரேழு கூடும்பலன்கள்
ஆளப்பா யறிந்துமே சொல்லநன்றாய்
அருமையாய் காண்டம்ரண் டச்சிட்டேனே.

அச்சிட்ட யிவ்வாறு காண்டந்தன்னை
அருமையாய்த் தேடியே யவனியோர்கள்
உச்சிட்ட மாயொரு முறைதானப்பா
உசிதமுட ஜோதியே யுணர்ந்தபேர்கள்
இச்சிட்டமாய்ச் சிறியோர் பெரியோரேனும்
என்சொல்வேன் சோதிடர்க ளாவாரப்பா
தச்சிட்ட கணிதமதை எவர்க்குஞ்சொல்லி
காசினியில் புகழ்பெற்று வாழ்வார்பாரே.

பாரப்பா முதற்காண்ட மிரண்டாங்காண்டம்
பண்பாக யிவைகளிலே கூறுகின்ற
சீரப்பா சீர்பலனைக் கண்ணுற்றேதான்
செப்பிய யிவைகள் தனை வரிசையாக
நேரப்பா தேடியே படித்தபேர்கள்
நீணிலத்தில் வேறுநூலைத் தேடாரப்பா
காரப்பா கணிதநூல் ரஹஸ்யத்தைக்
காண்பதற்கு யின்னூலே காட்சியாமே.

உ

கடவுள் துணை

ஜாதகசித்தி என்னும்
அனுபோக சோதிட
பிரம்மரஹஸ்யம்

(முதற்காண்டம்)

விநாயகர் காப்பு

வெண்பா

அனுபோக சோதிடமா மருள்பிரம்ம ரகசியத்தை
மனுவெனுஞ்சீர் மாந்தர்கண்டு மகிழ்ந்திடவே—இனமாக்
கங்கையொடு பிறைபணிந்த கயிலைவாழ் பரமனருள்
மங்கள விநாயகன்றுள் வாழ்த்து.

யுகங்கள்-4

கிரேதாவுக்கு 17,28,000
திரேதாவுக்கு 12,96,000
துவாபரவுக்கு 8,64,000
கலிவுக்கு 4,32,000

சப்தவருஷங்கள்-7

பாரதம்	ரம்மியம்
கிம்புரு	ஜாணவிதம்
அரி	குரு
இளாவிரதம்	

அரசர்களுடைய சப்தங்கள்

பாண்டவம்	கேரலா
சாலிவாகன சகாப்தம்	ராமதே
விக்கிரமாதி	பிரதாபருத்தி
போஜராஜ	கிருஷ்ணரா

வருஷங்கள்-60

பிரபவ	சர்வசித்து	பிலவங்க
விபவ	சர்வதாரி	கீலக
சுக்கில	விரோதி	சௌமிய
பிரமோதூத	விக்குருதி	சாதாரண
பிரசோத்பத்தி	கர	விரோதிகிருது
ஆங்கீரச	நந்தன	பரீதாபி
ஸ்ரீமுக	விஜய	பிரமாதீச
பவ	ஜய	ஆனந்த
யுவ	மன்மத	இராட்சச
தாது	துன்முகி	நள
ஈஸ்வர	ஏவிளம்பி	பிங்கள
வெகுதானிய	விளம்பி	காளயுக்தி
பிரமாதி	விகாரி	சித்தாத்திரி
விக்கிரம	சார்வரி	ரௌத்திரி
விஷு	பிலவ	துன்மதி
சித்திரபானு	சுபகிருது	துந்துபி
சுபானு	சோபகிருது	ருத்திரோத்காரி
தாரண	குரோதி	இரத்தாட்சி
பார்த்திப	விசுவாவசு	குரோதன
விய	பராபவ	அட்சய

மாதங்கள்-12

சித்திரை	ஆவணி	மார்கழி
வைகாசி	புரட்டாசி	தை
ஆனி	ஐப்பசி	மாசி
ஆடி	கார்த்திகை	பங்குனி

மாதங்களுக்குரிய ராசிகள்-12

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.

இங்கிலீஷ் மாதங்கள்-12

ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர்.

அயனம்-2

உத்தராயணம் ஆடி முதல்-6
தட்சணாயணம் தைமீ முதல்-6

ருதுக்கள்-6

வசந்தருது	சித்திரை	வைகாசி
வருஷருது	ஆவணி	புரட்டாசி
ஏமந்தருது	மார்கழி	தை
கிரீஷ்மருது	ஆனி	ஆடி
சரருது	ஐப்பசி	கார்த்திகை
சசிருது	மாசி	பங்குனி

திதிகள்-15

பிரதமை, துதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி சஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி அல்லது அமாவாசை.

நட்சத்திரங்கள்-27

அசுவணி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம் திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி.

நட்சத்திர அதிதேவதைகள்

சரஸ்வதி, துர்க்கை, அக்கினி, பிரமன், சந்திரன், பரமசிவன், அதிதி, குரு, ஆதிசேஷன், சுக்கிரன், பார்வதி, சூரியன், சாத்தா, விஸ்வகர்மா, வாயுவு, குமரன், இலக்குமி, இந்திரன், அசுரர், வருணன், கணபதி, விஷ்ணு, வசுக்கள், இயமன், குபேரன், காமதேனு, சனி.

வாரங்கள்-7

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி.

பட்சங்கள்-2

சுக்லம் அல்லது பூர்வம், கிருஷ்ணம் அல்லது அமரம்.

யோகங்கள்-27

விஷ்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம் அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாமம், அரிஷ்ணம், வச்சிரம், சிரத்தி, விதிபாதம், வரியான், பரீகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரமம், பிரமம், மாகேந்திரம், வைதிருதி.

கரணங்கள்-11

பவம், பாலவம், கௌலவம், தைதுலே, கரசை, வணிசை, பத்திரம், சகுனி, சதுஷ்பாதம், நாகவம், கிமிஸ்துக்கினம்.

வேளே-3

சாத்விகம், இராஜசம், தாமசம்.

இராகு காலம்

ஞாயிறு	$4\frac{1}{2}$-முதல்	6 - மணிவரை
திங்கள்	$7\frac{1}{2}$-முதல்	9 - மணிவரை
செவ்வாய்	3 - முதல்	$4\frac{1}{2}$-மணிவரை
புதன்	12-முதல்	$1\frac{1}{2}$-மணிவரை
வியாழம்	$1\frac{1}{2}$-முதல்	3 - மணிவரை
வெள்ளி	$10\frac{1}{2}$-முதல்	12-மணிவரை
சனி	9 - முதல்	$10\frac{1}{2}$-மணிவரை

குளிகை காலம்

ஞாயிறு	3 - முதல்	$4\frac{1}{2}$-வரை
திங்கள்	$1\frac{1}{2}$-முதல்	3 - வரை
செவ்வாய்	12-முதல்	$1\frac{1}{2}$-வரை
புதன்	$10\frac{1}{2}$-முதல்	12-வரை
வியாழம்	9 - முதல்	$10\frac{1}{2}$-வரை
வெள்ளி	$7\frac{1}{2}$-முதல்	9 - வரை
சனி	6 - முதல்	$7\frac{1}{2}$-வரை

இரவு

ஞாயிறு	9-முதல்	$10\frac{1}{2}$-வரை
திங்கள்	$7\frac{1}{2}$-முதல்	9-வரை
செவ்வாய்	6-முதல்	$7\frac{1}{2}$-வரை
புதன்	3-முதல்	$4\frac{1}{2}$-வரை
வியாழம்	$1\frac{1}{2}$-முதல்	3-வரை
வெள்ளி	12-முதல்	$1\frac{1}{2}$-வரை
சனி	$10\frac{1}{2}$-முதல்	12-வரை

கரிநாள்

சித்திரைமீ	6-15	ஐப்பசிமீ	6
வைகாசி	7-16-17	கார்த்திகை முன்திங்கள்	1-10-7
ஆனி	1-6	மார்கழி	6-9-11
ஆடி	2-10-20	தை	15-16-19
ஆவணி	2-9-28	மாசி	15-16-17.
புரட்டாசி	16-29	பங்குனி	6-15-19

கிரகங்கள்-9

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது.

கிரகங்களின் புத்திராள்

அல்லது குளிகாதியர் நாம தேயங்கள்

காலன், அஸ்தபிரகரன், எமகண்டன், துன்மதனன், தூமகேது, இந்திரதனுசு, குளிகன், பரிவேடன், விதிபாதன்.

அயனங்களின் பலாபலன்

உத்தராயணத்திற் பிறந்தவன் சண்டைசெய்யப் பிரியமுடையவன், கெலிப்புடையவன், சுத்தமுடையவன், ஞானசாஸ்திரம் படிப்பவன் என்றறிக.

தட்சணாயனத்திற் பிறந்தவன் யாவரும் புகழும்படியான நல்ல நடத்தையுடையவன், இரக்கமுடையவன், வேதசாஸ்திரங்கள் படிக்கப்பிரியமுடையவன், சன்னியாசியைப்போல் திரிபவன், ஞானியாவான் என்றறிக.

ருதுக்களின் பலாபலன்

வசந்தருதுவில் பிறந்தவன் அலங்காரப்பிரியன், பொருளுடையவன், பலகாரவகைகள் அதிகமாகப் புசிப்பவன், தீர்க்காயுசுடையவன், பாலின்மேல் பிரியமுடையவன் என்றறிக.

கிருஷ்மருதுவிற் பிறந்தவன் நாம்பன், சலப்பிரியன், யோக்கியன், நற்குணமுடையவன், சாமார்த்தியமான வார்த்தைகள் பேசப் பிரியமுடையவன் என்றறிக.

வருஷருதுவிற் பிறந்தவன் நாகரீகமுடையவன், உவர்ப்பான வஸ்துக்களைத் தின்பவன், நல்லோர்களிடத்தில் வாசம் செய்பவன் என்றறிக.

சாருதுவிற் பிறந்தவன் ரம்மியமான முலையுடையவன், மாதர்களை விரும்புவான், சம்பாத்தியமுடையவன், பெருமையுடையவன், நல்ல அந்தஸ்துடையவன் என்றறிக.

ஏமந்தருதுவிற் பிறந்தவன் நுட்பமானதேகி, அழகுடைய மாதர்களை விரும்புவான், பிறத்தியாருக்கு உபகாரம் செய்யப் பிரியமுடையவன், கனவான் என்றறிக.

சசிருதுவிற் பிறந்தவன் சலத்தின்மேல் பிரியமுடையவன், நல்ல நடக்கை யுடையவன், புண்ணியன், கீர்த்தியுடையவன், தைரிய சாலி என்றறிக.

திதிகளின் பலாபலன்

பிரதமையிற் பிறந்தவன் யாதொரு காரியங்களையும் யோசித்துச் செய்யும் புத்தியுடையவன், சந்தோஷமான காரியங்களில் பிரிய முடையவன் தனவந்தனாக யிருப்பன் என்றறிக.

துதியையிற் பிறந்தவன் பொய்சொல்லாதவன், புகழுடையவன், சொன்னவாக்குப் பிசகாதவன், தன்னுடைய இனத்தாரை ரட்சிப் பவன், பொருள்சேர்ப்பவன் என்றறிக.

திரிதியையிற் பிறந்தவன் பயமுள்ளவன், சுத்தமுடையவன், யோசித்ததை முடிப்பவன், பிரபு, பலமுடையவன், ஆலயங்களைப் பற்றிய தர்மம் செய்யப் பிரியமுடையவன் என்றறிக.

சதுர்த்தியிற் பிறந்தவன் பலபேர்களுடைய சிநேகிதமுடைய வன், எண்ணக் கூடாத காரியஞ்செய்பவன், அநேக தேசசஞ்சாரி என்றறிக.

பஞ்சமியிற் பிறந்தவன் துக்கமுடையவன், வேதங்களைத்தேடி ஆராய்பவன், நுட்பதேகி, மாதர்கள்மே லிச்சையுடையவன், காமி யாகுவன் என்றறிக.

சஷ்டியிற் பிறந்தவன் மெலிந்தவன், பிரபு பிரபுக்களால் விரும் புவன், முன்கோபியாவான் என்றறிக.

சப்தமியிற் பிறந்தவன் பலமுடையவன், பிரபு தயாளமுடைய வன், கண்டிதமுடையவன், கூடியரோகவான் எனவறிக.

அஷ்டமியிற் பிறந்தவன் இலட்சுமிகடாட்சமுடையவன், கூடிய ரோகவான், அநேகபுத்திரர் உடையவன், பிறவிச்செல்வன், காமுகன் எனவறிக.

நவமியிற் பிறந்தவன் எங்கும் பெயரெடுப்பான், ஸ்தூலதேகி, பெண்சாதி பிள்ளைகளை விரும்பாதவன், அநேக மாதர்களை சேர்ந்து வசிப்பவன் என்றறிக.

தசமியிற் பிறந்தவன் தர்மஞ்செய்யப் பிரியமுடையவன், சீல முடையவன் யோக்கியன் எனவறிக.

ஏகாதசியிற் பிறந்தவன் குருவின்மேல் பிரியமுடையவன், தன முடையவன், நீதிமான், நேர்த்தியானதைச் செய்பவன் எனவறிக.

துவாதசியிற் பிறந்தவன் தர்மஞ்செய்யப் பிரியமுடையவன், சீல முடையவன், தனவான், நூதனமான காரியங்கள் செய்பவன் எனவறிக.

திரையோதசியிற் பிறந்தவன் தனமுடையவன், இனத்தாரில்லாதபாவி, லோபி, மாந்திரீகப் பெருமையுடையவன் எனவறிக.

சதுர்த்தசியிற் பிறந்தவன் பிறர்களுடைய பொருளை அபகரிப்பவன், குரோதமுடையவன், பிறர்களை தூஷணிப்பவன் கோபியாம் எனவறிக.

பௌர்ணமியிற் பிறந்தவன் வித்தை புத்தி அதிகமுடையவன், பொறுமையுடையவன், தயாளமுடையவன் வாக்குப் பிசகாதவன், களங்கமில்லாதவன், உக்கிரமுள்ளவன், தெய்வங்களை ஆராதிப்பவன், மந்திரத்தால் பிறர்களைக் கொல்பவன் எனவறிக.

நட்சத்திரத்தின் பாதப் பலா பலன்கள்

(அசுவனி) முதற்பாதத்திற் பிறந்தவன் இலட்சுமிகடாட்சமுடையவன், தனமுடையவன், தன்னுடைய புத்தியினுல் கீர்த்தி பெறுகுவன் எனவறிக.

அசுவனி இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் ஞானசாஸ்திரம் சோதிடமிவைகளில் சண்டைசெய்பவன், டம்பனுக்த்திரிகுவன் எனவறிக.

அசுவனி மூன்றும்பாதத்திற் பிறந்தவன் மூலரோகமுடையவன், நன்மையான காரியங்கள் செய்ய விருப்பமுள்ளவன், புத்திவான் எனவறிக.

அசுவனி நான்காம்பாதத்திற் பிறந்தவன் புத்தியும் வித்தையுமுடையவன், சோதிடசாஸ்திர மறிகுவன் எனவறிக.

(பரணி) முதற்பாதத்திற் பிறந்தவன் நற்குணமுடையவன், காத்திரமானதேகி, ஆங்காரி, காமுகன், நன்றியை யோசிப்பவன் எனவறிக.

பரணி இரண்டாம்பாதத்திற் பிறந்தவன், எதிரியை ஜெயிப்பன், நற்குணமுடையவன், சகலதிறமையுமுடையவன், கோபியாம் எனவறிக.

பரணி மூன்றும்பாதத்திற் பிறந்தவன் சந்தோஷமுடையவன், உருண்டகண்ணன், மாநிறமுடையவன் எனவறிக.

பரணி நான்காம்பாதத்திற் பிறந்தவன், தூலதேகி, முன்கோபி, அரசர்களிடத்தில் சேவகம் செய்குவான் எனவறிக.

(கார்த்திகை) முதற்பாதத்திற் பிறந்தவன் கோபி, படிப்பில்லாதவன், வாயாடி, தனவான், பொய்பேசுவன் இரசவாதன் எனவறிக.

கார்த்திகை இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் சகலகலையு முணர்ந்த வித்துவான், மூர்க்கமுடையவன், கெட்டநடத்தை நடப்பவன், படிப்புள்ளவன் எனவறிக.

கார்த்திகை மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் துஷ்டமாதர்களுடைய சாவகாசமுடையவன், புத்தியில்லாதவன், பொல்லாங்கு செய்பவன் எனவறிக.

கார்த்திகை நான்காம்பாதத்திற் பிறந்தவன் கல்வியறியாதவன், மிடியன், மனஸ்தாபமுள்ளவன், துக்கி, ரோகவான் எனவறிக.

(உரோகணி) முதற்பாதத்திற் பிறந்தவன் ஸ்திரீகளின்மேல் விருப்பமுடையவன், பிரபுக்களின் நேசமுடையவன், தத்துவஞானி, வாக்குப் பிசகாதவன் எனவறிக.

உரோகணி இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் முன்கோபமுடையவன், அபிமானி, மாந்திரீகசாஸ்திரி, ஸ்திரீகளின் பிரியமுடையவன் எனவறிக.

உரோகணி மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் சங்கீதவித்தையிற் பிரியன், கணிதவித்தை கற்பான், பஞ்சகாவியங்களு மறிகுவான் எனவறிக.

உரோகணி நான்காம்பாதத்திற் பிறந்தவன் தத்துவம் பேசுவான், பிறர்களுடைய உடமைக்கு ஆசைப்படுகுவன், மாதர்களுக்கு இஷ்டலோலன் எனவறிக.

(மிருகசீரிடம்) முதற்பாதத்தில் பிறந்தவன் புத்திசாலி, கட்டிசரக்குள்ளதேகி, பலதேசசஞ்சாரி, அழகுடையவன் எனவறிக.

மிருகசீரிடம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் முன்கோபமுடையவன், சத்தியவான், புத்திசாலி, சகல திறமையுமுடையவன் எனவறிக.

மிருகசீரிடம் மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் உதாரணமுடையவன், சாது, சந்தோஷி, புத்திவான் எனவறிக.

மிருகசீரிடம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் புத்தியுடையவன், சத்தியவான், சாது, காமி வீரமுடையவன் எனவறிக.

(திருவாதிரை) முதற்பாதத்திற் பிறந்தவன் பராக்கிரமசாலி, புண்ணியவான், சிநேகிதப்பிரியன், பொருளைக் காப்பாற்றுபவன், முன்கோபமுடையவன் எனவறிக.

திருவாதிரை இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் நற்குணமுடையவன், கோபி, பந்துக்கள் பகையுடையவன் எனவறிக.

திருவாதிரை மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் ரோகமுடைய வன், கிருபையில்லாதவன், கோளன், மாதர்களுக்கு இனிமை இல்லாதவன் எனவறிக.

திருவாதிரை நான்காம்பாதத்திற் பிறந்தவன், உறவினர்களுக்குப் பகையுடையவன், ஈனமான மனத்தன் எனவறிக.

(புனர்பூசம்) முதற்பாதத்திற் பிறந்தவன் செல்வமுடையவன், ஆசையுடையவன், பிரபல்லிய வித்துவானாகுவன், பித்ததேகி, மனதிட மில்லாதவன், மர்மியெனவறிக.

புனர்பூசம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் டப்பன், அனுசாரம், பெருத்த வியாதியுடையவன், திறமைசாலி யெனவறிக.

புனர்பூசம் மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் குஷ்டரோகமுடையவன், அலைச்சலுடையவன், காரியக்களறிகுவான், தீர்க்கவயதுள்ளவன் எனவறிக.

புனர்பூசம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் நன்றிமறவாதவன், குள்ளன், அழகுடையவன், பார்வை லட்சண முடையவன் எனவறிக.

(பூசம்) முதற்பாதத்திற் பிறந்தவன் தெய்வபத்தியுடையவன், பிரபுக்களின் நேசமுடையவன், கனவான், மாயவிந்தைக்காரன், தாய் தந்தையர்மேல் பிரியமுடையவன், தர்மகுணமுடையவன் எனவறிக.

பூசம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் பிரபு, புத்திசாலி, சண்டைபோடுபவன், ஸ்திரீபோகன் எனவறிக.

பூசம் மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் இனப்பிரியன், புத்தியுடையவன், ஞானவான், சந்தோஷமுடையவன், நினைத்தகாரியம் முடிப்பவன் எனவறிக.

பூசம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் குரோதமுடையவன், சண்டையுடையவன், கோபி, மாதர்கள்பிரியன் எனவறிக.

(ஆயிலியம்) முதற்பாதத்திற் பிறந்தவன் பலதை புசிப்பவன், ஆழியன், நெஞ்சாங்காரி, கோபி, விவேகி, துன்மார்க்கன் எனவறிக.

ஆயிலியம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் முன்கோபமுடையவன், துஷ்டன், நியாயம் பேசப் பிரியமுடையவன், பெருமையான கண்களுடையவன் எனவறிக.

ஆயிலியம் மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் நன்றியல்லாதவன், கோபி, மாதர்களை வதைப்பான், ஆலசியமுடையவன் எனவறிக.

ஆயிலியம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் கொலைபுரிபவன் பொன் நாசமுடையவன், புலைச்சியைச் சேர்பவன் எனவறிக.

(மகம்) முதற்பாதத்திற் பிறந்தவன் தர்மசிந்தனை உடையவன், அபிமானி, சாஸ்திரம்படித்த பண்டிதன், கனவான், அழகுடையவன் எனவறிக.

மகம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் விவேகமுடையவன், செலவு அதிகமுடையவன், ரோகமுடையவன், பரிசுத்தமுடையவன் எனவறிக.

மகம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் பலவான், நோயுடையவன், சாது ஆசையுடையவன் எனவறிக.

மகம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் சீலமுடையவன், மாதர்களுடைய பேச்சைக்கேட்பான், சிரங்குநோயுடையவன், துர்வாசன் எனவறிக.

(பூரம்) முதற்பாதத்திற் பிறந்தவன் கெட்ட நடத்தையுடையவன், புத்தியுடையவன், ஸ்திரீகளின்மேல் பிரியமுடையவன், வாயாடியாம் என்றறிக.

பூரம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் வர்த்தகம் செய்குவன், கவலையுடையவன், மேன்மையுடையவன், துஷ்டன் எனவறிக.

பூரம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் கீர்த்தியுடையவன், குணவான், மேன்பாட்டுடையவன் எனவறிக.

பூரம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் துக்கமுடையவன், வடிவுள்ளவன், நிந்தையான காரியங்களைப் புரிவான், தேவதூஷணை புரிவான் எனவறிக.

(உத்திரம்) முதற்பாதத்திற் பிறந்தவன் நற்குணன் யோக்கியமான நடத்தையுடையவன், யோகவான், அபிமானி, பிறர்செய்த நன்றியை மறவாதவன் எனவறிக.

உத்திரம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் தைரியசாலி, பிச்சையெடுப்பவன், டம்பன், அலட்சியமுடையவன் எனவறிக.

உத்திரம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் வாக்கு பிசகாதவன், பிலுக்கன், நாய்களைமேய்த்துத் திரிபவன் எனவறிக.

உத்திரம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் நன்றி மறவாதவன், ஒருவரையும் மதியாதவன், தூஷணமான வார்த்தைகள் பேசுவான் எனவறிக.

(அஸ்தம்) முதற்பாதத்திற் பிறந்தவன் பண்டிதன், பொன் னுபரணமணிகுவான், ஐஸ்வரியமுடையவன், நல்ல வார்த்தையைப் புகல்பவன், நல்ல காரியங்களைச் செய்பவன் எனவறிக.

அஸ்தம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் ஆங்காரி, வாயாடி தந்தையைச் சிறுவயதில் இழப்பவன், சந்துஷ்டியுடையவன் எனவறிக.

அஸ்தம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் தந்தரோகி, வியாபாரி, ஸ்திரீகள்போல மனமுடையவன் எனவறிக.

அஸ்தம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் நற்குணமுடையவன், ஈகையுடையவன், நெடியோன், சந்தோஷமுடையவன், அன்னைக் கினியவன், கூத்தியாளன் எனவறிக.

(சித்திரை) முதற்பாதத்திற் பிறந்தவன் தன்காரியம் முடிப் பவன், துரிதமாய் நடப்பவன், மர்மி, வயிற்றிலும் முகத்திலும் மச்சமுடையவன் எனவறிக.

சித்திரை இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் தேசங்களில் சஞ்சாரஞ் செய்குவான், தரித்திரன், வித்துவான், சத்துருசிநேகி யாம் எனவறிக.

சித்திரை மூன்றும்பாதத்திற் பிறந்தவன் கீர்த்திமான், பராக் கிரமசாலி, வித்துவான், ஞானி, நன்னடையுடையவன், அறிவுடைய வன் எனவறிக.

சித்திரை நான்காம்பாதத்திற் பிறந்தவன் பகைவர்களை வணங்கு வான், புத்திமான், ஜெயமுடையவன் எனவறிக.

(சுவாதி) முதற்பாதத்திற் பிறந்தவன் மெய்வார்த்தையுடைய வன், தெய்வத்தை மறவாதவன் எனவறிக.

சுவாதி இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் ஆலோசனையுடைய வன், போகமுடையவன், நேத்திரவியாதியுடையவன், முன்கோபி யாம் எனவறிக.

சுவாதி மூன்றும்பாதத்திற் பிறந்தவன், வெற்றியுடையவன், நன்னடக்கை யில்லாதவன், கலகப்பிரியன், குரூரன் எனவறிக.

சுவாதி நான்காம்பாதத்திற் பிறந்தவன், சொல்திறமையுடைய வன், முன்கோபி, துர்ச்சனர் சவகாசமுடையவன், சீலமுடையவன், காமி சோரனும் எனவறிக.

(விசாகம்) முதற்பாதத்திற் பிறந்தவன் பாட்டுகள் பாடுவான், வஞ்சகமுடையவன், பரிகாசப்பிரியன், புத்திசாலி, நடினவிருப்ப முடையவன் எனவறிக.

விசாகம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் சாஸ்திரமறிபவன், தன்னையே புகழ்பவன், தந்திரவாதி, விசேஷபுத்திசாலி எனவறிக.

விசாகம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் பலவான், சோரன் குள்ளன், யாதுகாரியமுமறிபவன், பரஸ்திரீமேல் இச்சையுடையவன் எனவறிக.

விசாகம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் புத்தியுடையவன், யோகி, தனமுடையவன், ஞானி, தாரம் ஒன்றுடையவன், அழகுடையவன், நெடியனும் எனவறிக.

(அனுஷம்) முதற்பாதத்திற் பிறந்தவன் சுகமுடையவன், பந்துக்களை ரட்சிப்பவன், பிறஸ்திரீகளின்மேல் விருப்பமுடையவன், வாக்கு நாணயமுடையவன் எனவறிக.

அனுஷம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் பெருந்தன்மையுடையவன், வாத்தியப்பிரியன், விசேஷமான புத்தியுடையவன், கெட்டவாக்குடையவன் எனவறிக.

அனுஷம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் மேன்பாடுடையவன், தர்மசிந்தையுடையவன், பரதேசசஞ்சாரன், மிருதுவான வாக்குடையவன் எனவறிக.

அனுஷம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் நல்லவர்களாலே பூசிதம்பெற்றிருப்பன், சந்ததி அற்பமுடையவன் எனவறிக.

(கேட்டை) முதற்பாதத்திற் பிறந்தவன் தைரியமுள்ளவன், அன்னியஸ்திரீகளைப் புணர்பவன், பிரபு, தர்மஞ்செய்பவன் எனவறிக.

கேட்டை இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் யாதொருகாரியங்களை நன்றுய் யோசித்துச்செய்பவன், கிண்டல்காரன், முன்கோபியாம் எனவறிக.

கேட்டை மூன்றும்பாதத்திற் பிறந்தவன் நேத்திரரோகமுடையவன், பசுக்களுடையவன், கலகப்பிரியன், வீண்புத்தி யுடையவன், பிறருடைய காரியத்தைத் தன்னுடைதென்று செய்பவன், சாதுவாம் எனவறிக.

கேட்டை நான்காம்பாதத்திற் பிறந்தவன் கலகப்பிரியன், முன்கோபி, வஞ்சகநினைவுடையவன், குரூரமேபுரிகுவன், குலத்தினுடைய மேன்மையைக் கூறுவான், கெட்டநடையுடையவன் எனவறிக.

(மூலம்) முதற்பாதத்திற் பிறந்தவன் பிறர்கள் செய்தநன்றியை நினையாதவன், பாவி, வாயாடி, தனவான், சோம்பலில்லாதவன் எனவறிக.

மூலம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் ரோகமுடையவன், விவேகமுடையவன், மாந்திரீகன், இயானி எனவறிக.

மூலம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் பில்லி சூனியமறிபவன், சோம்பலுடையவன், காமி, கனிவர்க்கங்களின்மேற் பிரியமுடையவனும் எனவறிக.

மூலம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் பலமுடையவன், நிபுணன், சாது, கோபமேயில்லாதவன், ஞானி, சத்துருக்களை அடக்குவான் எனவறிக.

(பூராடம்) முதற்பாதத்திற் பிறந்தவன் புத்திவிதாரணமுடையவன், சுகவான், நீண்டக்கையன், பிறர்களுக்கு உபசாரம் செய்குவான், வணக்கமுடையவன் எனவறிக.

பூராடம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் தவசி, தாயைச் சிறுவயதில் இழந்துவிடுவான், திருடனும் எனவறிக.

பூராடம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் சுகவான், பாக்கியவான், பிணியுடையவன், குணமுடையவன் எனவறிக.

பூராடம் நான்காம்பாதத்திற்பிறந்தவன் முதுகுநோயுடையவன், திருடன், வாதவான், பலவான், சிறுவயதில் மறிப்பன் எனவறிக.

(உத்திராடம்) முதற்பாதத்திற் பிறந்தவன் கீர்த்தியுடையவன், பொறுமையுடையவன், சுகவான், புண்ணியவான், கல்வியின்மேல் பிரியமுடையவன், தனவான் எனவறிக.

உத்திராடம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் சகலசாஸ்திரமும் அறிபவன், பிரசங்கி, மனக்கிலேசமுடையவன், நூதன காரியஞ் செய்பவன் எனவறிக.

உத்திராடம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் கெர்வி, பெருத்த மொழியுடையவன், குரூரன், கலங்கமுடைய மனத்தன், முன் கோபியாம் எனவறிக.

உத்திராடம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் வீரமுடையவன், நல்லகாரியங்களை முடிப்பவன், வியாபாரி, பந்துஜனங்களின்மேல் பட்சமுடையவன் எனவறிக.

(திருவோணம்) முதற்பாதத்திற் பிறந்தவன் தர்மமுடையவன், தெய்வசிநேகி, குரு இனத்தார் நேசமுடையவன் எனவறிக.

திருவோணம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் புத்திசாலி, காமி, தனவான் தானதருமம் செய்யவிருப்பமுடையவன் எனவறிக.

திருவோணம் மூன்றும்பாதத்திற் பிறந்தவன் ரோகவான், பொதுதனமுடையவன், தயவில்லாதவன் எனவறிக.

திருவோணம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் வேசையர்மீது விருப்பமுடையவன், தருமவான், தியாகி, சிறப்புடையவன், தன முடையவன் எனவறிக.

(அவிட்டம்) முதற்பாதத்திற் பிறந்தவன் தனவான், பூமியாசை யுடையவன், சுகவான், தொடைபெருத்தவன் எனவறிக.

அவிட்டம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் சஞ்சலமுடை யவன், தரித்திரன், பாரியகுணமுடையவன், ஆங்காரி எனவறிக.

அவிட்டம் மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் நற்குணமுடை யவன், குறுகியதேகி, திடமுடையவன், அபிமானி, நல்ல நடை யுடையவனுகும் எனவறிக.

அவிட்டம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் தனவான், தூல தேகி, கோபி, உரோம அழகுடையவன் எனவறிக.

(சதயம்) முதற்பாதத்திற் பிறந்தவன் அதிக புக்தியுடையவன், பொறுமையுடையவன், அற்பமாய்ப் புசிப்பவன், நன்னடத்தை யுடையவன் எனவறிக.

சதையம் இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் நற்குணமுடைய வன், கோபி, கொண்டதை முடிப்பவன், நல்லவன் எனவறிக.

சதையம் மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் பசியுடையவன், வயிற்றுநோயுடையவன், சேவகாவிருத்தியுடையவன் எனவறிக.

சதையம் நான்காம்பாதத்திற் பிறந்தவன் யாதொரு காரியத்தை யும் யோசிப்பவன், எடுத்தகாரியத்தை முடிப்பவன், நல்லவன், சுக வான் எனவறிக.

(பூரட்டாதி) முதற்பாதத்திற் பிறந்தவன் திருடன், கபடன், பயமானவனைப்போல் நடிப்பவன் எனவறிக.

பூரட்டாதி இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் பெண்சாதிமேல் இஷ்டமுடையவன், மந்திரவாதி, பயித்தியம், பிரபுசிநேகமுடைய வன் எனவறிக.

பூரட்டாதி மூன்றாம்பாதத்திற் பிறந்தவன் நல்ல நடையுடைய வன், புலவன், பிறர்மனையில் போஜனம் செய்யப் பிரியமுடைய வன், பித்தரோகியாம் எனவறிக.

பூரட்டாதி நான்காம்பாதத்திற் பிறந்தவன் சத்தியவாக்குடை யவன், புகழுடையவன், அழகுடையவன், சிநேகிதப்பிரியமுடைய வன், கைத்தொழில் புரிபவன் எனவறிக.

(உத்திரட்டாதி) முதற்பாதத்திற் பிறந்தவன் அதிகதனவான், பண்டிதன், சீலமுடையவன், அன்போடு பேசுபவன் எனவறிக.

உத்திரட்டாதி இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் வியாகூல முடையவன், நற்குணமுடையவன், முன்கோபி, கெட்டவிஷய சிநேகமுடையவன் எனவறிக.

உத்திரட்டாதி மூன்றும்பாதத்திற் பிறந்தவன் புத்தியில்லாதவன், முன்கோபி சந்தோஷி, செம்மைமயிரான், கோள்சொல்பவன் எனவறிக.

உத்திரட்டாதி நான்காம்பாதத்திற் பிறந்தவன் கெட்டவார்த்தைகளைக் கேட்பவன், உதாரகுணமுடையவன், பயிர்த்தொழில் புரிபவன், முன்கோபி, கிலேசமுடையவன் எனவறிக.

(இரேவதி) முதற்பாதத்திற் பிறந்தவன் நிலையான புத்தியுடையவன், சுந்தரன், பெண்சாதியின்மேல் பிரியமுடையவன், தேகத்தில் மருவுடையவன் எனவறிக.

இரேவதி இரண்டாம்பாதத்திற் பிறந்தவன் கலகப்பிரியன், திருடன், எளிமையுடையவன், தன்னைத்தானே புகழ்பவன் எனவறிக.

இரேவதி மூன்றும்பாதத்திற் பிறந்தவன் பாபி, தனமில்லாதவன், உதாரகுணமுடையவன், நற்குணமில்லாதவன் எனவறிக.

இரேவதி நான்காம்பாதத்திற் பிறந்தவன் நானெனும் ஆண்மையுடைய தீரவான், சத்தியவாக்குடையவன், குலக்கேடன், சுகமுடையவன், சத்துருசங்காரி எனவறிக.

வாரங்களின் பலாபலன்

ஞாயிற்றுக்கிழமையிற் பிறந்தவன் அழகுடையவன், தனவான், சிகப்புநேத்திரன், யாவையும் அலட்சியம் செய்பவன் எனவறிக.

திங்கட்கிழமையிற் பிறந்தவன் அபிமானி, தர்மவான், கீர்த்தியுடையவன் எனவறிக.

செவ்வாய்க்கிழமையிற் பிறந்தவன் சதா பொய்பேசுபவன், வஞ்சகமுடையவன், ஈனன், மானமில்லாதவன் எனவறிக.

புதன்கிழமையிற் பிறந்தவன் சத்தியவான், கல்வித்திறமையுடையவன் எனவறிக.

வியாழக்கிழமையிற் பிறந்தவன் புத்திசாலியாவான், சத்தியவான், மகிட்சியுள்ள பிரபு, தர்மவான் எனவறிக.

வெள்ளிக்கிழமையிற் பிறந்தவன் ஐஸ்வரியமுடையவன், மேன்மையான காரியம் செய்பவன் எனவறிக.

சனிக்கிழமையிற் பிறந்தவன் பலஹீனமுடையவன், இதர ஸ்திரீயை விரும்புபவன், பாவியாம் எனவறிக.

யோகங்களின் பலாபலன்

விஷ்கம்பத்திற் பிறந்தவன் தனவான், இனங்களுக்குப் பிரியன், சத்துருக்களை ஜெயிப்பவன், மாடு முதலியவைகளை வைத்து வாழ்பவன் எனவறிக.

பிரீதியிற் பிறந்தவன் தைரியமுடையவன், நற்குணமுடையவன், சகல விஷயங்களும் செய்பவன் எனவறிக.

ஆயுஷ்மானிற் பிறந்தவன் பராக்கிரமசாலி, சீலமுடையவன், சுகமுடையவன், தீர்க்காயுசுள்ளவன் எனவறிக.

சௌபாக்கியத்திற் பிறந்தவன் சுகவான், மானி, தேவபத்தியுடையவன், பெருமையுடையவன் எனவறிக.

சோபனத்திற் பிறந்தவன், நற்குணமுடையவன், சாமார்த்தியமுடையவன், ஆலயதரிசனம் செய்பவன் எனவறிக.

அதிகண்டத்திற் பிறந்தவன் பலவிதத்தும் பணம் சேர்ப்பவன், தன் இனத்திற்கெல்லாம் அரசனைப்போலிருப்பான், பெருமை பொருந்தினவன் எனவறிக.

சுகர்மத்திற் பிறந்தவன் புண்ணியவான், புத்திசாலியாவன், நல்ல ஸ்திரீகளுக்கு இஷ்டனும் எனவறிக.

திருதியிற் பிறந்தவன் பொறுமையுடையவன், பேராசையுடையவன், நல்ல வார்த்தைகள் பேசுவான் எனவறிக.

சூலத்திற் பிறந்தவன் கலகப்பிரியன், முன்கோபமுடையவன், இழிகுலத்தோன், பிறரை ஆதரிப்பவன், சத்துரு சங்காரி எனவறிக.

கண்டத்திற் பிறந்தவன் மூதேவித்தனமுடையவன், பயங்காளி, ஆங்காரி எனவறிக.

விருத்தியிற் பிறந்தவன் சகலசாஸ்திரங்களையும் பிரசங்கம் செய்பவன், பிரபு, பிரபுக்களின் நேசமுடையவன் எனவறிக.

துருவத்திற் பிறந்தவன் தனமுடையவன், நன்மையான சொற்களைப்பேசுபவன், பெரியோர்களைத் தொழுபவன் எனவறிக.

வியாகாதத்திற் பிறந்தவன் விரோதமுடையவன், மடையன், துக்கவான், பிறதேசத்தில் சஞ்சரிப்பவன் கொஞ்சமேனும் புத்தியில்லாதவன் எனவறிக.

அரிஷணத்திற் பிறந்தவன் தனதான்னியமுடையவன், பூமி யுள்ளவன், காமுகனுகத் திரிபவன் எனவறிக.

வச்சிரத்திற் பிறந்தவன் சத்காரியஞ்செய்பவன், புத்திமான், தனவான், காமுகன், தித்திப்புமேற் பிரியமுடையவன் எனவறிக.

சித்தியிற் பிறந்தவன் ஜனங்களின்மேல் அபிமானமுடையவன், தெய்வபக்தி யுடையவனுகும் எனவறிக.

விதிபாதத்திற் பிறந்தவன் வஞ்சகமுடையவன், தீமைகளை செய்பவன், துர்நடத்தையுடையவன் எனவறிக.

வரியாணிற் பிறந்தவன் மகாதுஷ்டன், பொய்யன், கொலே செய்யப் பிரியன் எனவறிக.

பரீகத்திற் பிறந்தவன் ஈனன், மோசம்செய்பவன், கபடன், தீயகுணமுடையவன் எனவறிக.

சிவத்திற் பிறந்தவன் தாய்தந்தைகளைக் காப்பாற்றுபவன், நல்ல சரித்திரம் படித்து நடப்பவன் எனவறிக.

சித்தத்திற் பிறந்தவன் பிரபுக்களின் நேசமுடையவன், குரு வின்மேல் பிரியமுடையவன், சுகமுடையவன், நல்லநடக்கை சொல் பவன் எனவறிக.

சாத்தியத்திற் பிறந்தவன் வித்துவானுகுவான், நல்லஸ்திரீயை மணம்புரிபவன், சாஸ்திரமறிந்தவன் எனவறிக.

சுபத்திற் பிறந்தவன் ஸ்திரீகளின்மேல் பிரியமுடையவன், அழகுடையவன், பொருள் சேர்ப்பவன் எனவறிக.

சுப்பிரமத்திற் பிறந்தவன் தர்மனிலேவுடையவன், வித்துவான், கடுங்கோபமுடையவன், மிருதுவானதேகி, தனவான் எனவறிக.

பிரமத்திற் பிறந்தவன் தான் புசிப்பதற்குக்கூடச் சம்பாதிக் காதவன், தயாளமுடையவன், தர்மவான் எனவறிக.

மாகேந்திரத்திற் பிறந்தவன் சகலவிஷயங்களு மறிபவன், தயாளமுடையவன், பிரபுவாம் எனவறிக.

வைதிருதியிற் பிறந்தவன் பலவான், தர்மநினேவுடையவன், டம்பனுகத்திரிபவன், அயலார்மேல் அவதூறு கூறுபவன் எனவறிக,

கரணங்களின் பலாபலன்

பவத்திற் பிறந்தவன் பாவி, சோம்பேறி, கர்மியாம் எனவறிக.

பாலவத்திற் பிறந்தவன் பாடகன், வெகுகன்னியமுடையவன், நற்குணமுடையவன் எனவறிக.

கௌலவத்திற் பிறந்தவன் தனதான்னியமுடையவன், நற்காரியம் செய்பவன், கீர்த்தியுடையவன் எனவறிக.

தைதுலேயிற் பிறந்தவன் தர்மம்பண்ண விருப்பமுடையவன், சந்தோஷகாரியங்களில் பிரியன், நல்லநடத்தையுடையவன், தனவான் எனவறிக.

கரசையிற் பிறந்தவன் கீர்த்தியுடையவன், இரட்சிப்பவன், தாய்தந்தை சிநேகி, தெய்வபக்தியுடையவன் எனவறிக.

வனசையிற் பிறந்தவன் வெகுசாமார்த்தியன், ஸ்திரீமயக்கன், நற்குணமுடையவன், டம்பன் எனவறிக.

பத்திரத்திற் பிறந்தவன் ஸ்திரீகவலையுடையவன், வெகுசிறப்பன் எனவறிக.

சகுனியிற் பிறந்தவன் முன்கோபமுடையவன், பாவி, மடையன் எனவறிக.

சதுஷ்பாதத்திற் பிறந்தவன் பொருள்சேர்ப்பவன், சகலவிஷயமறிபவன் எனவறிக.

நாகவத்திற் பிறந்தவன் சாமார்த்தியமான பேச்சுகள் பேசுபவன், தனவான், பராக்கிரமசாலியாம் எனவறிக.

கிமிஸ்துக்கினத்திற் பிறந்தவன் சஞ்சலமுடையவன், யாவருடைய சிநேகமும் செய்பவன், தந்திரவாதி எனவறிக.

வேளைகளின் பலாபலன்

சாத்விகவேளையிற் பிறந்தவன் புத்திசாலி, அழகுடையவன், தெய்வபக்தியுடையவன், விதரணசாலி எனவறிக.

இராஜசவேளையிற் பிறந்தவன் லோகஉபகாரியாவன், சமமாய் நடப்பவன், நல்ல அறிவுடையவன், கல்வியுஞ் சுகமுடையவன் எனவறிக.

தாமசவேளையிற் பிறந்தவன் சதா பொய்பேசுபவன், சோம்பேறியாகத்திரிபவன், அசுசியுடையவன், பாவி, கொஞ்சமேனும் படிப்பில்லாதவன் எனவறிக.

மாதங்களின் பலாபலன்

சித்திரைமாதத்திற் பிறந்தவன் வேதசாஸ்திரங்களைப் படிப்பவன், தாய்தந்தையர்கள்மீது பிரியமுடையவன், மகிழ்ச்சியுடையவன் எனவறிக.

வைகாசிமாதத்திற் பிறந்தவன் வித்துவான், தைரியசாலி, பெருமை பொருந்தினவன் எனவறிக.

ஆனிமாதத்திற் பிறந்தவன் அற்பகோபமுடையவன், தீரன், அனேக புத்திரருடன் வாழ்பவன் எனவறிக.

ஆடிமாதத்திற் பிறந்தவன் தனதான்னியமுடையவன், புண்ணியமுடையவன், புண்ணியவான், தயாளபுருஷன், நல்ல மனைவியுடையவன் எனவறிக.

ஆவணிமாதத்திற் பிறந்தவன் பிரபுக்களின் நேசமுடையவன், தெய்வபக்தியுடையவன், விசுவாசன் எனவறிக.

புரட்டாசிமாதத்திற் பிறந்தவன் சரித்திரமறிபவன், பிறதேச சஞ்சாரியாகுவன், கோபமில்லாதவன் எனவறிக.

ஐப்பசிமாதத்திற் பிறந்தவன் தரித்திரவான், கெடுசித்தமுள்ள பாவி, சிகப்புநிறமுடையவன் எனவறிக.

கார்த்திகைமாதத்திற் பிறந்தவன் தனதான்னியமுடையவன், பெற்றோருடன் கூடிவாழ்பவன், பெரிய கண்களையுடையவன் எனவறிக.

மார்கழிமாதத்திற் பிறந்தவன் தாய்தந்தையர் சிநேகி, தெய்வபக்தியுடையவன், பொருள்தேடுபவன் எனவறிக.

தைமாதத்திற் பிறந்தவன் நற்குணமுடையவன், நாம்பன், நீட்டு மூக்கன் எனவறிக.

மாசிமாதத்திற் பிறந்தவன் கர்மி, புத்தியில்லாதவன், விரோதி, வீண்பேச்சன் எனவறிக.

பங்குனிமாதத்திற் பிறந்தவன் தர்மசிந்தையுடையவன், பிரபு, கியானியாம் எனவறிக.

முக்கிய கவனிப்பு

மேற்சொல்லிய பலன்களெல்லாம் யாதாமொரு காரியம் துவக்கும்போது நல்லவை கெட்டவை என்று அறிந்துகொண்டு நடப்பதுந்தவிர, குழந்தை ஜனனமாகும்போது அதுகளின் நிலைமைப் பிரகாரம் அவாளவாள் அமைப்பையும் அறியலாம்.

கிரகப்பிரவேசம்

சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, ஐப்பிசி, தை மாதங்களும்; 2-3-5-6-7-10-11-12-13-திதிகளும்; திங்கள், புதன், வெள்ளி, சனி, அசுவனி, ரோகணி, மிருகசீரிடம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, மூன்றுத்திரங்கள், அனுஷம், திருவோணம், அவிட்டம், சதையம், ரேவதி, ரிஷபம், கடகம், சிங்கம், துலாம், மீனம்; 8-ஆமிடம் சுத்தமுமாக இருக்கச் சுபம் எனவறிக.

விவாகம்

உவா இருத்தை அஷ்டமி நீக்கிய திதிகளும், திங்கள் புதன் வியாழம் வெள்ளி ஆடி புரட்டாசி மார்கழி நீக்கிய மற்றைய மாதங்களும், ரிஷபம் மிதுனம் கடகம் கன்னி துலாம் தனுசு கும்பம் இராசிகளில், மிருகசீரிடம் ரோகணி மகம் சுவாதி அஸ்தம் அனுஷம் மூன்றுத்திரங்கள், இரேவதி, இந்த நட்சத்திரங்களில் 3-11-ல் பாபரும் 6-3-இல்லாத மற்ற இடங்களில் குரு சுக்கிரன் புதனும், 2-3-ல் சந்திரனு மிருக்கின்ற 7-ஆமிடம் சுத்தமாகிய லக்கினம் உத்தமமாம் எனவறிக.

புணர்ச்சிநாள்

மாதத்தில் பிறவிடையாகினபின் மூன்றுநாளும்; ஞாயிறு, செவ்வாய், சனி, அமாவாசி, அஷ்டமி, இருத்தை; ஜன்மநட்சத்திரவாரம்; பரணி, கிருத்திகை, திருவாதிரைதவிர ஆயிலியம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், பூரம், பூரட்டாதி; சந்திரன் நேத்திரத்திலும், குரு சுக்கிரன் திரிகோணத்திலும், புதன் 7-9-திலும், பாபர் 3-6-11-லும் லக்கினம் சாசுத்தமாயிருத்தல் உத்தமம் எனவறிக.

சீமந்தம்

ஆடி - புரட்டாசி - கார்த்திகை - மாதங்களில் வளர்பிறையில் திங்கள் புதன் வியாழம் வெள்ளி - பிரதமை - திரிதியை - பஞ்சமி -

சப்தமி-ஏகாதசி திரையோதசி திதிகளில் உரோகணி மிருகசீரிடம் உத்திரம் உத்திராடம் உத்திரட்டாதி பூசம் அஸ்தமுதலிய நட்சத்திரங்களில் இரண்டு ராசிகளாகிய சிங்கம் விருச்சிகமும் தவிர மற்ற ராசிகளும் 8-ஆமிடம் சுத்தமாகிய லக்கினமும் சுபம் எனவறிக.

நாமகரணம்

பிராமணர்களுக்குப் பிறந்த 12-ம் நாளும், மற்றவர்களுக்குப் பிறந்த 30-ம் நாளும் சரம் ராசி உரோகணி மிருகசீரிடம் புனர்பூசம் மகம் உத்திரம் அஸ்தம் சுவாதி அனுஷம் மூலம் உத்திராடம் திருவோணம் அவிட்டம் சதையம் உத்திரட்டாதி ரேவதி சுபம். அமாவாசி ஒற்றைத்திதிகள் தவிர மற்றைய திதிகள் சுபம் எனவறிக.

காதுகுத்தல்

பிறந்த 12-19-ம் நாள்களும், 6-7 மாதங்களும், திங்கள் புதன் வியாழம் வெள்ளி திருவோணம் தவிர எல்லா முழுநட்சத்திரங்களும், பஞ்சமி சஷ்டி சப்தமி துவாதசி திரையோதசி முன்பாக சதுர்த்தசியும், பாபர் 3-11-ம், சந்திரன் 2-3-7-9-11-ம் உத்தமம். ஆனல் 8-ல் புதனும், 6-8-10-ல் குருவும், 6-7-8-ல் சுக்கிரனும் ஆகாதெனவறிக.

மயிர்கழித்தல்

பிறந்த 3-5-ம் வருஷம் ஆடி - புரட்டாசி-மாசி-ஐப்பசி-மார்கழி ஞாயிறு செவ்வாய் சனி இருத்தை அஷ்டமி உவா பிரதமை யொழிந்த மற்றையமாதங்கள் நாட்கள் திதிகளும், அசுவனி ரோகணி மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் அஸ்தம் சித்திரை சுவாதி உத்திராடம் திருவோணம் அவிட்டம் சதையம் உத்திரட்டாதி ரேவதியும், ரிஷபம் மிதுனம் கடகம் கன்னி துலாம் மீனமும், 9-ஆமிடம் சுத்தமும், 3-6-11-ல் பாபரும் சுபரும், ஆனல் 1-6-12-ல் சந்திரன், 12-ல் குரு, 7-ல் சுக்கிரன், 8-ல் எல்லாகிரகங்களும், தாயாரிருந்தால் சுக்கிரவாரமும் ஆகாதெனவறிக.

வித்தியாரம்பம்

பிறந்த 5-ம் வருஷம் உத்தராயணம் திங்கள் புதன் வியாழம் வெள்ளி வாரங்களும், பிரதமை இருத்தை திரியோதசி அஷ்டமி உவா துவாதசி நீங்கிய மற்ற திதிகளும், ஆண்ராசியில் அசுவனி

ரோகணி புனர்பூசம் பூசம் திருவாதிரை அஸ்தம் சித்திரை சுவாதி அனுஷம் மூன்று உத்திரங்களும், திருவோணம் அவிட்டம் சதையம் ரேவதி 6-7-11-ல் நீங்கியவிடத்தில் சந்திரனும், 6-நீங்கிய விடத்தில் எல்லாக்கிரகங்களும் 4-மிடம் சுத்தமும் சுபம் என்வறிக.

முடிசூட்ட, பாகைதரிக்க

அமரபட்சம், திங்கள் புதன் வியாழம் வெள்ளி, பஞ்சமி திரியோதசி துவாதசி திரிதியை, அசுவனி ரோகணி மிருகசீரிடம் மூன்றுத்திரம் புனர்பூசம் பூசம் அஸ்தம் சித்திரை சுவாதி அனுஷம் திருவோணம் அவிட்டம் ரேவதியும், கன்னி துலாம் நீங்கிய 11-ஆமிடம் சுத்தமும் உத்தமம் எனவறிக.

யோகங்கள்

	சுபம்	நாசம்	அக்கினி	தத்தம்
ஞாயிறு	அஷ்டமி	சதுர்த்தி	துவாதசி	துவாதசி
திங்கள்	நவமி	சஷ்டி	சஷ்டி	ஏகாதசி
செவ்வாய்	சஷ்டி	சப்தமி	சப்தமி	பஞ்சமி
புதன்	திரிதியை	துதியை	அஷ்டமி	துதியை
வியாழம்	ஏகாதசி	அஷ்டமி	நவமி	சஷ்டி நவமி
வெள்ளி	திரயோதசி	நவமி	தசமி	ஏகாதசி
சனி	சதுர்த்தசி	சப்தமி	ஏகாதசி	துவாதசி

வாரசூலை

	சுபம்	அசுபம்	
கிழக்கு	செவ்வாய்	திங்கள்-சனி	8
தெற்கு	திங்கள்-சனி	வியாழம்	20
மேற்கு	புதன்-வியாழம்	வெள்ளி-ஞாயிறு	12
வடக்கு	ஞாயிறு-வெள்ளி	செவ்வாய்-புதன்	11

அசுபகாலத்தில் அவசியம் போகநேரிட்டால் மேற்குறித்திருக்கும் எண்களாகிய நாழிகைகளுக்கு மேற்பட்டுபோனல் உத்தமம்.

யோகங்கள்

அ-அமிர்தயோகம். சி-சித்தயோகம். ம-மரணயோகம். ந-நடுத்திரமையோகம்.

வாரங்கள்	அ	ப	சி	ரோ	மி	சி	பு	பூ	ஆ	ம	பூ	உ	அ	சி	சு	வி	அ	கே	மூ	ஒ	உ	தி		ச	பூ	உ	ரே
ஞாயிறு	சி	ந	சி	சி	சி	சி	சி	சி	சி	ம	சி	அ	அ	சி	சி	ந	ம	ம	அ	சி	அ	அ	ம	சி	சி	அ	அ
திங்கள்	சி	சி	ம	அ	அ	சி	அ	சி	சி	ம	சி	சி	சி	ந	அ	ம	சி	சி	சி	ந	ம	அ	சி	சி	சி	சி	சி
செவ்வாய்	சி	சி	சி	அ	சி	ம	சி	சி	சி	சி	சி	அ	சி	சி	சி	ம	சி	ந	அ	சி	ந	சி	சி	ம	ம	அ	சி
புதன்	ம	சி	அ	சி	சி	சி	சி	சி	சி	சி	அ	அ	ம	சி	சி	சி	அ	சி	ம	அ	அ	சி	ந	சி	அ	சி	ந
வியாழம்	அ	சி	ம	ந	ம	ம	அ	அ	சி	அ	சி	ம	சி	சி	அ	சி	சி	ந	சி	சி	சி	சி	சி	ம	சி	சி	சி
வெள்ளி	அ	சி	சி	ம	சி	சி	சி	ந	ம	ம	சி	சி	அ	சி	சி	சி	சி	ம	அ	ந	சி	ம	சி	சி	சி	சி	அ
சனி	சி	சி	அ	அ	சி	சி	சி	சி	ம	அ	சி	ந	ம	ம	அ	சி	சி	சி	சி	சி	சி	சி	சி	அ	ம	சி	ந

மேற்சொல்லிய நக்ஷத்திரங்களை அவாளவாள் நாமயெழுத்தின் பிரகாரம் வாரத்தைக்கொண்டு சித்தயோகம் அல்லது அமிர்தயோகமானால் சுபமென்றும், மரணயோகமானால் அசுபமென்று தெரிந்தும் யாதொரு காரியத்தைச் சுபகாலத்தில் செய்வது உத்தமம். இதில் வாரசூலேயும் யோகினி எந்தபக்கமென்றும் அனுசரிக்க வேண்டியது.

பூர்வபட்சம்கிழக்கு துவிதியை துவாதசியும்
அமரபட்சம் சப்தமியுமாம்.

பூர்வபட்சம் தெற்கு சஷ்டி அமரபட்சம்
பிரதமை ஏகாதசியுமாம்.

பூர்வபட்சம் மேற்கு சப்தமி
அமரபட்சம் துவிதை துவாதசியுமாம்.

பூர்வபட்சம் வடக்கு திரிதியை திரியோதசி
அமரபட்சம் அஷ்டமியுமாம்.

பூர்வபட்சம் அக்கினிமூலை சதுர்த்தி
சதுர்த்தசி அமரபட்சம் நவமியுமாம்.

பூர்வபட்சம் நிருதிமூலை பஞ்சமி
அமரபட்சம் தசமியுமாம்.

பூர்வபட்சம் வாய்வுமூலை அஷ்டமி
அமரபட்சம் திரிதியை திரயோதசியுமாம்.

பூரவபட்சம் ஈசான்னியம் நவமி
அமரபட்சம் சதுர்த்தி சதுர்த்தசியுமாம்.

ஆகாயம் பூர்வபட்சம் தசமி
அமரபட்சம் பஞ்சமி, அமாவாசியாம்.

கிரகமகாதிசை வருஷங்களும் அதற்குரிய நட்சத்திரங்கள் நாமமுதல் எழுத்துகளு முதலியன

கேதுதிசை 7-வரு அசுவனி - சு-சே - சோ - ல, மகம் - ம-மி-மு-மே, மூலம்-யே-யோ-ப-பி.

சுக்கிரன்திசை 20 - வரு பரணி-லி-லு-லே-லோ, பூரம்-மோ-ட-டி-டு, பூராடம்-பூ-த-ப்-ப.

சூரியன்திசை 6-வரு கிருத்திகை-அ-இ-ஊ-எ, உத்திரம்-டே டோ-ப-பி, உத்திராடம்-பே-போ-ஜ-ஜி.

சந்திரன்திசை 10-வரு உரோகணி-ஒ-வ-வீ-வூ, அஸ்தம்-பு-ஷ-ண-ட்-ட, திருவோணம்-கு-ங-ஙு-ச.

செவ்வாய்திசை 7-வரு மிருகசீரிடம் - வே - வோ - க - கி, சித்திரை-பே-போ-ரா-ரி, அவிட்டம்-க-கீ-கு-கே.

இராகுதிசை 18-வரு திருவாதிரை-கு-க-ங-ச்-ச, சுவாதி-ரு-ரே-ரோ-த, சதையம்-கோ-ஸ-ஸி-ஸு.

குருதிசை 16-வரு புனர்பூசம்-கே-கோ-ஹ-கி, விசாகம்-தீ-து தே-தோ, பூரட்டாதி-ஸே-ஸோ-த-தீ.

சனிதிசை 19-வரு பூசம்-ஹ-ஹே-ஹோ-ட, அனுஷம்-ந-நி-நு நே, உத்திரட்டாதி-து-த-ஜ-ஞ.

புதன்திசை 17-வரு ஆயிலியம்-டி-டு-டே-டோ. கேட்டை-நோ-ய-யி-யு, இரேவதி-தே-தோ-ச-சி.

கிரகங்கள் ஒவ்வொரு ராசிகளில் சஞ்சரிக்கும்காலம்

சூரியன்	1-மாதம்	வியாழம்	1-வருடம்
சந்திரன்	$2\frac{1}{2}$-நாள்	சனி	$2\frac{1}{2}$-வருடம்
செவ்வாய்	$1\frac{1}{2}$-மாதம்	ராகு	$1\frac{1}{2}$-வருடம்
புதன்	1-மாதம்	கேது	$1\frac{1}{2}$-வருடம்
சுக்கிரன்	1-மாதம்		

கிரகம் சுற்றிவரும் பக்கம்

சூரியன்முதல் சனிவரையில் வலதுபக்கம்; இராகுகேது இடது பக்கம்.

திரிகோண ராசிகள்

1 மேஷம்	2 ரிஷபம்	3 மிதுனம்	4 கடகம்
சிங்கம்	கன்னி	துலாம்	விருட்சகம்
தனுசு	மகரம்	கும்பம்	மீனம்

சுபக்கிரகங்கள்

பூர்வபட்சம் ஜனனத்திற்கு வியாழன் சந்திரன் முழுசுபர்கள், சுக்கிரன் - கால்சுபன், புதன்-அரைசுபன், சூரியன்-செவ்வாய்-கால் சுபர்கள், அமரபட்சத்திற்கு சனி-ராகு-கேது-முழுசுபர்கள், சூரியன் செவ்வாய் - கால்சுபர்கள், புதன்-அரைசுபன், சுக்கிரன்-கால்சுபன், ஆனால் அனுபோகத்தில் சாதாரணமாய் வியாழன்-பூர்வசந்திரன் - புதன்-சுக்கிரன்-சுபர்களும், சனி-ராகு-கேது - சூரியன்-செவ்வாய்-அமரசந்திரன்-பாவிகளுமாம்.

துவாதச பாவக லக்கினம்

விருத்தம்

மெய்நிறமழகு வடிவமோ டுதிர
  மிக்கசிரம் சிந்தையாங் கிலேசந்
துய்ய லட்சணமுங் கீர்த்தி மூர்த்திகரந்
  துலங்கிடும் பூமியா மதிலே
பைய நற்சுபமும் பரவுஞ் சந்தோஷமும்
  பண்புள வாயுளா மிவைகள்
மொய்யவே லக்கின முதலெனக் கண்டு
  மொழிவது யிப்பலன் முறையே. 1

இரண்டாமிடம்

முறையென சௌபாக்கியந் தனமும்
  முனிவிலாகு டும்பமு நேத்திரம்
நிறையென வித்தை நீடிய செல்வம்
  நிபுண சாஸ்திர கேள்வி வாக்கு
பொறையு முத்தேசம் பொன்னிறு பரணம்
  புகழ் நவரத்தின மிவைகள்
குறையிலா திரண்டாமிட மதைக்கொண்டு
  கூறு மிப்பலன் புவிமீதே. 2

மூன்றுமிடம்

மீதென யிளைய சகோதர மோடு
  மிக்கதோர் ராஜகா ரியமும்
போதென வெள்ளி வைபோக மாளடிமை
  புகழும் வீரியம் பலம் துணைவர்
காதென நோயணிகலம் கர்ண பூஷணம்
  காண்போஜ னகலன் தொழிலும்
மூதெனவீரம் தைரிய மிவைகளை
  மொழியு மூன்றுமிடங் கொண்டே. 3

நான்காமிடம்

கொண்டென மாதுரு வித்தைவானஞ் சுபங்
  கூறும் வியாபாரமு மேன்மை
கண்டென சவுக்கியம் விருந்துட னுறவினர்
  கருதிய பரஸ்திரியின் கவனம்
பண்டென வாசனைத் திரவியம் பால்சுப
  பரவுந் தேவாலய மிவைகள்
விண்டென நான்கா மிடமதைக்கொண்டு
  விளம்புவ தென வறிவாயே. 4

ஐந்தாமிடம்

அறிவது அம்மான் பிதாவின் புத்திரர் புத்திரி
ஆம் பூர்வத்திற்செய்த புண்ணியம்
பிரிய வித்வான்கள் பிரபந்த மோடுப்
பேசிடுங் கர்ப்ப தானமும்
கூறிய மந்திரம் வித்தை விதரணம் புத்தி
குலவிடும் பிரபுயிவை முதலாம்
தேறிய ஐந்தாமிட மதைக் கொண்டு நன்றாய்த்
தெளிவுறப் பலனது சாற்றே. 5

ஆறாமிடம்

சாற்றிடும் வியாதி சத்துருப் பீடை
சரியு மாயுதங்களால் காயம்
தேற்றும் பங்காளிகள் துன்பமோடுத்தம
தேகநோய் பொல்லா வாபத்தும்
காற்றிடுங் திருடர் ஸ்திரீகளோ டரவம்
கனபய மதிகாரஞ் சிறையும்
போற்றியே யிவைமுதலா மிடங்கொண்டு
புகல்வது பலனெனக் காண்பாய். 6

ஏழாமிடம்

காணும் பெண்சாதி கலியாண மோடு
கருதிய பெண்டு பிள்ளைகளுக்கும்
பூணுமுண்டாகிய சுகமும் வியாபாரமும்
புகல் விசாரணை பந்துயவர்கள்
தோணுஞ் சன்மானம் விபசாரம் வதுவைக்கு
துலங்குநாள் பின்தார மிவைகள்
வேணுமோ ரேழா மிடமதைக் கொண்டு
விளம்புவ தென்றறி மின்னே. 7

எட்டாமிடம்

மின்னென வாயுள் ஆயுதப் பீடை
மிக்கயுத்தம் மலையேறியே வீழ்தல்
பன்னிய வியாதி விக்கினங் கிலேசம்
பலதுக்கம் துன்பமும் விரணம்
முன்னியவதிக சிலவுப கைமரணம்
முயற்சிகேடுட னிவை முதலாய்
மன்னிய வெட்டா மிடமதைக்கொண்டு
மாபலன் கண்டு நீயுரையே. 8

ஒன்பதாமிடம்

உரைப்பது தந்தை தர்மமும் பாக்கியம்
ஓதும் சத்திரம் சாவடியும்
குறிப்பது புண்ணியம் குளமுபதேசம்
குலவிபத் தடாகமோ டின்னம்
தறிப்பது தண்ணீர் பந்தலும் செல்வம்
தானுகும் பந்துயிவை முதலாய்
பொறுப்பென யிவை யொன்பதா மிடங்கொண்டு
புகல்வ தென்றறிந் திடுமாதே. 9

பத்தாமிடம்

மாதெனப் பற்பல புண்ணியம் பட்டணங்கள்
மாநாடு தன்பெய ராக்கல்
காதெனக் கர்ம மிரக்கமெஞ் ஞானம்
கருதிய பூஜையுந் தகப்பன்
போதவே செய்த பவமதை யொழித்தல்
புகழ்தெய்வ பக்தி பராக்கிரமம்
ஓதவே பேர்பிரதாபம் போஜனருசி
உரையும் பத்தாமிடங் கொண்டே. 10

பதினோராமிடம்

கொண்டதோர் ஜாதகன் மூத்த சகோதரம்
குலவியநற் சேவகம் செய்பவர்
பண்டென யிளைய மனைவிபோன் வித்தை
பயிர் லாபம் அஸ்வநல்லறிவு
துண்டென மன துக்கமுந் தீரல்
துலங்கு மாடை யாபரணம்
கண்டென யிவை பதினோரா மிடங்கொண்டு
கருதுவதென் றறிவாயே. 11

பனிரெண்டாமிடம்

வாயென விரையம் அன்னிய தேசம்
வாய்க்குழுத்தி யோகமும் பணமும்
தூயெனச் சிலவுட னுண்டாகும் போகமும்
தூக்க சௌக்கியம் விசாதம்
காயென தொழில்புரி கன்மம் தானதர்மம்
கருதும் புண்ணியமொடு தியாகம்
நேயென யாகாதவை விருத்தி முதலானதும்
நிகழ்த்து மீராறிடங் கொண்டே. 12

வசனம்

மேற்சொல்லிய 12-பாவகமும் லக்கினமுதல் 12-இராசிக்குடையது. இவை 1-லிருந்து 12-ஆதீனத்திற்கும் இப்பூலோகத்தில் மானிடர்களுக்கு உண்டாகும்படியானவைகளை சொல்லுகின்றதென்று அறிக. இது ஜாதகன்முதல் மற்றவர்களுக்கும் அந்தப்படியே பார்க்கவேண்டியது. இதுவுமன்றி, இன்னும் சில சூட்சங்களாவன: அதாவது பிதுர்-பிதா-9-மிடம், மாதுர்-மாதா-4-மிடம், புருஷன்-பெண் ருதுவுக்கு-7-மிடம், மேற்படி பெண் ஜனனத்திற்கு-9-மிடமாம்.

ஸ்தானம்

ஸ்தானம் 5-விதம்; அதாவது, கேந்திரம், பணபரம், அபோக்கிலியம், உபஜெயம், திரிகோணமாயிருந்தபோதிலும், முக்கியமாய் ஜோசியத்தில் கேந்திரமும் திரிகோணமும் வழங்குகிறபடியால் இதன் ஸ்தானங்கள் கேந்திரமும், 1-4-7-10-ஆக இடங்களில் பாபர்களும், திரிகோணம் 1-5-9-ஆக 3-இடங்களில் சுபர்களுமிருந்தால் மிதமிஞ்சின நல்ல பலன்களைக் கொடுப்பார்கள். மேலும் 6-8-11-ல் பாபக்கிரகங்கள் இருந்தாலும் அதிக நல்லதென்றறிக.

கிரக துடர்ச்சியின் பலன்

இலக்கினமுதல் 7-வீடுகளில் கிரகம் துடர்ச்சியாயிருந்தால் அரசன், புண்ணியன், புத்திசாலி, வித்துவான், பிரசங்கி, தைரியமும் உற்சாகமுமுடையவன் எனவறிக.

இலக்கினமுதல் 1-வீடுகளில் கிரகம் துடர்ச்சியாக விருந்தால் அரசன், சுகதேகி, அதிர்ஷ்டமுடையவன், பொறுமையுடையவன், தயாளமுடையவன் எனவறிக.

இலக்கினமுதல் 5-வீடுகளில் கிரகம் துடர்ச்சியாயிருந்தால் மேன்மையுடையவன், சந்தோஷமுடையவன், பிரபுக்கள் நேசமுடையவன், தனவான், சாஸ்திரந் தெரிந்தவன் எனவறிக.

இலக்கினமுதல் 4-வீடுகளில் கிரகம் துடர்ச்சியாயிருந்தால் கைத்தொழில் செய்து பணம் சம்பாதிப்பன், பெருமையுடையவன், சுற்றத்தார்மேற் பட்சமுடையவன் எனவறிக.

இலக்கினமுதல் 3-வீடுகளில் கிரகங்கள் துடர்ச்சியாயிருந்தால் வல்லமையுடையவன், சம்பத்துடையவன், பல பாஷையுமறிந்தவன், அதிகமாய்ப் பணம் சம்பாதிப்பவன் எனவறிக.

இலக்கினமுதல் 2-வீடுகளில் கிரகங்கள் தொடர்ச்சியாயிருந்தால் சரசகுணமுடையவன், தீர்க்காயுளன், பிரபுக்கள் கீழ்ப்படிதல் என வறிக.

இலக்கினமுதல் 1-வீடுகளில் கிரகங்கள் தொடர்ச்சியாயிருந்தால் வறுமையுடையவன், இளைத்ததேகன், பொல்லாப்புடையவன், விரையவான் எனவறிக.

இராசி தத்துவங்கள்

சூ-சூரியன்	சு-வெள்ளி
சந்-சந்திரன்	ச-சனி
செ-செவ்வாய்	ரா-ராகு
பு-புதன்	கே-கேது
கு-வியாழன்	கு-குளிகன்

பின்னால் வரும் தத்துவங்களெல்லாம் அவரவர்களுக்கு உரிய இராசிக் குறிப்புகளாம். இதனால் கேட்கப்பட்டவை என்னமாயிருந்தாலும் அதற்குரிய இராசி கிரகத்தைக்கண்டு, அடையாளங்கள் கண்டுக்கொள்வதும் தவிர, ஆரூடத்திற்கும் முக்கியமாயிருக்கும்.

மேஷராசிக்கு அங்கம்-சிரசு, குணம்-குரூரம், அதிபதி-செவ்வாய், பலம்-இரவு, ஓட்டம்-சரம், திசை-கிழக்கு, வர்ணம்-ரத்தம், உருவு-ஆடு, இராசி-ஆண், ஜாதி-க்ஷத்திரியன், தத்து-அக்கினி, இராசி-ருதுஷ், உதையம்-பிரட்டோதயம் எனவறிக.

ரிஷபவிராசிக்கு அங்கம்-முகம், குணம்-சௌமியம், அதிபதி-சுக்கிரன், பலம்-இரவு, ஓட்டம்-ஸ்திரம், திசை-தெற்கு, வர்ணம்-சுவேதம், உருவு-எருது, இராசி-பெண், ஜாதி-வைசியன், தத்து-பூ எனவறிக.

மிதுனவிராசிக்கு அங்கம்-மார்பு, குணம்-குரூரம், அதிபதி-புதன், பலம்-இரவு, ஓட்டம்-உபயம், திசை-மேற்கு, வர்ணம்-கிளி, உருவு-அலி, இராசி-ஆண், ஜாதி-சூத்திரன், தத்து-வாயு, ராசி-நர, உதையம்-சிரம் எனவறிக.

கடகவிராசிக்கு அங்கம்-இருதயம், குணம்-சௌமியம், அதிபதி-சந்திரன், பலம்-இரவு, ஓட்டம்-சரம், திசை-வடக்கு, வர்ணம்-சுரவதம், உருவு-நண்டு, ராசி-பெண், ஜாதி-பிராமணன், தத்து-ஜலம், ராசி-ஜலசரம், உதையம்-பிரட்டோதயம் எனவறிக.

சிங்கவிராசிக்கு அங்கம்-வயிறு, குணம்-கொடூரம், அதிபதி-சூரியன், பலம்-பகல், ஓட்டம்-ஸ்திரம், திசை-கிழக்கு, வர்ணம்-வெண்மை, உருவு-சிங்கம், ராசி-ஆண், ஜாதி-க்ஷத்திரியன், தத்து-அக்கினி, ராசி-சதுஷ், உதையம்-சிரம் எனவறிக.

கன்னியாவிராசிக்கு அங்கம்-கடிப்பிரம், குணம்-சௌமியம், அதிபதி-புதன், பலம்-பகல், ஓட்டம்-உதையம், திசை-தெற்கு, வர்ணம்-சித்திரம், உருவு-கன்னி, ராசி-பெண், ஜாதி-வைசியன், தத்து-பூ, ராசி-நர, உதையம்-சிரம் எனவறிக.

துலாவிராசிக்கு அங்கம்-நாசி, குணம்-கொடூரம், அதிபதி-சுக்கிரன், பலம்-பகல், ஓட்டம்-சரம், திசை-மேற்கு, வர்ணம்-நீலம், உருவு-திராசு, ராசி-ஆண், ஜாதி-சூத்திரன், தத்து-வாயு, ராசி-நர, உதையம்-சிரம் எனவறிக.

விருச்சிகவிராசிக்கு அங்கம்-லிங்கம், குணம்-சௌமியம், அதிபதி-செவ்வாய், பலம்-பகல், ஓட்டம்-ஸ்திரம், திசை-வடக்கு, வர்ணம்-பொன், ஜாதி-பிராமணன், தத்து-ஜலம், ராசி-கீடக, உதையம்-சிரம் எனவறிக.

தனுசுவிராசிக்கு அங்கம்-தொடை, குணம்-கொடூரம், அதிபதி-குரு, பலம்-இரவு, ஓட்டம்-உபையம், திசை-கிழக்கு, வர்ணம்-கபிலம், உருவு-வில், ராசி-ஆண், ஜாதி-க்ஷத்திரியன், தத்து-அக்கினி, ராசி-நர, உதையம்-பிரட்டோதயம் எனவறிக.

மகரவிராசிக்கு அங்கம்-கால், குணம்-சௌமியம், அதிபதி-சனி, பலம்-இரவு, ஓட்டம்-சரம், திசை-தெற்கு, வர்ணம்-வெண், உருவு-முதலை, ராசி-பெண், ஜாதி-வைசியன், தத்து-பூ, ராசி-சதுஷ், ஜலம் எனவறிக.

கும்பவிராசிக்கு அங்கம்-கணைக்கால், குணம்-கொடூரம், அதிபதி-சனி, பலம்-பகல், ஓட்டம்-ஸ்திரம், திசை-மேற்கு, வர்ணம்-வெண், உருவு-குடம், ராசி-ஆண், ஜாதி-சூத்திரன், தத்து-வாயு, ராசி-நர, உதையம்-சிரம் எனவறிக.

மீனவிராசிக்கு அங்கம்-பாதம், குணம்-சௌமியம், அதிபதி-குரு, பலம்-இரவு, ஓட்டம்-உபயம், திசை-வடக்கு, வர்ணம்-சுவேதம், உருவம்-மீன், ராசி-பெண், ஜாதி-பிராமணன், தத்து-ஜலம், ராசி-ஜலசரம், உதையம்-பிரட்டோதயம் சிரஉதையம் எனவறிக.

கிரகங்களின் நட்பு-பகை-சமம்

சூரியனுக்கு சந்திரன் செவ்வாய் வியாழன்-நட்பு, புதன்-சமம், சுக்கிரன் சனி ராகு கேது-பகையாம் எனவறிக.

சந்திரனுக்குச் சூரியன் புதன்-நட்பு, செவ்வாய் வியாழன் சுக்கிரன் சனி-சமம், ராகு கேது-பகையாம் எனவறிக.

செவ்வாய்க்குச் சூரியன் சந்திரன் வியாழன்-நட்பு, புதன்-பகை, சுக்கிரன் சனி ராகு கேது-சமம் எனவறிக.

புதனுக்குச் சூரியன் சுக்கிரன்-நட்பு, சந்திரன்-பகை, செவ்வாய் வியாழன் சனி ராகு கேது-சமம் எனவறிக.

வியாழத்திற்குச் சூரியன் சந்திரன் செவ்வாய்-நட்பு, புதன் சுக்கிரன்-பகை, சனி ராகு கேது-சமம் எனவறிக.

சுக்கிரனுக்குச் சூரியன் சந்திரன்-பகை, செவ்வாய் குரு ராகு கேது-சமம், புதன் சனி-நட்பு எனவறிக.

சனிக்குச் சூரியன் சந்திரன் செவ்வாய்-பகை, புதன் சுக்கிரன்-நட்பு, வியாழன் ராகு கேது-சமம் எனவறிக.

கிரக தத்துவங்கள்

சூரியன் ஜாதி-க்ஷத்திரியன், குணம்-சத்துவம், ராசி-ஆண், அந்தஸ்து-அரசன், அதிதேவதை-அக்கினி, தத்துவம்-பித்தம், பொருள்-தாம்பிரம், குலம்-காசிபர், எதில் பலம்-எலும்பு, ருசி-கசப்பு, காரம், பர்வம்-விருத்தாப்பியம், வடிவம்-சதுரம், தான்னியம்-கோதுமை, புஷ்பம்-செந்தாமரை, தூபம்-சந்தனம், இரத்தினம்-மாணிக்கம், ரூபம்-நடு, நிறம்-சிகப்பு, வஸ்திரம்-சிகப்பு, குணம்-பாபர், கல்வி-சம்ஸ்கிருதம் தெலுங்கு, ஊண்-சுடுகை, பூதம்-தேய்வு, வாகனம்-தேர், நவத்துவாரம்-வலதுமூக்கு, வலிமை-கிரகம், ராகு கேது, வலிமைபகல், இருப்பு-சிரசு, வேளை-தாமசம், சமித்து-எருக்கு, பலனளவு பூர்வபட்சம்-கால், அமரபட்சம்-முக்கால், ராசிப்பார்வை-1-7, ராசிப்பார்வையினளவு-11, கிரகமளவு-8-12 எனவறிக.

சந்திரன் ஜாதி-வைசியன், குணம்-சத்துவம், ராசி-பெண், அந்தஸ்து-அரசன், அதிதேவதை-ஜலம், திக்கு-மேற்கு, அதிபதி-ஜலம், தத்துவம்-சிலேத்துமம், பொருள்-திரவியம், குலம் ஆந்திரேயர், எதில் பலம்-ரத்தபுஷ்டி, ருசி உப்பு, பர்வம்-பாலியம், வடிவம்-வட்டம், தானியம்-பச்சரிசி, புஷ்பம்-வெள்ளல்லி, தூபம்-சாம்பிராணி, இரத்தினம்-முத்து, ரூபம்-குள்ளம், நிறம்-வெள்ளை, வஸ்திரம்-வெள்ளை, குணம்-சுபர், கல்வி-தமிழ், ஊண்-குளிர்ச்சி, பூதம்-அப்பு, வாகனம்-சப்பிரம், நவத்துவாரம்-இடதுமூக்கு, வலிமை-கிரகம் சூரியன் வலிமை இரவு, உறுப்பு-முகம், வேளை-சாத்மீகம், சமித்து-முருக்கு, பலனளவு பூர்வபட்சம்-.1, ராசி பார்வை அளவு-1, கிரக மறைவு-3-6-8-11-எனவறிக.

செவ்வாய் ஜாதி-க்ஷத்திரியன், குணம்-தமோகுணம், ராசி-ஆண், அந்தஸ்து-சேனாதிபதி, அதிதேவதை-சுகந்தன், திக்கு-தெற்கு, அதிபதி-அக்கினி, தத்துவம்-பித்தம், பொருள்-பொன்மணி, குலம்-பாரத்துவாசர், எதில் பலம் எறும்பு-மச்சை, ருசி-கசப்பு, பர்வம்-கௌமாரம், வடிவம்-திரிகோணம், தான்னியம்-துவரை, புஷ்பம்-செண்பகம், தூபம்-குங்கிலியம், இரத்தினம்-பவளம், ரூபம்-குள்ளம், நிறம்-சிகப்பு, வஸ்திரம்-சிகப்பு, குணம்-பாபர், கல்வி-தெலுங்கு, ஊண்-சூடு, பூதம்-பிரிதி, வாகனம்-அன்னம், நவத்துவாரம்-வாய், வலிமை கிரகம்-சனி, வலிமை-இரவு, உறுப்பு-மார்பு, வேளை-இராட்சதம், சமித்து-கருங்காலி, பலனளவு பூர்வபட்சம்-கால், அமரபட்சம்-முக்கால், இராசிப்பார்வை-1-7-4-8, ராசிப்பார்வை அளவு-1-7 (1) 4-8, அரை கிரகமறைவு-8-12 எனவறிக.

புதன் ஜாதி-சூத்திரன், குணம்-ராஜா, ராசி-பேடி, அந்தஸ்து-புவிராஜன், அதிதேவதை-மால், திக்கு-வடக்கு, அதிபதி-பூமி, தத்துவம்-வாதபித்த சிலேத்துமம், பொருள்-பித்தளை வெண்கலம், குலம்-ஆத்திரேயர், எதில் பலம்-சர்மம், உருசி-புளிப்பு, பர்வம்-பாலியம், வடிவம்-அம்பு, தானியம்-சிறுபயர், புஷ்பம்-வெண்காந்தல், தூபம்-கற்பூரம், இரத்தினம்-பச்சை, ரூபம்-நெட்டை, நிறம்-பசுமை, வஸ்திரம்-பசுமை, குணம்-சுபர், கல்வி-கணிதம், ஊண்-மத்தி, பூதம்-வாயு, வாகனம்-குதிரை, நவத்துவாரம்-இடதுகாது, வலிமை-கிரகம் செவ்வாய், வலிமை-பொது, உருப்பு-மடி, வேளை-தாமசம், சமித்து-நாயுருவி, பலனளவு-அரை, ராசிப்பார்வை-1-7, ராசிப்பார்வை அளவு-1, கிரகமளவு-3-6-8-12 எனவறிக.

வியாழன் ஜாதி-பிராமணன், குணம்-சத்துவம், ராசி-ஆண், அந்தஸ்து-மந்திரி, அதிதேவதை-இந்திரன், திக்கு-ஈசான்னியம், அதிபதி-ஆகாயம், தத்துவம்-சிலேத்துமம், பொருள்-வெள்ளி, குலம்-ஆங்கிரதர், எதில் பலம்-மூளை, ருசி-மதுரம், பர்வம்-யௌவனம், வடிவம்-நீண்ட சதுரம், தானியம்-கடலை, புஷ்பம்-முல்லை, தூபம்-ஆம்பல், இரத்தினம்-புஷ்பராகம், ரூபம்-நெட்டை, நிறம்-பொன், வஸ்திரம்-தங்கம், குணம்-சுபர், கல்வி-சமஸ்கிருதம், தெலுங்கு, ஊண்-குளிர்ச்சி, பூதம்-தேய்வு, வாகனம்-யானை, நவத்துவாரம்-வலதுகாது, வலிமைகிரகம்-சுக்கிரன், வலிமை பகல், உறுப்பு-வயிறு, வேளை-சாத்மீகம், சமித்து-அரசு, பலனளவு பூர்வபட்சம்-1, ராசிப்பார்வை-1-7, ராசிப்பார்வை அளவு-1, கிரகமளவு-3-6-8-12 எனவறிக.

சுக்கிரன் ஜாதி-பிராமணன், குணம்-இராஜா, ராசி-பெண், அந்தஸ்து-மந்திரி, அதிதேவதை-சசிதேவி, திக்கு-ஆக்கினேயம், அதிபதி-ஜலம், தத்துவம்-வாதசிலேத்துமம், பொருள்-முத்து, குலம்-பார்க்கவர், எதில் பலம்-இந்திரியம், ருசி-புளிப்பு, பர்வம்-மத்திபம், வடிவம் - ஐங்கோணம், தான்னியம் - மொச்சை, புஷ்பம் - தாமரை, தூபம்-இலவங்கம், இரத்தினம்-வயிரம், ரூபம்-நடு, நிறம்-வெள்ளை, வஸ்திரம்-வெள்ளி, குணம்-சுபர், கல்வி-சமஸ்கிருதம்,ஊண்-குளிர்ச்சி, பூதம்-அப்பு, வாகனம்-கெருடன், நவத்துவாரம்-ஆண்குறி பெண்குறி, வலிமை கிரகம்-சந்திரன், வலிமை பகல், உறுப்பு-மூக்கு, வேளை-இராசதம், சமித்து-அத்தி, பலனளவு பூர்வபட்சம்-முக்கால், அமரபட்சம்-கால், இராசிப்பார்வை-1-7, இராசிப்பார்வை அளவு-1, கிரகமறைவு-8-3 எனவறிக.

சனி ஜாதி-சண்டாளன், குணம்-தமோகுணம், ராசி-அலி, அந்தஸ்து-தாசன், அதிதேவதை-பிரமன், திக்கு-மேற்கு, அதிபதி-வாயு, தத்துவம்-வாதம், பொருள்-இரும்பு ஈயம், குலம்-காசிபர், எதில் பலம்-நரம்பு, ருசி-துவர்ப்பு, பருவம்-விருத்தாப்பியம், வடிவம்-வில், தான்னியம்-எள், புஷ்பம்-கருங்குவளை, தூபம்-கருங்காலி, இரத்தினம்-நீலம், ரூபம்-குள்ளம், நிறம்-கருமை, வஸ்திரம்-நீலக்காப்பு, குணம்-பாபர், கல்வி-மற்றது, ஊண்-மத்திபம், பூதம்-ஆகாயம், வாகனம்-காகம், நவத்துவாரம்-ஆசனம், வலிமை கிரகம்-குரு, வலிமை இரவு, உறுப்பு-தொடை, வேளை-தாமசம், சமித்து-வன்னி, பலனளவு-அமரபட்சம்-1, ராசிப்பார்வை-1-7-3-10-1-7 (1) 3-10-கால், கிரகமளவு-8-12 எனவறிக.

இராகு ஜாதி-சண்டாளன், குணம்-தமோகுணம், ராசி-பெண், அந்தஸ்து-தாசன், அதிதேவதை - துர்க்கை, தத்துவம் - பித்தம், பொருள்-கருங்கல், குலம்-பைடீசன், எதில் பலம்-குடல், ருசி-புளிப்பு, வடிவம்-கொடி, தான்னியம்-உளுந்து, புஷ்பம்-கறுப்பு மந்தாரை, தூபம்-கடுகு, இரத்தினம்-கோமேதகம், ரூபம்-நெட்டை, நிறம்-கருமை, வஸ்திரம்-கருமை, குணம்-பாபர், கல்வி-மற்றது, ஊண்-மத்திபம், பூதம்-ஆகாயம், வாகனம்-ஆடு, நவத்துவாரம்-வலக்கண், வலிமை-பொது, உறுப்பு-கை, வேளை-தாமசம், சமித்து-அறுகு, பலனளவு அமரபட்சம்-1, ராசிப்பார்வை-1-7-3-11, ராசிப்பார்வையளவு-1-7 (1) 3-பத்தரை-8-12 எனவறிக.

கேது ஜாதி-சண்டாளன், குணம்-தமோகுணம், ராசி-அலி, அந்தஸ்து-தாசன், அதிதேவதை-சித்திரபுத்திரான், தத்துவம்-பித்தம் ,

பொருள்-தூருக்கல், குலம்-ஜைமுனிதேவர், எதில் பலம்-குடல், ருசி-புளிப்பு, வடிவம்-முச்சில், தான்னியம்-கொள்ளு, புஷ்பம்-செவ்வல்லி, தூபம்-செம்மரம், இரத்தினம்-வைடூரியம், ரூபம்-நெட்டை, நிறம்-சிகப்பு, வஸ்திரம்-சிகப்பு, குணம்-பாபர், கல்வி-மற்றது, ஊண்-மத்திபம், பூதம்-ஆகாயம், வாகனம்-சிங்கம், நவத்துவாரம்-இடக்கண், வலிமை-பொது, உறுப்பு-கால், வேளை-தாமசம், சமித்து-தர்ப்பை, பலனளவு அமரபட்சம்-1, ராசிப்பார்வை-1-7-3-11-1-7 (1), 3-பத்தரை, கிரகமறைவு-8-12 எனவறிக.

கிரகங்கள் 9-க்கும் இராசிகளின் நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம் முதலியவை அறிய

மேஷம்

விருத்தம்

அரியதோர் மேடமெனும் ராசிக்கேதான்
   அப்பனே புந்திபுகா நட்பதாகும்
மருவிய செவ்வாயு மாட்சியாகும்
   மகிழ்ச்சியுள சூரியனு முச்சமாகும்
பரியதோர் சந்திரனுங் குருவினோடு
   பணிராகு கேதுமே பகையதாகும்
உரியவே சனியனுமே நீசமென்றே
   உற்றதோர் பலன்கண்டு வுரைத்திடாயே. 1

ரிஷபம்

உரைத்திடவே ரிஷபமெனும் ராசிக்கேதான்
   உற்றசேய் புந்திகுரு சனியும்நட்பு
நிரைத்திட்ட சுக்கிரனு மாட்சியாகும்
   நீடிய சந்திரனே யுச்சமாகும்
குறித்திட்ட சூரியனும் பகையதாகும்
   கொடியதோர் இராகுகேது நீசமென்றே
பறிதிட்ட மாகவேதான் நிலையைக்கண்டு
   பண்பாக ஜாதகற்குப் பலனைச்சாற்றே. 2

மிதுனம்

சாற்றவே மிதுனமெனும் ராசிக்கேதான்
   சந்திரன் செவ்வாயும் வியாழமோடு
தோற்றவே சுக்கிரன் சனியோடின்னம்
   துலங்கிய ராகுவோடு கேதுநட்பாம்

போற்றவே புதனுமே யாட்சியாகும்
பொருந்திய சூரியனும் பகையதாகும்
தேற்றவே யிவைகண்ருய்க் கண்டாராய்ந்து
திகழாக ஜாதகற்குப் பலனைச்சொல்லே. 3

கடகம்

சொல்லவே கடகமெனும் ராசிக்கேதான்
சுத்தமுள்ள புதன்நட்பு சந்திரனுட்சி
புல்லவே குருவுச்சம் சூரியன் சுக்கிரன்
போதசனி ராகுகேதுப் பகையதாகும்
வல்லதோர் செவ்வாயும் நீசமாகும்
வரிசையாய்க் கிரகநிலை கண்டாராய்ந்து
அல்லதோர் ஜாதகத்தி னமைப்புக்கெல்லாம்
அடைவாகக் கண்டுபலன் விள்ளுவாயே. 4

சிங்கம்

வாயென சிங்கமெனும் ராசிக்கேதான்
வரியதோர் புதன்வரும் நட்பதாகும்
தோயென சந்திரனு மாட்சியாகும்
துலங்கிய குருவுமே யுச்சமாகும்
போயென சுக்கிரன் இராகுகேதுப்
பொருந்திய சந்திரன் செவ்வாயோடு
நேயெனப் புந்தியும் நிற்பாராகில்
நிகழ்த்துவாய் பகையென்றே நிலைமையாக. 5

கன்னி

ஆகவே கன்னியெனு மிராசிக்கேதான்
அரியசந் திரன்செவ்வாய் குருவோடின்னம்
பாகமாஞ் சனிராகு கேதுநட்பாம
பணபான புதனுமே யாட்சியுச்சம்
தாகமாங் கதிரவனும் பகையதாகும்
தங்கிய சுக்கிரனும் நீச்சமாகும
போகமா மிவ்வாறு கண்டாராய்ந்து
புவிமீது பாலாப்பலனைப் புகழ்ந்துகூறே. 6

துலாம்

கூறவே துலாமெனும் ராசிக்கேதான்
குலவிய செவ்வாயும் புதன்பொன்னோடு
நேரவே ராகுகேது நட்பதாகும்
நிலையான சுக்கிரனும் ஆட்சியாகும்

சாரவே சனியவனு முச்சமாகும்
சந்திரனு மதில்நிற்கப் பகையதாகும்
தேறவே சூரியனும் நீச்சமாகும்
தெளிவாகக் கண்டுபலன் தெரியச்சொல்லே. 7

விருச்சிகம்

சொல்லவே விருச்சிக ராசிக்கேதான்
சுகமாக புதன்சுக்கிரன் நட்பதாகும்
அல்லவே செவ்வாயு மாட்சியாகும்
அறியவே ராகுகேது உச்சமாகும்
புல்லவே சூரியன் குருவோடின்னம்
புன்மையுள்ள சனிநிற்கப் பகையதாகும்
வல்லவே சந்திரனும் நீச்சமாகும்
வாகாதக் கண்டுபல னறைவாய்மாதே. 8

தனுசு

பாதுகேள் தனுசெனு மிராசிக்கேதான்
மருவிய சூரியன் புதனோடின்னம்
ஓதக்கேள் சுக்கிரன் சனியும்நட்பாம்
உற்றதோர் வியாழனுமே ஆட்சியாகும்
போதுகேள் செவ்வாயு மதிலேநிற்கப்
பொல்லாத பகையென்று புகலுவாய்நீ
சேதிகே ளிவ்வாறு கிரகங்கட்குச்
சிறந்தபல னறுந்துமே செப்புவாயே. 9

மகரம்

செப்பவே மகரமெனும் ராசிக்கேதான்
சிறந்ததோர் புதன்சுக்கிரன் ராகுகேது
மெப்பவே நட்பாகும் சனியேயாட்சி
மேவிய செவ்வாயு முச்சமாகும்
ஒப்பிய சூரியனுஞ் சந்திரன்நிற்க
உதவாதப் பகையுமே யாவார்பாரு
தப்பிலா வியாழனுமே நீச்சமாகும்
தானறிந்து ஜாதகத்தின் பலனைவிள்ளே. 10

கும்பம்

விள்ளவே கும்பமெனு மிராசிக்கேதான்
விளங்கிய புதன்குரு சுக்கிரன்நட்பு
கொள்ளவே சனியவனு மாட்சியாகும்
குலவிய சூரியன் சந்திரன்செவ்வாய்

தள்ளவே ராகுகே ததிலேநிற்கத்
 தாங்கொணுப் பகையுமே யாவார்பாரு
உள்ளவேயுற்றதோர் பலனைச்சொல்ல
 உறுதியாய்க் கிரகமதை யுண்ணிப்பாயே. 11

மீனம்

பார்க்கவே மீனமெனும் ராசிக்கேதான்
 பண்பான சூரியன் சந்திரனேடு
ஏர்க்கவே சனிராகு கேதுநட்பு
 எழிலான வியாழனுமே யாட்சியாகும்
கோர்க்கவே சுக்கிரனு முச்சமாகும்
 கொடியதோர் கேதுமே பகையதாகும்
பூர்க்கவே புதனுமே பகையதாகும்
 புண்மையுடன் கண்டுபலன் புகலுவாயே. 12

நட்சத்திரங்கள் நிற்கும் இராசிகள்

அசுவணி, பரணி, கார்த்திகை முதற்கால்-மேஷம்.

கார்த்திகையின் முக்கால், ரோகணி, மிருகசீரிடம்முன்னரை-ரிஷபம்.

மிருகசீரிடம் பின்னரை திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால்-மிதுனம்.

புனர்பூசம் பின்கால், பூசம், ஆயிலியம்-கர்க்கடகம்.

மகம் பூரம், உத்திரத்து முதற்கால்-சிங்கம்.

உத்திரம் பின்முக்கால், அஸ்தம், சித்திரை முன்னரை-கன்னி.

சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால்-துலாம்.

விசாகம் பின்கால் அனுஷம், கேட்டை-விருச்சிகம்.

மூலம், பூராடம், உத்திராடத்து முதற்கால்-தனுசு.

உத்திராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை-மகரம்.

அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்-கும்பம்.

பூரட்டாதி பின்கால், உத்திரட்டாதி, ரேவதி-மீனம்.

இராசிகளுக்குரிய நாழிகைகள்

மேஷம்	$4\frac{1}{4}$	துலாம்	5
ரிஷபம்	$4\frac{3}{4}$	விருச்சிகம்	$5\frac{1}{4}$
மிதுனம்	$5\frac{1}{4}$	தனுசு	$5\frac{1}{2}$
கடகம்	$5\frac{1}{2}$	மகரம்	$5\frac{1}{4}$
சிங்கம்	$5\frac{1}{4}$	கும்பம்	$4\frac{3}{4}$
கன்னி	5	மீனம்	$4\frac{1}{4}$

நாமநட்சத்திர எழுத்துகள்

சு	சே	சோ	ல	அசுவணி	1
லி	லு	லே	லோ	பரணி	2
அ	இ	உ	எ	கிருத்திகை	3
ஒ	வ	வீ	வு	உரோகணி	4
வே	வோ	க	கி	மிருகசீரிஷம்	5
கு	க	ங	ச	திருவாதிரை	6
கே	கோ	ஹ	கி	புனர்பூசம்	7
ஹூ	ஹெ	டொ	ட	பூசம்	8
டி	டு	டே	டோ	ஆயிலியம்	9
ம	மி	மு	மே	மகம்	10
மோ	டா	டி	டு	பூரம்	11
டே	டோ	ப	பி	உத்திரம்	12
பூ	ஷ	ண	ட	அஸ்தம்	13
பே	போ	ர	ரி	சித்திரை	14
ரு	ரே	த்த	த	சுவாதி	15
தி	து	தே	தோ	விசாகம்	16
ந	நி	நு	நே	அனுஷம்	17
நோ	ய	யி	யு	கேட்டை	18
யே	யோ	ப	பி	மூலம்	19
பு	தா	ப	ட	பூராடம்	20
பே	போ	ஜ	ஜீ	உத்திராடம்	21
கி	கு	கே	ஹோ	திருவோணம்	22
க	கி	கு	கே	அவிட்டம்	23
சோ	ஸ	ஸி	ஸூ	சதையம்	24
ஸ	ஸோ	த	தி	பூரட்டாதி	25
து	த	ஜ	ஞ	உத்திரட்டாதி	26
தே	தோ	ச	சி	ரேவதி	27

நட்சத்திரங்களைக்கொண்டு கணம்-மிருகம் விருட்சம்-பட்சி அறியும் வகை

நட்சத்திரம்	கணம்	மிருகம்	விருட்சம்	பட்சி	
அசுவணி	தேவகண	ஆண்குதிரை	எட்டி	இராஜாளி	1
பரணி	மானுஷம்	ஆண்யானை	செல்லி	காக்கை	2
கிருத்திகை	ராக்ஷசம்	பெண்ஆடு	அத்தி	மயில்	3
உரோகணி	மானுஷம்	ஆண்நாய்	நாவல்	ஆந்தை	4
மிருகசீரிடம்	தேவம்	பெண்சாரை	கருங்காலி	கோழி	5
திருவாதிரை	மானுஷம்	ஆண்நாய்	செங்கருங்	அன்றில்	6
புனர்பூசம்	தேவம்	ஆண்பூனை	மூங்கில்	அன்னம்	7
பூசம்	தேவம்	ஆண்ஆடு	அரசு	நீர்காக்கை	8
ஆயிலியம்	ராக்ஷசம்	ஆண்பூனை	புன்னை	கிச்சிலி	9
மகம்	ராக்ஷசம்	ஆண்எலி	ஆல்	ஆண்கழுகு	10
பூரம்	மானுஷம்	பெண்எலி	பலா	பெண்கழுகு	11
உத்திரம்	மானுஷம்	ஆண்எருது	அலரி	சிள்வண்டு	12
அஸ்தம்	தேவம	பெண்எருமை	ஆத்தி	பருந்து	13
சித்திரை	ராக்ஷசம்	ஆண்புலி	வில்வம்	மரங்கொத்தி	14
சுவாதி	தேவம்	ஆண்எருமை	மருதமரம்	தேனீ	15
விசாகம்	ராக்ஷசம்	பெண்புலி	விளா	செவ்வாற்குரி	16
அனுஷம்	தேவம்	பெண்மான்	மகிழ்	சாதகம்	17
கேட்டை	ராக்ஷசம்	ஆண்மான்	பிராய்	சக்கரவாளம்	18
மூலம்	ராக்ஷசம்	பெண்நாய்	மரா	செம்போத்து	19
பூராடம்	மானுஷம்	ஆண்குரங்கு	வஞ்சி	பசுண்டை	20
உத்திராடம்	மானுஷம்	மலட்டுப்பசு	பலா	வலியன்	21
திருவோணம்	தேவம்	பெண்குரங்	எருக்கு	நாரை	22
அவிட்டம்	ராக்ஷசம்	பெண்சிங்கம்	வன்னி	பொன்வண்டு	23
சதையம்	ராக்ஷசம்	பெண்குதிரை	கடம்பு	அண்டங்காக்	24
பூரட்டாதி	மானுஷம்	ஆண்சிங்கம்	தேமா	உள்ளான்	25
உத்திரட்டா	மானுஷம்	பெண்பசு	வேம்பு	கோட்டான்	26
ரேவதி	தேவம்	பெண்யானை	இலுப்பை	வல்லூறு	27

கோட்சாரம் ஆருடம் பார்க்கும் விதம்

யாதாமொருவர் வந்து கேட்கும் வேளைக்கு உரிய ராசியை லக்கினமாக வைத்து, அதற்கு 10-மிடம் காரியஸ்தானமாக வைத்து, அந்த அந்தப் பத்தாமிடத்திற்கு உரியவர் அந்தப் பத்தாமிடத்தி லிருந்து எந்த இடத்திலிருக்கின்றாரென்று கண்டு, அடியில் வரும் பலன்களைக்கொண்டு நல்லது கெட்டதுயென்று தெரிந்து சொல்லவும் இப்படிச் சொல்வதில் பார்க்கப்பட்டவரையும் சம்பந்தப்பட்டவரை யும் இடத்தையும் அனுசரித்துச் சொல்லவும்.

கோட்சார ஆருட பலன்கள்

விருத்தம்

செங்கதிரோ னைந்தாகச் சசியெட்டேற
  செவ்வாயும் புதனுமிரண்டா மிடத்தில்நிற்க
பொங்குமுடன் குருமூன்று புகரோனாறாய்
  பொருந்திட சனியும்லக் கினத்தில்நிற்க
பங்கமாம் சிறைகாவல் படுத்திவைக்கும்
  பாதையாம் நோயோடு பலக்கும்சண்டை
மங்கிய யிப்பலனைத் தருவானென்று
  மாராய்ந்து கோட்சார மறிந்துசொல்லே.

இ-ள். சூரியன் 5-மிடத்தினும், சந்திரன் 8-மிடத்தினும், செவ் வாய் புதன் 2-மிடத்தினும், வியாழன் 3-மிடத்தினும், சுக்கிரன் 6-மிடத்தினும், சனி இலக்கினத்தினுமிருக்க, சிறை காவல் வெகு நோய் சண்டை இம்மாதிரியான கஷ்ட பலன்களைத் தருவார் எ-று. 1

சூரியன்

சொல்லவே சூரியன் ஜென்மம் ரெண்டுச்
  சுபமிலா நாலைந்து யேழுயெட்டு
வல்லவே நவமீராறு தனிலிருந்தால்
  வயிறுநோ யலைச்சலொடு காரியக்கேடு
புல்லவே தலைவலி கண்ணோய் ஊஷ்ணம்
  பொல்லாத கனவோடு சத்துருபீடை
தொல்லையா மிருப்பிடம்விட் டேகச்செய்யும்
  துலங்கிய மாடாடுஞ் சேதமாமே.

இ-ள். சூரியன் ஜென்மம் 2-4-5-7-8-9-12 இந்த இடங்களி லிருக்க வயிற்றுநோய், அலைச்சல், காரியக்கேடு, தலைவலி, கண்ணோய், ஊஷ்ணம்; கனவுகாணல், சத்துருவால்பீடை, இருப்பிடம் விட்டுப் போகும்படிச் செய்யும், மாடு ஆடு இவைகள் சேதமாகும் எ-று. 2

இதுவுமது

ஆகவே கதிரவனு மூன்றுறுபத்து
அரியபதி னொன்றினிலே யமர்ந்துநிற்கில்
பாகமா மதிகசுகம் செல்வமோங்கும்
பண்பாகக் கர்ப்பமுண்டாம் வியாதிநீங்கும்
தாக்மா மெதிரிதனை ஜெயங்கள்செய்யும்
தக்கநீதா ரீதலொடு யிரக்கமுண்டாம்
ஏகவே யிராசியது கடகமானால்
எடுத்த காரியமாகு மியம்புமாதே.

இ-ள். சூரியன் 3-6-10-11 இந்த இடங்களிலிருக்கச் சுகமுண்டாகும், செல்வம் பெருகும், கர்ப்பமுண்டாகும், வியாதியானது நீங்கும், சத்துருவை ஜெயம்பண்ணும், கொடுத்தல் இரக்கமுண்டாம், மேற்கூறிய யிடம் கடகவிராசியானால் நினைத்த காரியம் முடியும் எ-று. 3

மாதென செங்கதிரோ னாட்சிநட்பில்
மருவிடப் பலவிதப் பொருளுமுண்டாம்
போதென நாடெலாந் தீதுநீங்கும்
பெரியோர்கள் நேயமொடு கீர்த்தியுண்டாம்
ஏதெனப் பகைநீசந் தன்னில்நிற்க
இயம்பொணாப் பலவிதப் பிணியுமுண்டாம்
வாதென குளிரோடு சூடும் பித்தம்
வாதிக்கு மென்றுநீ வரைகுவாயே.

இ-ள். சூரியன் ஆட்சி நட்பு இவைகளிலிருக்கப் பலவிதமான பொருள்களுமுண்டாம், நாட்டிலுண்டாகிய தீதானது நீங்கும், பெரியோர்களின் நேயமுண்டாகும், கீர்த்தி பெருகும், பகைநீசத்திலிருக்க பலவிதமான பிணி உண்டாகும், அத்துடன் குளிர், சூடு, பித்தம் இவைகள் பாதிக்கும் எ-று. 4

சந்திரன்

சாற்றவே சந்திரனு மிரண்டுநான்கைந்து
சரியான யெட்டொன்பான் விரையம் நிற்க
ஏற்றதோர் மனைவியொடு பிள்ளைகட்கும்
இயம்பொணா வயிற்றுநோய் பாதைசெய்யும்
தோற்றவே சிறைப்பாடு கிலேசமோடு
தொல்லையாம் மூல வியாதிகாணும்
ஆற்றவே களவு மூதேவிவாசம்
ஆகுமே நிஷ்டூர மறியமின்னே.

இ-ள். சந்திரன் 2-4-5-8-9-12 இந்த இடங்களிலிருக்க மனையாள் பிள்ளைகட்கும் வயிற்றிநோயுண்டாம், சிறைபடச் செய்யும், கிலேசமுண்டாகும், மூலவியாதி காணும், களவுபோம், மூதேவி வாசமாகும், நிஷ்டூரமுண்டாகும் எ-று. 5

மின்னவே ஜென்மமோடு மூன்றாறு
மிக்க யேழ்பத்து பதினொன்றில் மேவ
இன்னிய யிந்திரன்போல் வாழ்வுமுண்டாம்
எழிலான சந்தானங் குதிரை யானை
உன்னிய தண்டிகை பதார்த்த முண்டாம்
ஓங்கிடும் மந்திரமுந் தந்திரந்தான்
பன்னிய வைத்தியமொடு வாதந்தானும்
பலிக்குமெனக் கோட்சாரப் பலனைக் கூறே.

இ-ள். சந்திரன் ஜென்மம் 3-6-7-10-11 இவ்விடங்களிலிருக்க இந்திரன்போல் வாழ்வுண்டாகும், சந்தான விருத்தியாகும், குதிரை யானை தண்டிகை பதார்த்தமுண்டாம், மந்திரம் தந்திரம் வைத்தியம் வாதம் இவை முதலானதும் நாளுக்கு நாள் பலிதமாகி ஓங்கி வரும் எ-று. 6

கூறவே சந்திரனட்பாட்சி யுச்சம்
கோதியே யேறியே நிற்கக் கேளாய்
பேறவே நிதிபெறும் பூஷணங்கள்
பெட்புறும் விவாகமும் புகழாய்க்கூடும்
சீறவே பகைநீசந் தனிலிருக்கச்
செப்பொணு துன்பமொடு ஜலத்திற் கண்டம்
நேறவே ஜலவியாதியால் தீங்கும்
நிந்தையு மணுகுமென நிகழ்த்து வாயே.

இ-ள். சந்திரன்-நட்பு-ஆட்சி-உச்சம் இந்த ஸ்தானங்களில் ஏறி நிற்க நிதிபெறும், பூஷணாதிக ளுண்டாகும், விவாகங்கூடும், பகை, நீசத்திலிருக்க ஜலத்தினாற் கண்டமும், ஜலவியாதியும் நிந்தையும் நேரும் எ-று. 7

செவ்வாய்

வாயென செவ்வாயும் ஜன்மம் ரண்டும்
வரியநா லெட்டேழு வைந்து வொன்பான்
தோயென பத்து பனிரண்டில் மேவ
தோஷமாங் கொடுந்துன்பம் வழக்கு துக்கம்
பாயென தேகநோய் சிறுகு சண்டை
பாவிய உதிரமுக் கிரமானந்தி
நேயென யிளப்பு நோய் குடைச்சல் பாதை
நேருமே யிவையெலாம் நீடிமாதே.

இ-ள். செவ்வாய் ஜென்மம் 2-4-5-7-8-9-10-12 இந்த ஸ்தானங்களிலிருக்கக் கொடுந்துன்பம், வழக்கு, துக்கம், தேக நோய், சிலுகு, சண்டை உதிரம், உக்கிரமானதீ, இளப்புநோய், குடச்சல் இவ்விதமான துன்பங்கள் நேரும் எ-று. 8

நீடிய செவ்வாயு மூன்றோடாறு
 நிலையான பதினொன்றிலே நிற்கக்
கூடிடுங் கலியாண மீகையோடு
 குல்விய சந்தானம் பூமிசேரும்
பாடிய மனைவருத்து பயிர்விருத்தி
 பண்பான வாழ்வாபரண முண்டாம்
தேடிய நெய்பாலுஞ் சகலமுந்தான்
 இகழ்பெறவே சித்தியாமென்று சாற்றே.

இ-ள். செவ்வாய் 3-6-11-ல் நிற்க கலியாணங்கூடும், ஈகையுண்டாகும், சந்தானமுண்டு, பூமிவருத்து, மனைவருத்து, பயிர்விருத்தியும் ஆபரணாதிகளும் நெய் பால் சகலமும் சித்தியாகும் எ-று. 9

சாற்றவே செவ்வாயு மாட்சிநட்பு
 சிறந்ததோ ருச்சமதில் செயலாய் நிற்க
நேற்றியாம் மணிமுத்து மாதர் தம்மை
 நிலையாக நாளும் நேசித்துச் சேர்வான்
தூற்றவே பகைநீசம் தனிலே நிற்கில்
 துன்பமாம் சுரமோடு சண்டை யுண்டாம்
ஆற்றவே கேடும் வந்தணுகு மென்றே
 ஆராய்ந்து பலாபலன்க ளறைகுவாயே.

இ-ள். செவ்வாய் ஆட்சி-நட்பு-உச்சத்தில் ஏறிநிற்க மணி முத்து மாதரைச் சேர்வான், பகை நீச்சத்திலிருக்க துன்பமாகிய சுரமும், பயித்தியமாகும், மனதிற்குக் கேடுவரும் எ-று. 10

புதன்

அறையவே புந்தியுமே ஜென்மம் மூன்று
 அடுத்தநா லைந்தேழு நவமீராறில
குறையவே யிருந்திடிலோ தீமை துக்கம்
 குற்றமா மறிப்புதூது கீல்பிடிப்பு
உறையு முற்றூர் கேடு பொருளும் சேதம்
 உற்றிடும் நிலவழக்கு சதுரு சண்டை
பறைவிய பலவித தொந்தரவும் நேரும்
 பறிவாய்க் கண்டுபல னறைகுவாயே.

இ-ள். புதன் ஜென்மம் 3-4-5-7-9-12 இந்த ஸ்தானங்களி லிருக்க தீமை, துக்கம், அறிப்பு, தாது, கீல்பிடிப்பு, உற்முர்கேடு, பொருள்சேதம், நிலவழக்கு, சத்துருக்களால் சண்டை, பலவிதமான தொந்தரவும் வந்துநேரும் எ-று. 11

வாயென புந்தியுமே வாக்காறெட்டு
வளமான பத்து பதினொன்றில் வாழ
போயென யுத்தியோகம் புத்திர ருண்டாம்
புகழாக வுறவினர் வரவோ டின்னம்
நேயென வஸ்திர பூஷணமும் பூசை
நீடியமா தீர்த்த மாடல்கல்வி
தோயென சகல நன்மைகளு முண்டாம்
தொகுப்பாகக் கண்டுபலன் வகுத்திடாயே.

இ-ள். புதன் 2-6-8-10-11 இந்த ஸ்தானங்களி லிருக்க உத்தி யோகம், புத்திரசந்தானம், உறவினர்வரவு, வஸ்திரபூஷணம், மாதீ ரத்தமாடல், சகல நன்மையு முண்டாம் எ-று. 12

வருக்கவே புந்தியுமே யாட்சி நட்பு
வளமான உச்சமதி லமர்ந்து வாழ
பருக்கவே பால் பசும் பூமிலாபம்
பண்பாக வந்துமே பலிதமாகும்
தொருக்கவே பகைநீசந் தனிலே நிற்க
தோஷமாந் தொந்தர வோடு யின்னம்
திகைக்கவே பலவித சுரங்களாலே
தீதென யிப்பலனைத் திடமாய்ச் சொல்லே.

இ-ள். புதன்-ஆட்சி-நட்பு-உச்சம் இந்த ஸ்தானங்களில் இருந்து வாழ பால் பசு பூமி இவைகள் லாபமுண்டாம். பகை நீசத்திலிருக்கத் தொந்தரவும் பலவிதசுரங்களால் பாதையுண்டாம் எ-று. 13

வியாழம்

சொல்லவே பொன்னவனும் ஜென்மம் மூன்று
சுகமான நாலாறு யெட்டு பத்து
வல்லவே பனிரண்டி லிருந்து வாழ
வலைச்சலொடு சத்துரு நிஷ்டுர வாதம்
புல்லவே சகோதரர் தாய் மனையாள்
பிள்ளைகளும் பகையாவர் பித்தமேலாம்
அல்லவே மன்னரால் பதியுஞ் சேதம்
அறிவையர் தங்களால் வியாதி யாமே.

இ-ள். வியாழன் ஜென்மம் 3-4-6-8-10-12 இந்த ஸ்தானங்களி லிருக்க அலைச்சல்படச்செய்யும், சத்துருஉண்டாகும், நிஷ்டூரமாகும்

வாதநோயணுகும், சகோதரர் தாயார் மனையாள் மக்கள் பகையாவர், மன்னரால் பதிசேதமாகும், மாதரால் வியாதியும் பித்தமுமுண்டாம் எ-று. 14

ஆமென வியாழனுமே யிரண்டு ஐந்தேழ்
அடுத்த வொன்பது பதினொன்றில் வாழ
தாமென செல்வமோடு குதிரை யுண்டாம்
தழைக்குமே குடை தர்ம தானமோங்கும்
நாமென தாய் தகப்பன் துணைவராலே
நன்மையா மருமையொடு பெருமை யுண்டாம்
போமென யரசற்கு நல்லோ னாக்கும்
புகழ் சோபனம் நடக்கும் பூமியாள்வான்.

இ-ள். வியாழன் 2-5-7-9-11 இந்த ஸ்தானங்களி லிருக்க செல்வமோங்கும், குதிரைவாகன முண்டாகும், குடை தழைக்கும், தருமம் தானம் செய்விக்கும், தாய் தகப்பன் துணைவரால் நன்மை யுண்டாகும், அருமை பெருமையுமாகும், அரசர்க்கு நல்லவனாகுவன், சுப சோபனம் நடக்கும், பூமியாள்குவான் எ-று. 15

ஆளவே குருவு நட்பாட்சி யுச்சம்
அன்பாக வதிலமர்ந்து வாழ்வானாகில்
வேளவே ராஜபோகங்க ளோடு
வேணதோர் மாதர்கள் சேர்க்கை யுண்டாம்
தாளவே பகை நீசமாக நிற்கில்
தாங்கிய வறுமையொடு மனையாள் சேதம்
கோளவே தேடிய பொருளும் போகும்
குற்றமா மிப்பலனைக் கூறுவாயே.

இ-ள். வியாழன் ஆட்சி-நட்பு-உச்சம் இந்த ஸ்தானங்களி லிருக்க இராஜபோகமும், வெகுமாதர்கள் சேர்க்கையு முண்டாகும், பகை நீசத்திலிருக்க வறுமை யுண்டாகும், மனையாள் சேதமாவாள், அத்துடன் பொருளும் சேதமாகும், இம்மாதிரி குற்றமாகிய பலனைத் தருவர் எ-று. 16

சுக்கிரன்

பார்க்கவே சுக்கிரனும் ஜென்மம் ரண்டு
பரிவான மூன்று நான்கைந் தெட்டோடு
ஏர்க்கவும் பதினொன்று பனிரண்டேற
எழில் பொன்னும் வெள்ளிசெம்பு வரவுமாகும்
கோர்க்குமே நன்மொழியு மதிகவித்தை
குலவிய புத்தியொடு யன்னதானம்
சேர்க்கவே லட்சுமி கடாட்ச முண்டாம்
சீராக நன்மனைவி வந்து சேர்வாள்.

இ-ள். சுக்கிரன் ஜென்மம் 2-3-4-5-8-9-11-12 இந்த ஸ்தானங்களிலிருக்க பொன்-வெள்ளி-செம்பு வருத்தாகும், நன் மொழியுண்டாகும், வித்தைபலிதமாகும் புத்திபெருகும், அன்ன தானம் செய்விக்கும் இலட்சுமி கடாட்சமுண்டாகும், நல்ல மனை யாள் வந்து சேர்வாள் எ-று. 17

சேரவே சுக்கிரனு மாறேழ்பத்தில்
சிறியே யேறியே யிருப்பானாகில்
கூடவே பொல்லாத துன்பமோடு
குற்றமாந் துர்க்குறி கிலேசம் சோர்வு
நேருமே வயிற்று நோய் பிடரிநோயும்
நீரழிவோடு க்ஷயம்தீரா நோயும்
பேரவே பொருள் சேதம் ஜலத்தில் கண்டம்
பேதமாந் தீராநோய் பிடிக்குமென்னே.

இ-ள். சுக்கிரன் 6-7-10 இந்த ஸ்தானங்களி லிருக்க துன்ப முண்டாகும், துர்க்குறியோடு கிலேசம் சோர்வு உண்டாம், வயிற்று நோய் பிடரிநோய், நீரழிவு, க்ஷயம், இப்பேர்க்கொத்த வியாதிகள் பீடிக்கும், பொருள் சேதமாகும், ஜலத்தாற் கண்டம் நேரும் எ-று. 18

எண்ணவே சுக்கிரன் நட்பாட்சி யுச்சம்
ஏறிடில் பூமியது லாபமுண்டாம்
பன்னவே ராஜயோகக்க ளுண்டாம்
பகைநீசந் தனிலிருக்கப் பகரக் கேளாய்
மன்னிய மனையாளும் மைந்தர் தாமும்
மங்கிடும் மாறாத துக்கத்தோடும்
கன்னியவாகனம் பொருளுஞ் சேதம்
காணுமெனக் கண்டபலன் கழறுவாயே.

இ-ள். சுக்கிரன் நட்பு-ஆட்சி-உச்சம் இந்த ஸ்தானங்களிலிருக்க பூமிலாப முண்டாகும், இராஜயோகமுண்டாகும், பகைநீச்சத்தி லிருக்க மனையாளும் மைந்தர்களும் மங்கிடுவார்கள், வாகனமும் பொரு ளும் சேதமாகும் எ-று. 19

சனி

வாயென சனியவனும் ஜென்மம் ரண்டு
வருந்திய நாலைந்து யேழு யெட்டு
தாயென நலம் பத்து பனிரண்டேற
தனச்சேத முயிர்ச்சேதம் சிறையு முண்டாம்
தேரயென பங்கம் தன்னறிவால் மோசம்
துலக்குமனை மாடு நஷ்ட மறுதேச வாசம்

ஆயெனக் கைகாலில் வாதமோடு
அடுத்திடும் பித்தநோ யறைகுவாயே.

இ-ள். சனி ஜென்மம் 2-4-5-7-8-9-10-12 இந்த ஸ்தானங்களி லிருக்க தனச்சேதம் உயிர்ச்சேதமாவதோடு தனிச்சிறைபடவைக் கும், மானபங்கமாகும், தன்னறிவினாலேயே மோசம் போகச்செய் யும், மனையும் மாடும் நஷ்டமாகும், மறுதேசம் போகச்செய்யும், கைகாலில் வாதநோயணுகும், பித்தமதிகரிக்கும் எ-று. 20

அறையவே சனியவனு மூன்றுறேடு
ஆனபதி னொன்றினிலே யமர்ந்திருக்க
நிறையவே பாக்கியமும் கீர்த்தி செல்வம்
நீடும் வாகனமிடம் பொருளு மேவல்
உறையவே லட்சுமி கடாட்ச முண்டாம்
உறுதியா யெடுத்த காரியங்க ளாகும்
மறையவே வெற்றி தண்டிகையி னேடு
மகிழ்ச்சியாங் குதிரையு முண்டா மென்னே.

இ-ள். சனி 3-6-11 இந்த ஸ்தானங்களி லிருக்க, பாக்கியம் பெருகும், கீர்த்தியுண்டாகும், செல்வமோங்கும், வாகனமோடு இடம்பொருள் ஏவலுமுண்டாகும், இலட்சுமிகடாட்சமுண்டாகும், எடுத்த காரியமாகும், வெற்றியோடு தண்டிகையும் குதிரையும் உண் டாம் எ-று. 21

என்னவே சனியும் நட்பாட்சி யுச்சம்
எழிலான ஸ்தானமதி லிருப்பானகில்
கன்னவே லாபமுண்டு கீர்த்தியுண்டு
கனமான பூமிலாப முண்டாம்
பன்னிய பகைநீசத் தன்னில் நிற்கில்
பாதையாம் பகையாகும் பலவார் துக்கம்
உன்னிய கொடுமையொடு கோளுமுண்டு
உற்றதோ ரிப்பலனை யோதுவாயே.

இ-ள். சனி ஆட்சி நட்பு உச்சம் இந்த ஸ்தானங்களிலிருக்க லாபமும் கீர்த்தியு முண்டாகும், பூமி கிடைக்கும், பகை நீசத்தி லிருக்கப் பாதையும், பகையும், பலவார் துன்பமும், கொடுமையும், கோளும், உண்டாம் இவ்வகைப் பலன் தருவான் எ-று. 22

இராகு-கேது

ஓதவே யிராகுகேது யிரண்டு நான்கில்
உற்றதோ ரெட்டைந்து பத்தீராறும்
போதவே லக்கினமா மதிலிருக்கில்
பொல்லாது பிதுர்க்களுமே மாணமாவார்

ஏதவே மனையாட்டி பூமிநாசம்
இராஜருட கிருபையு மில்லா தாகும்
நீதவே வைத்தியனாலே மோசம்
நிந்தையுஞ் சகோதரர் சத்துருத்துவமாமே.

இ-ள். இராகு கேது இவர்கள் 2-4-8-5-10-12 லக்கினம் இந்த ஸ்தானங்களி லிருக்க பிதுர்க்கள் சாவார், மனையாட்டியும் பூமியும் நாசமாகும், இராஜகிருபையின்மையாகும், வைத்தியனால் மோசம் நேரும்; சகோதர சத்துருத்துவ முண்டாகும் எ-று. .. 23

ஆமென யாறு பதினொன்றுயேழோ
அடைவாக மூன்று வொன்பான் பணிகள் நிற்க
தாமெனப் பெண்டிரும் மக்கள் தானும்
தழைத்துமே செழிப்போடு வாழுவார்கள்
நாமெனக் கலியாணம் நன்றாய்க்கூடும்
நண்ணியக் காரியஞ் சித்தியாகும்
வேமென யன்னதானங்க ளோடு
வெகுசவுக்கிய முண்டாம் விளம்பு வாயே.

இ-ள். 6-11-7-3-9 இந்த ஸ்தானங்களில் இராகு கேது இவர்க ளிருக்க பெண்டிரும் மக்களும் தழைத்து செழிப்போடு வாழ்வார்கள், கலியாணங்கூடும், நினைத்தகாரியம் சித்தியாகும், அன்னதானம் செய் விக்கும், சவுக்கியமுண்டாகும் எ-று. 24

வாமென யிராகு வொடு கேதுதானும்
வளமாக நட்பாட்சி யுச்சம் நிற்க
நேமென பூமிலாபம் பொருளு முண்டாம்
நீடிய மணமதுவும் நன்றாய்க கூடும்
தோமெனப் பகைநீசந் தனிலே நிற்க
தோஷமாம் பாம்பு முதல் கெட்டதான
ஆமென விஷங்கள்து தீண்டுமப்பா
ஆறைந்தி லிருந்திடிலோ யடுக்கும் வியாதி.

இ-ள். இராகு-கேது இவர்கள் நட்பு-ஆட்சி-உச்சம் இந்த ஸ்தா னங்களிலிருக்க பூமிலாபமும் பொருளும் உண்டாகும். மணங்கூடும். பகை நீசத்திலிருக்க பாம்பு முதலிய கெட்ட விஷங்கள் தீண்டும். அன்றியும் இவர்கள் 6-5-ஆமிடமாக விருக்க வியாதி உண்டாகும். இதை ஆராய்ந்து சொல்லவும் எ-று. 25

எந்த கிரகங்களேனும் உச்சத்தில் நின்ற பலன்

(நொண்டிச்சிந்து)

காணவே நவக்கோளில்-எதுவேனும்
  காரிய உச்சமதில் ஏறியேநிற்க
பூணும் நற்புகழு முண்டாம்-அறிவும்
  புத்தியுஞ் சித்தியுந்தான் தோன்றும்
வேணமெய் களிப்புடனே-திரவியம்
  வேண்டிய மட்டும் வந்து சேர்ந்திடுமாம்
தோணவே நினைத்தவையுங்-கைகூடும்
  துலங்கிய யிவைமுதல் நடக்குமென்னே-தந்தின.

எந்த கிரகங்களேனும் நீச்சத்தில் நின்ற பலன்

என்னவே நவக்கோளில்-காண
  எக்கோளேனும் நீசமேறி நிற்க
கன்னிய மதுகுலையும்-பொல்லா
  கவலையுடன் பிணிதானணுகும்
மன்னிய தனதான்னியம்-மாடு
  மருவிய பலபொருள் சேதமாகும்
உன்னிய தரித்திரமும்-கூட
  உற்றிடுமென்று பலனுரைத்திடுவாய்-தந்தின.

எந்த கிரகங்களேனும் ஆக்ஷியில் நின்ற பலன்

உரைத்திட நவக்கோளில்-எதுவேனும்
  உற்றதோ ராட்சியினி லுகந்து நிற்க
வருத்தமாம் நோய்தீரும்-பொல்லா
  வருந்திய பயமுந்தான் தீரும்
பொருத்தமாம் சுகங்கீர்த்தி-மிகவாம்
  புகன்ற கருமமது கைகூடும்
திருத்தமாங் குறித்தவையும்-உடனே
  தான்வந்து சேருமெனக் கண்டுரைப்பாய்-தந்தின.

எந்த கிரகங்களேனும் நட்பில் நின்ற பலன்

கண்டிட நவக்கோளில்-எதுவெனுங்
  காணவே நட்பினிலே களித்து நிற்க
உண்டெனக் கலியாணங்-கூடும்
  உடம்பினில் வாய்த்தபிணி யகன்று விடும்
பண்டா முறவினர்கள்-நேசம்
  பருகிடு மாசர்கள் மகிழ்வாகும்
விண்டிடப் பாபர்களும்-பார்க்க
  விளம்பிய யிப்பல னழிந்தும்விடும்-தந்தின.

எந்த கிரகங்களேனும் பகையில் நின்ற பலன்

விடுமென நவக்கோள்கள்-எதுவெனும்
விளம்பிடும் பகைதனி லமர்ந்து நிற்கத்
தொடுமென வொழியாத-துக்கமுடன்
தொல்லையாம் நோய்விளையும் தேகமதிலே
படுமென பரதேசம்-போவான
பாவிய நிதியுஞ் சிலவாகும்
கெடுமெனப் பாபர் பார்க்க-மரணம்
கிட்டிடு மென் றுநீ தொட் டுரைப்பாய்-தந்தின.

சுபக்கிரக சம்பந்த பலன்

விருத்தம்

மன்னுஞ் சுபக்கிரக சம்பந்தமாக
மருவிடும் போக பாக்கியங்களுண்டாம்
உன்னிய செலிப்போடு கீர்த்திதானும்
ஓங்கிடுந் திரவியங்கள் கிடைக்கும்
பன்னிய சிநேகிதர் புத்திரர் தங்கள்
பழியான சலிப்பது வுடனே நீங்கும்
நன்மைய மடந்தையர் போகந் தானும்
நலமாக மிகநடக்கு மென்று சாற்றே.

இ-ள். சுபக்கிரகசம்பந்தமாயிருக்க போகபாக்கியமுண்டாகும், செலிப்புடன் கீர்த்தியுண்டாம், திரவியங் கிடைக்கும், சிநேகிதர் புத்திரள் இவர்களுடைய சலிப்பானது நீங்கும், மடந்தையர்கள் போகம் மிகவுண்டாகும் எ-று. 1

பாபக்கிரக சம்பந்த பலன்

சாற்றவே பாபக் கிரகங்கள் தாமும்
சம்பந்தப் பட்டுமே யிருப்பா ராகில்
ஏற்றவே தேக நோய் தரித்திரஞ் சேரும்
எழில் நிதியும் பரிபோகு மிமிசையாகும்
தோற்றவே நெஞ்சமது கலக்கமாகும்
தொடுக்கு மோர் கர்மமது சிதறிப்போகும்
போற்றவே பிரியாத வுறவு தானும்
பொல்லாங்காய்ப் பிரிந்துவிடும் புகலுவாயே.

இ-ள். பாபக்கிரக சம்பந்தமாக யிருக்க தேகத்தில் நோய் காணும், தரித்திரஞ்சேரும், நிதிபறிபோகும், இமிசையானது உண்

டாகும், நெஞ்சம் கலக்கும், செய்யும்படியான கர்மமானது சிதறிப் போகும், பிரியாத வுறவும் பிரிந்துபோகும் எ-று. 2

இராகு கேது சம்பந்த பலன்

புகலவே ராகுகேது சம்பந்த மாகில்
பொல்லாத விரணமுடன் பெருகும் நோயும்
அகலவே கடன்பட்டு யலையச் செய்யும்
அழகுபோம் தேடியப் பொருளும் போகும்
இகலவே தீராத வழக்குண் டாகும்
எத்தொழிலைச் செய்தாலும் நஷ்டங்காணும்
தகலவே யரசருட பகையும் நேரும்
தானறிந்து யிப்பலனை சொல்லுவாயே.

இ-ள். இராகு கேது சம்பந்தமாகில் விரணமோடு நோயானது பெருகும், கடன்பட்டு அலையும்படியாகச் செய்யும், அழகுபோகும், பொருளும் போகும், தீராத வழக்குண்டாகும், எந்தகாரியஞ் செய்தாலும் நஷ்டங்காணும், அரசருடைய பகை நேரும் எ-று. 3

இராசியாதிபதி வக்கிரித்த பலன்

சொல்லவே லக்கினாதி வக்கிரிப்பா னாகில்
சுகமில்லை கொண்ட பொரு ளழிந்துபோகும்
புல்லவே குடிவிட்டு ஓடச்செய்யும்
பொருந்திய மனைமாடு சேதமாகும்
அல்லா மலைச்ச லொடு பழியும் நேரும்
அன்புள நேசமது பிரிந்துப் போகும்
தொல்லையாம் தொடுவழக்கு வந்து நேரும்
தோஷமா மிப்பலனைத் தொகுத் திடாயே.

இ-ள். இராசியாதிபதி வக்கிரிப்பாராகில் சுகமானது யில்லை, கொண்டபொருள் அழிந்துபோகும், குடிவிட்டு ஓடும்படியாகச் செய்யும், மனைமாடு சேதமாகும், அலைச்சலோடு பழிநேரும், அன்பாகிய நேசமானது பிரிந்துபோகும், தொடுவழக்குண்டாகும், இவ்வாறான தோஷபலன்களைக் கொடுக்கும் எ-று. 4

திரேகணப் பலன்

தொகுத்திடத் திரேகணப் பலனைக் கேளும்
துலங்கிடு முயர்வு நற்கால மாகும்
பகுத்திட யிழந்த பொருள் வந்து சேரும்
பருகிடுஞ் ஸ்திரீயோடு அன்புண்டாகும்

வருக்கும் நல்வினையோடு மித்திரவாசை
  வளமான நற்கருமம் திருமணங்கள்
புருக்கவே சம்போகம் சவுக்கியங்கள்
  புவிராஜர் சினேகமது வாகுமென்னே.

இ-ள். திரேகணப்பலன் யாதெனில், உயர்வுதரும், நற்கால முண்டாகும், இழந்துபோன பொருள் வந்துசேரும், ஸ்திரீயோடு அன்புண்டாகும், நல்வினை செய்விக்கும், மித்திரர்மேல் ஆசைபெருகும், நற்கருமம் நடக்கும், திருமணங்கூடும், சம்போகமும் சவுக்கியமும் உண்டாகும், அரசர்களுடைய சிநேகஞ் செய்விக்கும் எ-று. 5

அஸ்தமனமான பலன்

என்னவே யஸ்தமன மாயிருக்கில்
  இயம்பிடுஞ் சுகமிலாச் சாவகாசம்
மன்னிய மனதினில் திகிலுண் டாகும்
  மருவிய செல்வமதுக் கேடதாகும்
பன்னிய மாதரால் கலக்க மோடுப்
  பழிச்சுமரு மரசருடப் பகையும் நேரும்
கன்னிய மனைவியரும் சேதமாவாள்
  காணபல தேசமது திரியச் செய்யும்.

இ-ள். அஸ்தமனமாக விருக்கில், அதன்பலன் யாதெனில் சுகமில்லாத துஷ்ட சாவகாசம் செய்விக்கும், மனதில் திகிலுண்டாக்கும், செல்வங்கெடும், மாதர்களால் கலகம் நேரும், பழிசுமரும், அரசர்களுடைய பகைநேரும், மனைவியர் சேதமாவாள், தேசசஞ்சாரியாகத் திரிவான் எ-று.
6

அஸ்தமன நிவர்த்திப் பலன்

செய்யவே யஸ்தமன நிவர்த்தி யாகில்
  செயலாகு மிப்புவிக்குள் கீர்த்தி யாகும்
உய்யவே பொன்னோடு யிரத்தினங்கள்
  உற்றதோர் தேக சௌக்கியங்க ளாகும்
பையவே ரதகஜ துரக மோடுப்
  பதாதி யுண்டாம் பகைவரையும் வெற்றி செய்யும்
துய்யவே யுத்தியோகம் ஜெயப்பிரதாபம்
  துலங்கும் புருஷார்த்தம் சிறை மீட்டலாமே.

இ-ள். அஸ்தமனம் நிவர்த்தியாகில் அதன்பலன் யாதெனில், இப்புவியெங்கும் கீர்த்தி பெருகும், பொன் இரத்தினம் கிடைக்கும், தேகசவுக்கிய முண்டாகும், இரதகஜ துரகமும் பதாதியுமுண்டாகும், பகைவரை வெற்றி செய்விக்கும், உத்தியோகம் பலக்கும், ஜெயப்பிரதாபமாகும், புருஷார்த்தமுண்டு, சிறைமீளும் எ-று. 7

திரேகாணப் பங்க பலன்

ஆமென திரேகாணப் பங்கமாகில்
அடுக்குமே சுரம்பொருள் நாசமாகும்
தாமென பிள்ளைக்குயிர் சேதமோடு
தனநஷ்ட மபஜயம் மனக் கிலேசம்
வாமென வியாகூலம் பார்ப்பவர்கள்
வரக்காட்சி தரிசன மோடு பின்னம்
நாமெனப் பொல்லாத நடக்கையாகும்
நானிலத்திற் கண்டு பலன் நவிலுவாயே.

இ-ள். திரேகாணப் பங்கமாகில் சுரங்காணும், பொருள் நாசமாகும், பிள்ளைக்கு உயிர்ச்சேதம் வரும், நஷ்டமுண்டாகும், அபஜயமாகும், மனக்கிலேசமும் வியாகூலமு முண்டாகும், பார்ப்பவர்கள் வரக்காக்ஷி தரிசனமாகும், பொல்லாப்பான காரியம் நடக்கும் எ-று.

இராசியாதிபனை குருபார்க்கும் பலன்

வாயென யிராசியாதி யோனைத் தானும்
வண்மையுடன் குருபார்க்க உத்தியோக லாபம்
சேயென திரவிய லாப மோடு
செயலாக ஸ்தான லாபங்க ளுண்டாம்
நேயென சுக்கிரன் புதன்சே யாகில்
நிந்தையிலை நீடியே ஜெயங்க ளாகும்
தோயென் சூரியன் பாம்பு மந்தன்
தானுகில் நஷ்டபல னென்று சாற்றே.

இ-ள். இராசியாதிபனை குரு பார்ப்பாராகில் உத்தியோக லாபமாகும், திரவியங் கிடைக்கும், ஸ்தானபல னுண்டாம், ஆனால் சுக்கிரன்-புதன்-செவ்வாய் பார்க்கில் நிந்தை என்பது யில்லாமல் எந்த காரியமும் ஜெயமாகும், சூரியன்-இராகு-கேது-சனி இவர்கள் பார்க்கில் நஷ்ட பலன்கள் நடக்குமெனப் புகல்வாய் எ-று. 9

சுபரும் பாபரு மிருத்தலின் பலன்

சுபரும் பாபரு மிருத்தற் பலனைக் கேளாய்
சுகசம்ப வந்தன லாப முண்டாம்
தபமாகப் பாபக்கோ ளிருக்கு மாகில்
தானினைத்த காரியமுங் கைகூடாது
உபமெனப் பொரு ளதுவும் சேதமாகும்
உற்றதோர் கெடுதிக ளனேகங் காட்டும்
இபமெனதேக அசௌக்கிய முண்டாம்
இப்பலனைக் கண்டுபல னியம்பு வாயே.

இ-ள். சுபரும் பாபரு மிருத்தலின் பலன் யாதெனில், சுக சம்பவ முண்டாகும், தனலாபங் கிடைக்கும், பாவக்கோளிருக்கு மாகில் நினைத்த காரியம் கைகூடாது, பொருள் விரயமாகும், தேக அசௌக்கிய முண்டாம் எ-று. 10

இராசியாதிபதி வக்கிரித்து நின்ற பலன்

இயம்பவே ராசியாதிப் பதியோன் தானும்
எதியலே வக்கிரித்து நிற்பா னாகில்
கயம்பவே பொருள் நாசம் குடிவிட் டோட்டும்
கலகமா யினங்களுடன் சேரொட் டாது
வயம்பவே செய்யுமோர் தொழிலும் போகும்
வாய்க்குமோர் கோபமதால் கெடுதிநேரும்
நயம்பவே நாணயங் கெடுதி யாகும்
நன்றாக யிப்பலனை நவில்வாய் மாதே.

இ-ள். இராசியாதிபதி வக்கிரித்துநின்ற பலன் யாதெனில், பொருள் நாசமாகும், குடிவிட்டோடச் செய்யும், இனத்தார்களோடு சேரவொட்டாது, கோபத்தினால் கெடுதி நேரும், நாணயங் கெடும் எ-று. 11

ராசியாதிபனுக்கு திரிகோணங்களில் சுபர் நின்ற பலன்

மாதென யிராசியாதிபதி பதியோனுக்கு
மருவி திரிகோணமதில் சுபரிருக்க
போதென யிரண்டு பாவக் கோளைநிற்க
பெரும் பிணியோடு பொருள் சேதமாகும்
ஏதென நினைத்த காரியமு மாகா
இராசி யாதியாறெட்டு யீராறு நிற்க
ஓதெனக் குற்றமாம் பலனை காட்டும்
உற்ற சுபற்கு சுபமா முரைத் திடாயே.

இ-ள். இராசியாதிபனுக்குத் திரிகோணங்களில் சுபர்கள் நிற்க அதின் பலன் யாதெனில், இரண்டு பாபக்கோள்கள் நிற்கில், பெரும் பிணியும் பொருள் சேதமுமாகும், நினைத்தகாரியமும் முடியாது, இராசியாதி 6-8-12 லிருக்க குற்றமாகிய பலன்களைத் தரும், சுபர்கள் நிற்கில் சுபபலனுண்டாகும் எ-று. 12

லக்னுதிபதியும் சுபரும் திரிகோணத்திலிருந்த பலன்

எரைக்க லக்கினதிபதி சுபருமாக
உற்ற திரிகோண மதிலேறி நிற்க

பெருக்கவே தேகவா ரோக்கிய முண்டாம்
 பெட்புடனே யிடம்விட்டு போன பேர்கள்
நிறைக்கவே பொருளோடு வந்து சேர்வர்
 நினைத்துமே செய்யுமோர் காரியங்கள்
சிறக்கவே தவறாமல் முடிவ தாகும்
 சிந்தையில் சந்தோஷ முண்டாம் பாரே.

இ-ள். இலக்கினாதிபதியும் சுபரும் திரிகோணத்தி லிருக்க அதின் பலன் யாதெனில், தேகாரோக்கிய முண்டாம், இடம் விட்டுச் சென்றோர்கள் தனலாபத்தோடு வருவார்கள், வேண்டிச் செய்யும் படியான ஒவ்வொரு காரியமும் சம்பூரணமாய் முடிவு பெறும் எ-று. 13

ஜென்ம நட்சத்திரத்தில் 9-வது கிரகம் நின்ற பலன்

உண்டென ஜென்ம நட்சத்திரத்தில் தானும்
 ஒன்பதா மிடக் கிரகமேறி நிற்க
விண்டிடு மவத்தையொடு பொருளும் நஷ்டம்
 விளங்கிய நிலைபோகும் தான்ணிய சேதம்
பண்டென விசனமும் பிணியும் நோயும்
 பிடிக்கு மனஸ்தாபம் பெருகுங் குற்றம்
கண்டிடு மபஜெய முயுத்தக் களத்தில்
 காட்டிடு மரணமெனக் கண்டு பேசே.

இ-ள். ஜென்மநட்சத்திரத்தில் 9-வது கிரகம் நிற்க அதின் பலன் யாதெனில், அவித்தை யுண்டாம், பொருள் நஷ்டமாகும், நிலையான துபோகும், தான்ணிய சேதமாகும், விசனம்-பிணி-நோய் பிடிக்கும், மனஸ்தாபமும் பெருங்குற்றம் நேரும், அபஜெயமாகும், யுத்தகளத்தில் மாணமுண்டாம் எ-று. 14

ஜென்ம நட்சத்திரத்தில் சுபரும் பாபரும் நின்ற பலன்

பேசவே ஜென்ம நட்சத் திரத்தில்
 பெருஞ் சுபர் பாபரு மிவர்கள் தம்மில்
வாசமாய்ச் சுபருமே நின்றிருந்தால்
 வளமாக நாள்மூன்றில் தனலாபங் கீர்த்தி
கூசிடப் பாபருமே நிற்பாளுகில்
 குற்றமாம் பிணியோடு வறுமை யுண்டாம்
தோஷமாங் கலகமுட னிடம் விட்டோட்டும்
 தொல்லையும் விளையுமெனச் சொல்லு வாயே.

இ-ள். ஜென்மநட்சத்திரத்தில் சுபர்-பாபர் இவர்களில் சுபர் நிற்கில் நாள் மூன்றில் தனலாபங் கிடைக்கும், கீர்த்தி பெருகும், பாபர் நிற்கில் உடம்பிற் பிணிகாணும் வறுமை செய்யும், கலகமுண்டாகும்; இடம்விட்டோட்டும், இவ்விதம் கண்டுரைப்பாய் எ-று. 15

உதயத்தில் மதி சனி நின்ற பலன்

ஜென்மநட்சத்திரத்தைப் பற்றி சந்திரன்-சனி நாளில் செவ்வாய் இராகு-கேது-செவ்வாய் சம்பந்தப்பட்டிருந்தால் 8-அல்லது 9-நாளில் சூரியன் உச்சமுற்றிருந்தால் சிறை, விலங்கு, தண்டனை கண்டம் வரும்.

உதயத்தில் மதி குரு நின்ற பலன்

ஜென்மத்தில் சந்திரனும் வியாழமும் இருக்கில், நாலாம் நாளில் சுக்கிரன்-புதன்-சந்திரனுமிருக்க, 8-நாள் அல்லது 9-நாளில் சத்துரு ஜெயம், சுபம், போகம், திரவியம் இராஜதரிசனமாம்.

உதயத்திற்கு 2-ல்-5-ல் சுபர்களிருக்கும் பலன்

வெற்றி யுண்டாகும். இராஜவசியமாகும், நேசங்கூடும், 3-6-10-ல் இருக்க ஜெயமுண்டாம்.

உதயத்திற்கு 5-ல் சுபரும் பாபரும் நின்ற பலன்

சுபரும் பாபரும் இவர்க ளிருவரும் ஒன்று யிருக்கால் நன்மை யுண்டாம். பாபர் இடம் விட்டகன்றால் தரித்திரம், நோய், மனச்சஞ்சலம், சுபர்கள் தனியே இருந்தால் தேகசுகம், பாபர் 10-ல் இருந்தால் பயமுண்டாம், வலிவு குறையும், கீர்த்தி நாசமாகும்.

உதயத்திற்கு 9-தில் பாபக்கிரகம் நின்ற பலன்

உதயத்திற்கு 9-ல் பாபக்கிரகம் நிற்கில் குற்றம், துன்பம், பிதுர்க்கலகமாகும், வறுமை யுண்டாம். மேற்படி கிரகம் 4-ல் இருந்தால் வீட்டை விட்டோட்டும். 11-ல் சுபர் இருந்தால் தனலாபமுண்டாகும்.

உதயத்தில் 8-ல் பாபரிருக்கில் வரும் பலன்

உதயத்திற்கு 8-ல் பாபரிருக்கில் தேகநலிவுசெய்யும், சுபர் 9-ல் இருந்தால் தருமம் இலாபம் குருபக்தி தேவபக்தி உண்டாம்.

கேந்திரத்தில் சுபரும் பாபருமிருக்கில் வரும் பலன்

கேந்திரத்தில் சுபரும் பாபரும் நின்றிருக்கில் லாப முண்டாம், சத்துரு நாசமாவார், ஜெயமும் வெற்றியு முண்டாகும், மேற்படி ஸ்தானத்தில் பாபர் தனியே யிருந்தால் புகழ் மங்கும், சத்துரு பயமுண்டாகும், மேற்படி சுபரும் பாபரு மிருக்க சுபமும் நல்லுண வாம்.

உதயாதிபதி ஆக்ஷி யுச்சத்தி லிருக்கில் நின்ற பலன்

உதயாதிபதி ஆக்ஷி உச்சத்தி லிருக்க, மேற்படி ராசியில், மேற்படி நக்ஷத்திரங்கள் பொருந்தி யிருந்தால், செல்வமும் சம்பத்து முண்டாகும், நன்மை பெருகும், தேகசவுக்கியமாகும், தனலாபங் கிடைக்கும், பயம் நீங்கும், நல்ல அறிவுண்டாகும், தருமம் செய்விக்கும், ஆலய சேவையுண்டாம், தவமுண்டாம், புருஷார்த்தமும் உத்தியோக லட்சணமு முண்டாம். நேசப் பிரியமுமுண்டாம்.

இராசியாதிபன் நவாங்கிசத்தில் நின்ற பலன்

இராசியாதிபதி நவாங்கிசத்தில் சுபக்ஷேத்திரம் உச்சமுற்றால் சுபபலனைத் தருவார், நீச்சமுற்றால் சத்துருக்களால் தோஷமுண்டாம்.

சாஸ்திர உரைபயன்களும் பார்வையின் பலனுமறிய

விரயத்தைத் தரும் சராசியர் திராசியைப் பார்க்க, அந்த ராசியிலுள்ளவர்கள் சராசியைப் பார்ப்பர். மேற்படி விரயத்தைக் கொடுக்கும் இரண்டு ராசியரும் பார்ப்பதால் குற்றம், தேகநலிவு, பயமுண்டாக்கும். இப்படி சராசியைப் பெற்றிருப்பர் இரண்டாமிட லக்கினத்துடன் திராசியை யடைந்தாலோ 12-ம்மிட இராசியாதிபன் நோக்க மேற்படி உபயராசி உள்ளவர்கள் நான்காமிட இராசியாதிபனைக் காட்டும்.

நவாங்கிசப் பலாபலன்

சூ ரி ய ன்

விருத்தம்

காணவே நவாங்கிசத்தில் கதிரோன் ருனும்
    களிக்க வீற்றிருக்கவே பிறந்தோ ஊையா
பூணுதற் புத்திசாலி பித்த தேகி
    பொல்லாத கோபி கண்ணழகு ளோனும்
தோணுநற் சத்தியவான் சிவந்த மெய்யன்
    துலங்கிய நல்லதோர் சிநேக முள்ளான்
நாணவே பெரும் வயிறன் சாந்தனுகும்
    நல்லமயிர் சிவந்தவ னுகும் பாரே.

இ-ள். நவாங்கிசத்தில் சூரியன் இருக்கப் பிறந்தவன் புத்தி சாலி, பித்ததேகன், கோபி, கண்கள் அழகுடையவன், சத்தியவான், செவந்ததேகன், நல்ல சிநேகமுடையவன், பெரும்வயிறன், சாந்த குணமுடையவன், மயிர் சிகப்புநிறமாகும் எ-று. 1

சந்திரன்

பாரென சந்திரனும் நவாங்கி சத்தில்
    பண்பாக யிருக்கவே பிறந்தோ னப்பா
வாரென நீர்ப்பிரியன் வாத சிலேத்துமன்
    வளமான சிநேகமுளன் யீதலாடன்
காரென தயிரியன் நற்குணமு ளாளன்
    கண்கள் சிறியன் கல்வியதிக முள்ளான்
சீறென செல்வமுங் கீர்த்தி யுள்ளான்
    ஜெயப் பிரதாப னெனச் செப்புவாயே.

இ-ள். நவாங்கிசத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவன் நீர்ப்பிரிய முடையவன், வாதசிலேத்துமதேகன், சிநேகமுடையவன், ஈதலுடை யவன், தயிரியமுடையவன், நற்குணமுடையவன், சிறுகண்களுடை யவன், கல்வியும் செல்வமுமுடையவன் எ-று. 2

செவ்வாய்

செப்பவே நவாங்கிசத்தில் செவ்வாய் நிற்கச்
    செயலாகப் பிரிந்திட்ட செல்வந் தானும்
ஒப்பவே முன்கோபி சிகப்பு மெய்யன்
    ஊரெங்குந் திரிபவன் பித்ததேகி

மெப்பவே வஞ்சகன் முதுகில் தானும்
மருவது வொன்றுமே தானுமுண்டு
தப்பவே நெத்துவா யாகும் பேடி
தானறிந்து யிப்பலனைச் சாற்று வாயே.

இ-ள். நவாங்கிசத்தில் செவ்வாய் நிற்கப் பிறந்தவன் முன் கோபமுடையவன், சிவந்த தேகன், ஊரெங்குந் திரிபவன், பித்த தேகி, வஞ்சகன், முதுகில் மருவுடையவன், நெத்துவாயன், பேடியாம் எ-று. 3

புதன்

சாற்றவே நவாங்கி சத்தில் புந்திநிற்க
சதுராக வந்துமே பிறந்த பாலன்
ஆற்றவே யழகொடு ரூபமுள் ளோன்
அரிவையர் சிநேக முள்ளோ னுண்மை யுள்ளோன்
போற்றவே தனங்கல்வி தர்மமுள் ளோன்
புகழ்தெய்வ பக்தியுளோன் தயிர்யன் மானி
ஏற்றமீதார் நன்றிதனை மறவான் நல்ல
எழிலான பாடல்கள் பாடுவானே.

இ-ள். நவாங்கிசத்தில் புதன் நிற்கப் பிறந்தவன் அழகும் ரூபமுமுள்ளவன், ஸ்திரீகளின் நேசமுள்ளவன், உண்மை யுள்ளவன், தனமுடையவன், கல்விவான், தர்மகுணமுடையவன், தெய்வபக்தியுடையவன், தயிரியசாலி, மானி, தெய்வபக்தியுடையவன், நன்றியை யோசிப்பவன், பாடல் பாடுவானும் எ-று. 4

வியாழன்

வாமெனன நவாங்கிசத்தில் வியாழன் நிற்க
வாழவே புவியினிலே பிறந்த பாலன்
தேமெனன ஆண் புத்திரர் புண்ணிய னாகும்
தேகமதுப் பெருத்ததோனு மதிக செல்வன்
கோமெனனக் கியானி கண்ணழகு முள்ளான்
கொண்டிடுங் கீர்த்தியா னடர்ந்த ரோமன்
தாமெனனக் கபடுமே யில்லா னென்று
தக்கபடி கண்டுபலன் கூறுவாயே.

இ-ள். நவாங்கிசத்தில் வியாழனிருக்கப் பிறந்தவன் ஆண் புத்திரருடையவன், புண்ணியன், பெருத்த தேகன், அதிக செல்வமுடையவன், கியானி, கண்கள் அழகுடையவன், கீர்த்தியுடையவன், அடர்ந்த ரோமமுடையவன், கொஞ்சமேனுங் கபடில்லாதவன் எ-று.

சுக்கிரன்

கூறவே நவாங்கி சத்தில் சுக்கிரன் நிற்க
குவலயத்தில் வந்துமே பிறந்த பாலன்
பாரிய தேகமொடு சுருண்ட ரோமன்
பரிவான தர்ம நற்குணன் விவேகன்
தேறவே தெய்வபக்திக் கன்று காலித்
தான் விருத்தி யுள்ளோனு மெய்யழகன்
நேமெனவ சுகமுளான் நிந்தை யில்லான்
நீடுமிப்பல னறிந்து நிகழ்த்து வாயே.

இ-ள். நவாங்கிசத்தில் சுக்கிரனிருக்கப் பிறந்தவன் பாரிய தேகன், சுருண்டரோமன், தர்மன், நற்குணன், புத்திசாலி, தெய்வ பக்தியுடையவன், பசுமுதலிபதுகள் விருத்தியுடையவன், மெய்யழகன், சுகமுடையவன், நிந்தையில்லாதவன் எ-று. 6

சனி

வாயென நவாங்கிசத்தில் முடவன் நிற்க
வாகாக வையமிசை பிறந்த பாலன்
தோயவே துக்கவான் பொய்ய னாகும்
துலங்கிய மயிரதுவுங் கறுத்திருக்கும்
ஆயவே யதிகமாய்ப் பொசிப்போ னாகும்
அப்பனே யெளியோனும் நீலதேகன்
நேயவே குள்ளனும் யிராசரைப்போல்
நீடியவுரு வுளோன் தயிரிய வானே.

இ-ள். நவாங்கிசத்தில் சனியிருக்கப் பிறந்தவன், பொய்சொல்பவன், கறுத்த மயிருடையவன், அதிகமாக அன்னம் புசிப்பவன், எளியவனாக விருப்பான், நீலதேகன், குள்ளன், இராஜவுருவுடையோன், தயிரியசாலியாயிருப்பான் எ-று. 7

இராகு

வாமெனவ நவாங்கிசத்தில் ராகுதானும்
வளமாக வீற்றிருக்கப் பிறந்த பாலன்
தாமெனவ நன்றியுளான் தர்ம முள்ளான்
தக்க விசுவாச முளான் மாந்திரீகன்
தேமெனவ நிபுணன வஞ்சகமே யுள்ளான்
தேற்சியான் வலுவுளன் புள்ளிக்காரன்
கோமெனவ யில்லாதவர்கள் தம்மை
கொண்டாடிப் புகழ்வனெனக் கூறுவாயே.

இ-ள். நவாம்கிசத்தில் இராகுவிருக்கப் பிறந்தவன் நன்றி யுடையவன், தர்மவான், விசுவாசமுடையவன், மாந்திரீகன், நிபுணன், வஞ்சகன், தேற்சியுடையவன், வலுவுடையவன், புறக்காரன், இல்லாதவர்களைப் புகழ்ந்து கொண்டாடுவான் எ-று. 8

கேது

கூறவே நவாங்கிசத்தில் கேது நிற்க
குலவிய புவிதனிலே பிறந்த பாலன்
வீரமாம் சாஸ்திரங்கள் பேச வல்லோன்
விளங்கவே புகழுடைய வயித்திய னுவன்
ஆறவே சிநேகமுளான் ரட்சிப்போனும்
அழகிய தேகமொடு யீதலுள்ளான்
நேறவே யிவ்வாறு கண்டறிந்து
நவாங்கிச பலாபலனை நவிலுவாயே.

இ-ள். நவாங்கிசத்தில் கேது நிற்கப் பிறந்தவன், சாஸ்திரங்கள் பேசவல்லவன், புகழுடைய வைத்தியனுருவன், சிநேகிதமுள்ளவன், ஒருவரை ரட்சிப்பவன், அழகுடைய தேகவான், ஈதலுடையவன், இவ்வாருகக் கண்டு நவாங்கிசப் பலாபலன்களை சொல்ல வேண்டும் எ-று. 9

நவாங்கிச பலாபலன் முற்றிற்று.

முதல் பாவகம்

பிள்ளையின் குறி

மேஷம் சிங்கம் இந்த இராசிகளில் சூரியன் இருக்க, மற்ற கிரகங்கள் உபய விராசியினும் லக்கினத்திலும் வலுவாக யிருக்க இரட்டைப்பிள்ளை பிறக்கும்.

செவ்வாய் 7-ஆமிடத்திலிருக்க சூரியன் 8-ஆமிடத்திலிருக்க மற்ற கிரகங்கள் சரவிராசியிலிருக்க மேற்பலன்க ளில்லையாம்.

பாபக்கிரகங்களுக்கும் சந்திரனுக்கும் 12-ஆமிடத்தில் செவ்வா யிருக்க, 2-12-ல் சுபக்கிரகங்களிருக்க பாம்பாய் ஜெனித்தாலும் ஜெனிக்குமெனவறிக.

பிள்ளை பிறக்குமிடம்

சுபர் நீச்சரிடத்தில் இருக்க அவரைச் சந்திரன் பார்க்க மரத் தின்கீழ் ஜெனனம்.

பாபர் நீச்சரிடத்தி லிருக்க அவரைச் சந்திரன் ப்ர்க்க நீச்சர் வீட்டில் ஜெனனம்.

சனி லக்கினம் 7-ஆமிடம் இவைகளி லிருக்க செவ்வாய் சுக்கி ரன் 12-ஆமிடத்திலிருக்க தகப்பன் ஊரில் ஜெனனம்.

சூரியன் சரவிராசியி லிருக்க சந்திரன் 10-மிடத்திலிருக்க பிதா வீட்டில் ஜெனனம்.

இலக்கினத்திலும் 7-ஆமிடத்திலும் சனி செவ்வாயிருக்க பிதா தேசத்தில் ஜெனனமெனவறிக.

அரிட்டம்

சூரியன் 6-ஆமிடத்தி லிருக்க அதற்கு 7-ஆமிடத்தில் செவ் வாய் சனியிருக்க அரிட்டம்.

சந்திரன் 7-மிடத்திலிருக்க சனி சூரியன் இவர்களுக்கு 7-ஆ மிடத்தில் செவ்வாயிருக்கத் தந்தைதாய்க்கு அரிட்டமெனவறிக.

அமிசை

சுக்கிரன் நின்ற விராசிக்கும் புதன் நின்ற விராசிக்கும் மத்தி யில் சந்திரனிருக்கப் பிறக்கும்போது தந்தை அருகே யிருப்பார்.

சூரியனுக்கு 5-7-9-ஆமிடத்தில் பாபர்கள் இருக்க சிறைப்படு வான்.

இலக்கினதிபதியும் பாபருங்கூடி 6-8-12-ஆமிடத்திலிருக்க ரோகவான்.

இலக்கினம் புதன் வீடாக புதன் 6-ஆமிடத்திலிருக்க 7-ஆமிடத்ததிபனும் லக்கினத்திலிருக்க சந்திரனும் லக்கினுதிபதியும் சனி புதனுங் கூடிட்டுள்ளன்.

சந்திரனும் பாபருங்கூடி 1-7-8-12-லிருக்க அவரைச் சுபர்கள் பார்க்கச் சேய் குருடு.

இலக்கினுதிபதியும் பாபரும் 6-8-12-லிருக்க சவுக்கியம்.

இலக்கினுதிபதி சரவிராசியிலிருக்க சூரியனுக்கு 2-ஆமிடத்தில் பாபர்களிருக்க தேசாந்திரம் திரிவான்.

இலக்கினம் திரவிராசியாகவிருக்க அதை லக்கினுதிபதி பார்க்க ஜனித்த ஊரிலேயே யிருப்பான்.

8-மிடம் சரவிராசியாக விருக்க பிரதேச சஞ்சாரம் செய்வன்.

இலக்கினம் சரவிராசியாக விருக்க வீட்டிலே மறிப்பவன்.

இலக்கினுதிபதி திரவிராசியாக விருக்க சுதேசவாசகம்.

இலக்கினுதிபதி உபயவிராசியிலிருக்க மத்திபம்.

சூரியன்—8—ஆமிடத்திலிருக்க	சுரம்
சந்திரன்—8—ஆமிடத்திலிருக்க	சலகண்டம்
செவ்வாய்—8—ஆமிடத்திலிருக்க	ஆயுதபீடை
புதன்—8—ஆமிடத்திலிருக்க	வியாதி
குரு—8—ஆமிடத்திலிருக்க	மிருத்தி
சுக்கிரன்—8—ஆமிடத்திலிருக்க	தரித்திரம்
சனி—8—ஆமிடத்திலிருக்க	தாயாருக்குத்தோஷம்

இலக்கினத்தில் சனி செவ்வாயிருக்க 9-ஆமிடத்தில் சந்திரனிருக்க பிறந்த பிள்ளையை தாயார் எறிந்து விடுவாள்.

இலக்கினம் மீனம் கடகவிராசியாக விருக்க இராகுதிசையானுல் பாக்கியம் சோபனம்.

இலக்கினம் மகரம் கன்னியாகவிருக்க கேதுதிசையானுல் செல்வமுண்டாமென வறிக.

மாலை கொடி

ரிஷபம் மேஷம் சிங்கம் லக்கினமாகவிருக்க அதை சனி செவ்வாய் பார்க்க இரண்டுகொடி செவ்வாய் ஒருவன் பார்க்க செங்கொடி சனி ஒருவன் பார்க்க கருங்கொடி சுற்றிப் பிறக்குமென வறிக.

சாரம் அமைப்பு

சூரியனும் இராகுங் கூடியிருக்க சொரித்தலே சூரியனும் இராகும் 8-ஆமிடத்தில் கூடியிருக்க ஆரகசரீரன்.

இலக்கினத்தில் செவ்வாய் சனி இருக்க கல்லெறிப்பு, விழி யூனம்.

இலக்கினாதிபதி சந்திரனுகவிருக்க சரீரகாந்தியுள்ளான், சந்திரன் லக்கினத்தைப் பார்க்க சரக்கை விற்றுண்பவன்.

இலக்கினாதிபதி 10-ஆமிடத்திலிருக்க, 10-மிடத்ததிபன் கேவலனாய் 6-8-12-லிருக்க தத்து புத்திரனுவா னெனவறிக.

மருவு

சூரியன் புதன் சுக்கிரன் இவர்கள் கூடி லக்கினத்தைப் பார்க்க வடப்பக்கம் மருவு.

சந்திரன் செவ்வாய் சனி கூடி லக்கினத்தைப் பார்க்க இடப்பக்கம் மருவு.

சூரியன் லக்கினத்தைப் பார்க்க வயிற்றில் மரு, சந்திரன் பார்க்க சிரசில் மரு, செவ்வாய் பார்க்க இரு புட்டத்தில் மரு, புதன் பார்க்க பக்கத்தில் மரு, குருபார்க்க முகத்தில் மரு, சுக்கிரன் பார்க்கத் துடையில் மரு, சனிபார்க்க காலில் மருவென வறிக.

ஆயுள்

இலக்கினத்தில் சனி சந்திரனிருக்க வாழ்நாள் குறையும்.

இலக்கினம் 4-ஆமிடத்ததிபன் கூட 9-ஆமிடத்ததிபன் 12-ஆமிடத்தில் கூடிட தாய் தந்தையர் சிறுவயதில் இறப்பார்.

9-ஆமிடத்ததிபனும் 8-ஆமிடத்ததிபனும் 6-ஆமிடத்ததிபனும் உச்ச கேந்திரத்தில் சுபருடனிருக்க நிறைந்த ஆயுள்.

செவ்வாய்க்கு 11-ஆமிடத்தில் சந்திரனிருக்க குழவிக்கினம்.

சனிக்கு 7-ஆமிடத்தில் செவ்வாயிருக்க 3-ஆமிடத்ததிபன் சந்திரனுடன்கூடி 3-6-12-லிருக்க அன்னியஸ்திரீ வளர்ப்பாள்.

செவ்வாயை சுபர்பார்க்க மற்றூர் வளப்பார்.

செவ்வாயை பாபர்பார்க்க குழவியேகும் எனவறிகவும்.

தொழில்

இலக்கினாதிபதியும் புதனுங் கூடியிருக்க வித்தை கணிதம் வியாபாரம்.

இலக்கினத்தில் குருவும் சுக்கிரனுங்கூடியிருக்க சுருதி சாஸ்திரம் படிப்பனெனவறிக.

முதல்பாவகம் முற்றிற்று.

இரண்டாம் பாவகம்

நேத்திரம்

இரண்டாமிடத்ததிபனும் 7-ஆமிடத்ததிபனும் பாபரும் 3-ஆமிடத்திலிருக்க சனி சந்திரனுக்கு 6-ல் சூரியனிருக்க பூனைக்கண்.

சுக்கிரன் செவ்வாய் 7-ஆமிடத்திலிருக்க அவரைப் பாபர் பார்க்க இரவு குருடு.

இலக்கினாதிபதியும் 2-ஆமிடத்ததிபனும், சுக்கிரனும் சந்திரனுங்கூடிட மாலைக்கண்.

சுக்கிரனும் லக்கினாதிபதியும் சந்திரனுங்கூடி 6-8-12-லிருக்க மாலைக்கண்

இரண்டாமிடத்ததிபனும், சுக்கிரனும் வலுவாக யிருக்க நேத்திரரோகம்.

இரண்டாமிடத்ததிபனும் சந்திரனும் சனியுமிருக்க நேத்திரம் ஒளியிராது.

இலக்கினாதிபதியும் 2-ஆமிடத்ததிபனும் சுக்கிரன் சூரியனுமிருக்கக் குருடனாய்ப் பிறப்பான்.

சூரியன் சந்திரன் லக்கினாதிபதியுங் கூடிநிற்கக் குருடன்.

இலக்கினாதிபதியும் 2-ஆமிடத்ததிபனும் சுக்கிரனுங் கூடியிருக்க குருடன்.

சூரியன் சந்திரன் செவ்வாய் 12-ஆமிடத்ததிபனும் கூடியிருக்க இரண்டு கண்ணுந் தெரியாது.

இலக்கினம் கடகமாக சந்திரன் சுக்கிரன் அதில் நிற்கப் பிறவிக் குருடன்.

சூரியனும் லக்கினாதிபதியும் 2-ஆமிடத்ததிபனும் சுக்கிரனுங் கூடி 6-8-லிருக்க பிறவிக்குருடன்.

மேஷம் ரிஷபம் விருச்சிகம் லக்கினமாகவிருக்க அசங்கிதமான பல்லுடையவன்.

பனிரண்டாமிடத்ததிபனும் சந்திரனுங் கூடியிருக்க ஒருவிழி யீனம்.

பனிரண்டாமிடத்ததிபனும் சந்திரனும் சூரியனுங் கூடியிருக்க இரண்டுவிழி யீனம்.

சூரியன் 5-ஆமிடத்திலிருக்க சுக்கிரன் 9-ஆமிடத்திலிருக்க அவரைப் பாபர்பார்க்க நேத்திர ஊனம்.

சூரியனும், பாபரும் 12-ஆமிடத்தி லிருக்க வலதுகண் போம்.

சந்திரனும் செவ்வாயும் 12-ஆமிடத்திலிருக்க இடதுகண் ஊனம்.

இலக்கினதிபதி 2-ஆமிடத்திலிருக்க சுக்கிரன் 8-ஆமிடத்தி லிருக்க சூரியன் 6-லிருக்க கண்ணோய்.

இலக்கினதிபதியை சனிபார்க்க கண்ணோய்.

ஐந்தாமிடம் 6-ஆமிடத்தில் லக்கினதிபதியிருக்க சுக்கிரனும் 2-ஆமிடத்ததிபனும் கூடியிருக்க கண் பிடுங்கப்படும்.

சிங்கம் மேஷம் இந்த விராசியை சனி செவ்வாய் பார்க்க அல்லது அதிலிருக்க கண்ணில் உதிரக்கொடி.

சூரியன் 2-ஆமிடத்திலிருக்க கூடிட அவரைக் குளிகன் சனி இவர்கள் பார்க்க கண்ணோய். மேற்சொன்னது ஜலராசியர்கில் கண்ணில் துளித்துளியாய் நீர்வடியு மெனவறிக.

ஊமை

இரண்டாமிடத்ததிபனும் புதனுங்கூடி 6-ஆமிடத்திலிருக்க ஊமை.

இரண்டாமிடத்ததிபனோடு எந்த காரகராளாயினுங் கூடியிருக்க அந்தந்த காரகர் ஊமை ஆனால் உச்சமாகில் நிவர்த்தியாம்.

இரண்டாமிடத்ததிபனும் புதனும் 6-8-12-லிருக்க ஊமை.

இலக்கினதிபதியும், சுக்கிரனுங்கூடி 6-8-12-லிருக்க ஊமை.

மூன்றாமிடத்ததிபனும் லக்கினதிபதியுங் கூடியிருக்க ஊமை யாய்த் திரிவான்.

மேற்படியாருடன் 2-ஆமிடத்ததிபன் கூடிடில் ஊமையாய்த்திரி வானெனவறிக.

வித்தை

சனி யில்லாமல் 6-ஆமிடத்தில் சுபக்கிரகங்கள் கூடிடில் புலவன்.

இலக்கினதிபதி அல்லது திரிகோண கேந்திரத்தில் செவ்வா யிருக்க தெலுங்கு வித்தை.

இலக்கினதிபதி அல்லது திரிகோண கேந்திரத்தில் இராகேனும் கேதேனு மிருக்க துலுக்கு ஆரியர் வித்தை.

புதனும் 7-ஆமிடத்ததிபனும் குருவும் திரிகோணம் அல்லது கேந்திரத்தி லிருக்க திடத்த வித்வான்.

இலக்கினாதிபதி அல்லது திரிகோண கேந்திரங்களில் சுக்கிரன் குரு இருக்க சாஸ்திர வல்லவன்.

இலக்கினத்தில் சுக்கிரன் குரு கூட குரு சூரியன் சிங்க விராசியி லிருக்க சுக்கிரன் கடகராசியிலிருக்க ஆறுசாஸ்திர வல்லவன்.

புதன் உச்சத்திலிருக்க 2-ஆமிடத்ததிபனும் உச்சத்தி லிருக்க, சுக்கிரன் உபயம் அல்லது உச்சத்திலிருக்கச் சோதிடன்.

ஒன்பதாமிடத்ததிபனும் சனியும் 2-ஆமிடத்ததிபனும் சூரிய னும் கூடிடில் தர்க்கசாஸ்திரம்.

இரண்டாமிடத்ததிபனும் சுக்கிரன் இவர்கள்கூடி மூல திரி கோணத்திலிருக்க தர்க்க சம்படிப்பவன்.

இரண்டாமிடத்ததிபனும் புதனும் கூடி உச்சத்திலிருக்க, லக்கி னத்தில் குருவிருக்க சனி 8-ஆமிடத்திலிருக்க கணித வித்தை.

இரண்டாமிடத்ததிபனையும் சுக்கிரனையும் குருபார்க்க இலக்க ணம் பேசுபவன்.

பத்தாமிடத்ததிபன் 4-ஆமிடத்திலிருக்க நிறைந்த கல்விமா னெனவறிக.

தனவான்

இலக்கினாதிபதி அல்லது திரிகோண கேந்திரத்தில் புதனிருக்க தமிழ் வித்தை.

சூரியன் சுக்கிரன் புதன் சந்திரன் சனி குரு கூடிட வித்தை பிர பலமுள்ள தனவான்.

இலக்கினாதிபதி சுக்கிரனிருக்க சுக்கிரன் வீட்டில் குரு யிருக்க மகர விராசியில் செவ்வாய் சந்திரன் குரு புதன் கூடியிருக்க நிறைந்த தனவான் கல்விநிபுணன்.

இலக்கினாதிபதி 9-ஆமிடத்திலிருக்க 9-ஆமிடத்ததிபனும் லக் கினாதிபதியுங் கூடிட 9-ஆமிடம் 11-ஆமிடத்திலிருக்க அல்லது 11-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்ததிபனும்கூடி 2-ஆமிடத்திலிருக்க தனவானெனவறிக.

பொருள் சேர்க்கை

இலக்கினாதிபதியையும் 3-ஆமிடத்ததிபனையும் ஆண்கோள் பார்க்க அண்ணன் சிறுவன் மாமன் பொருள்.

ஒன்பதாமிடத் ததிபனும் 3-ஆமிடத் ததிபனுங் கூடிட தமயன் பொன்வரும்.

மூன்றுமிடத் ததிபனும் சூரியனுங் கூடிடில் தாதையர் பொன் வரும்.

மூன்றுமிடத் ததிபனும் சந்திரனுங் கூடிடில் அன்னையின் பொன்.

மேற்படியானுடன் செவ்வாய் கூடில் தனனுபொன் புதன்கூடில் பகைஞர்பொன். குருகூடில் உறவினர் பொன். சுக்கிரன் கூடில் மனைவியின்பொன். சனிகூடில் சேவித்தவர் அல்லது வேலைக்காரர் பொன்.

இலக்கினத்தினும் 10-ஆமிடத்தினும் சந்திரனிருக்க குடி வீட்டுக்குடையோன்.

பத்தாமிடத்ததிபனும் 9-ஆமிடத்ததிபனுங் கூடிடில் பழைய தனம்.

இரண்டா மிடத்தையும் கேந்திரத்தையும் 2-ஆமிடத் ததிபன் 6-8-12-ஆமிடத்தைப்பார்க்க தகப்பன் தனமில்லை.

சந்திரனுக்கு ரண்டில் சனி நிற்க சனியும் 4-மிடத்ததிபனுங் கூடிட கேந்திரத்தில் நிற்க தந்தைபொருள் அயலார் கொள்வார்.

சுபர் பத்தாமிடத்திலிருக்க சந்திரன் குரு பார்வீட்டிலிருக்க திரவியமில்லை.

இலக்கின முதல் எண்ணி லக்கினதிபதி யிருந்த வீடு பாபர் வீடாகவிருக்க தரித்திரம் போம்.

5-ஆமிடத்ததிபனும் சுபரும் 9-ல் இருக்க புத்திரிக்கு மணம் சூட்டுவா னெனவறிக.

கர்மம்

பனிரண்டா மிடத்தில் பாபர்களிருக்க அல்லது 12-ஆமிடத் ததிபன் பார்க்க அல்லது பாபர் கூடிட உடம்பில் வியாதி உண்டாம்.

பத்தா மிடத்ததிபன் 10-ஆமிடத்தி லிருக்க நற்கரும மென வறிக.

பொருளின் தொகை

இரண்டாமிடத் ததிபன் 11-ஆமிடத்தி லிருக்க 11-ஆமிடத் ததிபனும், 9-ஆமிடத்ததிபனும் 2-ஆமிடததிலிருக்க நாலுலட்சம் பொருள் சேர்ப்பன்.

தனுசுவிராசியில் குருவிருக்க லக்கினமதுவாக சனி உச்சமாக 11-ஆமிடத்ததிபன் 4-ஆமிடத்தி லிருக்க கோடிபொன் சேர்ப்பன்.

தனுசு கும்பம் மீனம் கன்னி ரிஷபம் இவை லக்கினமாக அதில் ஒன்பது கோளுமிருக்க ஒன்பது கோடி பொன் சேர்ப்பன்.

திரேகாணத்தில் குரு சுக்கிரன் கூடிட 11-ஆமிடத் ததிபனும் சுபனுகவிருக்க கோடிப்பொன் சேர்ப்பா னெனவறிக.

தின்னும் சுவை

2-ஆமிடம் 3-ஆமிடம் சூரியனிருக்க சுடுகை, சனி 2-ஆமிடம் 3-ஆமிடமாக விருக்க கஷாயம், சந்திரனிருக்க சீதளம், சுக்கிரனிருக்க புளி குளிர்ச்சி, செவ்வாயிருக்க குளிர்மை, குரு விருக்க மதுரம், புதனிருக்க சகலமு மெனவறிக.

இரண்டாம் பாவகம் முற்றிற்று.

மூன்றும் பாவகம்

சகோதரர்

செவ்வாய் 3-ஆமிடத்திலிருக்க அல்லது மூன்றுமிடத்தைப் பார்க்க துணைவர் அற்பமெனவறிக.

மூத்தவர்

செவ்வாய் 2-ஆமிடத்தி லிருக்க அருந்துணைவர்.

செவ்வாய் 10-ஆமிடம் 4-ஆமிடத்தி லிருக்க மூத்தவர் மிகவுண் டாமென வறிக.

இளையவர்

செவ்வாய் புடத்தை வைத்து இராகு கேது புடம் இருக்கில் குரு வந்தால் இளைய சகோதரர்க் கரிஷ்டம்.

செவ்வாய் புடம் எடுக்கில் மூத்தோர்களுக் கரிஷ்டம்.

இராகு 6-ஆமிடத்தி லிருக்க பிலமாகிய சகோதரம் சீராயுர் விடு மெனவறிக.

அங்கவீனம்

கடகம் விருச்சிகம் மீனம் லக்கினமாக இருக்க ஒன்பது பங்காக்கி 5-ல் பிறந்த கன்னிகைக்கு கடகம் துலகாயம் விருச்சிகம் கால் குருகு-மீனம்-முடம்.

தகப்பன் 9-க்கு 9-தாய் 4-க்கு 4-செறிகள் 3-க்கு 3-சேஷ்டன் 11-க்கு 11-மாமன் புத்திரர் 5-க்கு 5-சகோதரர் ஆண் பெண்ணென்று சொல்லுக.

ஆபரணங்கள்

சுக்கிரன் 3-ஆமிடத்திலிருக்க	முத்துக்கடுக்கன்
சூரியன் செவ்வாயிருக்க	இரத்தினங்கள்
புதனிருக்க	அன்னமணி
சந்திரனிருக்க	சகல ஆ்பரணம்
சனி யிருக்க	திருமேனிகடுக்கன்

இராகு-நீலம் கேது-சிகப்பு இவையல்லாம் கிடைக்கும்.

மூன்ருமிடத் ததிபன் வலுவாக யிருக்க மேற்சொல்லியது இடக்காதுக்கு ஆனல் 11-ஆமிடத் ததிபனிருக்க கேந்திரத்தை சுபர்பார்க்க வலக்காதுக்குக் கிடைக்கும்.

செவ்வாயும் 3-ஆமிடத்ததிபனும் 4-ஆமிடத்ததிபனும் கூடியிருக்க அண்ணர் பங்கு மனைசேரும்.

செவ்வாய் புடத்தை வைத்து இராகு-கேது-புடம் எடுக்கில் குருவந்தால் இளைய சகோதரர்க் கரிஷ்டமென வறிக.

சனி பார்க்க 2-ஆமிடத்ததிபன் 3-ஆமிடத்தில் நிற்க அவரை சுபர் பார்க்க வெள்ளிக்கலம் ஆனல் பாபர் பார்க்க வெண்கலம்.

இரண்டாமிடத் ததிபனையும் 3-ஆமிடத் ததிபனையும் 11-ஆமிடத்ததிபனையும் பாபர் பார்க்க தனியேநிற்க உண்ணக் கலனில்லையெனவறிக.

மூன்ரும் பாவகம் முற்றிற்று.

நான்காம் பாவகம்

மாதுருபலன்
(வாகன முதலியது)

நான்காமிடத்ததிபன் 11-ஆமிடத்தில் நிற்க 9-ஆமிடத்ததிபன் கேந்திரத்தில் சுபருடனிருக்க லக்கினாதிபதி 4-ஆமிடத்திலிருக்க தண்டிகை மிருதனம் யானை வாகனம்.

சந்திரனும் 4-ஆமிடத்ததிபனும் லக்கினாதிபதியுங் கூடிட அசுவவாகன முண்டாம்.

சுக்கிரனும் 4-ஆமிடத்ததிபனுங் கூடி கேந்திரத்திலிருக்க 4-ஆமிடத்ததிபனும் 11-ஆமிடத்திலிருக்க வாகனம்.

சந்திரனுக்கு 3-ஆமிடத்தில் சுக்கிரனிருக்க அல்லது சுக்கிரனுக்கு 3-ஆமிடத்தில் சந்திரனிருக்க அல்லது பார்க்க அல்லது 2-மிடத்தை சுபர்பார்க்க வாகனம்.

இலக்கினாதிபதியும் 10-ஆமிடத்ததிபனுங் கூடி கேந்திரத்திலிருக்க வாகனம் சேரும்.

10-ஆமிடத்ததிபன் 4-ஆமிடத்திலிருக்க 4-ஆமிடத்ததிபன் 10-ஆமிடத்திலிருக்க லக்கினாதிபதி உச்சத்திலிருக்க சகல வாகன முண்டாம்.

இரண்டாமிடத் ததிபன் லக்கினம் அல்லது 11-ஆமிடத்திலிருக்க 11-ஆமிடத்ததிபன் 2-ஆமிடத்திலிருக்க 4-ஆமிடத்ததிபன் உச்சத்திலிருக்க வாகன வேந்த னெனவறிக.

பொருள் சேர்க்கை

இலக்கினம் அல்லது 10-ஆமிடம் சுபர் அல்லது லக்கினாதிபதி 10-ஆமிடத்ததிபன் சுபருடன் கூடிடில் அரசரால் மாணிக்க வகை சேரும் மன்னரை சேவிப்பான்.

இலக்கினாதிபதி 10-ஆமிடத்திலிருக்க 10-ஆமிடத்ததிபன் 4-ஆமிடத்திலிருக்க 4 - ஆமிடத்ததிபன் உச்சத்திலிருக்க வேந்தனெனவறிக.

தாய்க்கரிட்டம்

4-ஆமிடத்ததிபன் 2-ஆமிடத்ததிபன் 7-ஆமிடத்ததிபன் 4-ஆமிடம் 2-ஆமிடம் 7-ஆமிடம் இவைகளிலிருக்க சனி செவ்வாய் கூடி

அல்லது 4-2-7-ஆமிடத்தில் செவ்வாயிருக்க அவரை சனிபார்க்க அன்னைக் கரிட்டம்.

சனி செவ்வாய்க்கு 5-ஆமிடம் அல்லது 7-ஆமிடத்தில் சந்திரனிருக்க தாய் நில்லாள்.

சூரியனுக்கு 2-ஆமிடம் 12-ஆமிடம் சனி நிற்க சந்திரனுக்கு 2-ஆமிடம் சனி நிற்க சூரியன் செவ்வாய் சந்திரன் சனி இவர்கள் கூடிடில் தந்தைதாய்க் கரிட்டம்.

வீடுகள்

10-ஆமிடத்ததிபனும் 4-ஆமிடத்ததிபனும் செவ்வாயுங்கூடி 6-8-12 அல்லது நீச்சத்திலிருக்க பங்கு மனையு மில்லை.

இலக்கினாதிபதியும் 12-ஆமிடத்திலிருக்க அவரை பாபர்கள் பார்க்க பங்கு மனையுமில்லை.

4-ஆமிடத்ததிபனும் பாபரும் நீச்சத்திலிருக்க 12-ஆமிடத்ததிபன் 2-ஆமிடத்திலிருக்க லக்கினாதிபதியும் சூரியனும் 4-ஆமிடத்ததிபனும் சுபரும் நோக்காமலிருக்க பங்குமனை போம்.

4-ஆமிடத்ததிபன் உச்சத்திலிருக்க பெருமாட கூடமுண்டாம்.

6-ஆமிடத்ததிபன் 10-ஆமிடம் 7-ஆமிடம் ஏறிநிற்க லக்கினத்தில் செவ்வாயிருக்க அவரை சுபக்கிரகங்கள் பார்க்க மனை சேரும்.

4-ஆமிடத்ததிபனும் லக்கினாதிபதியுங்கூடி 4-ஆமிடத்திலிருக்க ஒருவன் வீட்டில் வாழ்வான்.

12-ஆமிடம் 2-ஆமிடம் லக்கினம் இவைகளில் சந்திரன் பாபரோடு கூடிநிற்க அன்னைக் கரிட்டம்.

5-ஆமிடம் 9-ஆமிடம் சனிநிற்க அன்னைக் கரிட்டம்.

4-ஆமிடத்தில் குருவிருக்க 8-ஆமிடத்தில் 4-ஆமிடத்ததிபனும் சனியுங்கூடிட அன்னைக் கரிட்டம்.

4-ஆமிடத்தில் செவ்வாய் சனி சந்திரனிருக்க கூடிட அன்னைக் கரிட்டம்.

சூரியன் சந்திரன் 2-ஆமிடத்திலிருக்க 3-ஆமிடத்ததிபன் 4-ஆமிடததிபன் 4-ஆமிடத்திலிருக்க அவரை சனிபார்க்க சூரியன கேவலமாயிருக்க 4-ஆமிடத்ததிபன் உச்சத்திலிருக்க மாதாபோகும்.

4-ஆமிடத்தில் சந்திரன் சுக்கிரன் ராகு இவர்களிருக்க 5-ஆமிடத்தில சனி சூரியன் 3-ஆமிடத்ததிபனுமிருக்க அவரை சனி பார்க்க 2-ஆமிடம் எந்த காரகாளாகிலும் பார்க்க தாய்க் கரிட்டம்.

இலக்கினத்திற்கு 5-10-ல் சந்திரனிருக்க அன்னைக்கன்னைபோம் தாய்க் கரிட்டம்.

சூரியன் புடம் வைத்து சந்திரன் புடம் வாங்க அதில் சூரியனிருக்க நிரயாணம்.

சந்திரன் புடம் வைத்து சனி புடம் வாங்க அதில் புதனிருக்க அன்னைக் கரிட்டம்.

சந்திரனுக்கு 7-ஆமிடத்தில் செவ்வாயிருக்க அன்னைக் கரிட்டம்.

சந்திரனுக்கு இரண்டு பக்கமும் பாபர்களிருக்க அன்னைக் கரிட்டம்.

சந்திரனுக்கு 7-ல் செவ்வாய் அல்லது சனியிருக்க அல்லது பார்க்க தாய்மரணம்.

4-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்ததிபனும் சூரியனுங்கூடி 8-6-12-லிருக்க அல்லது நீச்சத்திலிருக்க பிரியமில்லா மகனெனவறிக.

தாயின் வியாதி

4-ஆமிடத்ததிபனும் செவ்வாய் அல்லது சூரியனுங் கூடியிருக்க விடாநோய்.

புதனும் 4-ஆமிடத்ததிபனும் பாபரிடத்திலிருக்க பொன் பொருள் சேருமெனவறிக.

தாயின் வயது

3-ஆமிடத்ததிபனும் சனியும் 5-ஆமிடத்திலிருக்க 6-5-4-பார்க்க 5-வது வருடம் தாய்போகும்.

குரு பார்க்க லக்கினத்தில் சந்திரனிருக்க சனி சந்திரன் பார்க்க 7-ஆமிடத்தில் செவ்வாயிருக்க பிள்ளையைப் பிறர் வளர்ப்பார்.

4-ஆமிடம் கடகவிராசியாக அதில் சந்திரன் நிற்க வயது பூரணமெனவறிக.

4-ஆமிடத்ததிபனை எத்தனை பாபர் கூடினால் எத்தனையோ அத்தனை வீடுகட்டுவான்.

12-ஆமிடத்தில் குருவிருக்க 2-ஆமிடத்திலிருக்க நல்ல வீடு கட்டி சகல பாக்கியம் சேர்ப்பவன்.

12-ஆமிடத்ததிபனை எத்தனை கிரகம் கூடுகிறதோ அத்தனை வீடுகட்டுவான்.

12-ஆமிடத்ததிபனும் 5-7-9-ஆமிடத்திலிருக்க அல்லது அத்தானததாதி தன்னுடன் சேர்ந்தால் அத்தனைவீடு அவரவர் தமக்கே யாகுமெனவறிக.

சந்தோஷம்

4-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்ததிபனும் 2-ஆமிடம் 11-ஆமிடத்திலிருக்க அல்லது கேந்திர திரிகோண உச்சத்திலிருக்க தந்தை தாய் மைந்தர் எல்லையில்லாசந்தோஷம்.

இலக்கினம் சரவிராசியாக பரதேசம் லக்கினம் திர்விராசியாக சுதேசம் மருவுவா னெனவறிக.

சோரம்

சந்திரன் செவ்வாய் அல்லது 6-ஆமிடத்ததிபன் கூடில் தாய் சோரம் போவாள்.

4-ஆமிடத்ததிபன் உச்சத்திலிருக்க ஆணுகில் புருஷன் தண்டிப்புக்குள்ளாவாள்.

இலக்கினுதிபதியும் 4-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்ததிபனும் 6-ஆமிடதததிபனும் நிற்க அல்லது 4-ஆமிடத்ததிபன் ராகு அல்லது சனி இருக்க பரவிஷயம்.

4-ஆமிடத்ததிபன் 6-ஆமிடத்ததிபன் பாபருங் கூடிட சந்திரன் குரு பாபரும் 4-ஆமிடத்திலிருக்க அவரை பாபர் பார்க்க 4-ஆமிடத்ததிபனும் சந்திரனும் கேந்திரத்தில் கூடிட லக்கினுதிபதியும் 4-ஆமிடததிபனும் 6-ஆமிடத்ததிபனும் கூடி 7-ஆமிடத்திலிருக்க பரவிஷயம்.

சந்திரன் குரு இரண்டுபேரையும் சனி பார்க்காமலிருக்க சூரியன் சந்திரன் 9-ஆமிடத்திலிருக்க பரதேசம்.

ஞாயிறு சுவாதி துதியை புதன் ரேவதி சப்தமி பரஜாதகம்.

சனி பின் அவிட்டம் துவாதசி பிறந்தோன் பரஜாதக னெனவறிக.

நான்காம் பாவகம் முற்றிற்று.

ஐந்தாம் பாவகம்

புத்திரர்

5-ஆமிடத்ததிபன் 7-ஆமிடத்ததிபன் 9-ஆமிடத்ததிபன் 12-ஆமிடம் நட்பு ஆட்சி உச்சத்திலிருக்க, அவரை குரு சந்திரன் பார்க்க, தந்தைக்கு மிகுந்த செல்வமுள்ள புத்திரர் உண்டாகுவார்.

இலக்கினுதிபதியும் 5-ஆமிடத்ததிபன் அல்லது பார்க்க பெருமைப்புதல்வர் பிறந்திடுவர்.

5-ஆமிடத்ததிபன் 9-ஆமிடத்ததிபன் மித்திரர் 5-ஆமிடத்ததிபன் உச்சம் அல்லது சுபருடனிருக்க, 11-ஆமிடத்திலிருக்க அநேக புத்திரர்.

மீனம் லக்கினமாக 5-ஆமிடத்தில் குரு உச்சமாக விருக்க பெண்களே பெறுவார்.

இலக்கினுதிபதியும் 4-ஆமிடத்ததிபனும் நல்லுறவாகவிருக்க தந்தைக்குப்பின் அதிக புத்திரர் இல்லை.

5-ஆமிடத்ததிபன் சந்திரன் சுக்கிரன் பெண்ராசியிலிருக்க பெண்களே பெறுவார்.

5-ஆமிடம் புதன் வீடாகவிருக்க ஆனல் சுபர் பார்க்க பிறந்து சாகும்.

கன்னியாவிராசி லக்கினமாக அதில் சூரியனிருக்க, செவ்வாய் 5-ஆமிடத்திலிருக்க இவன்முன் பிள்ளைகளெல்லாம் இறந்துவிடும்.

7-ஆமிடத்ததிபன் உச்சம் நீச்சம் இல்லாதிருக்க மூத்தோரில்லை.

சந்திரன் 10-லும் சுக்கிரன் 7-லும் பாபர் நாலிலுமிருக்க இவன் முன்பிள்ளைகளெல்லாம் சாகும்.

5-ஆமிடத்ததிபன் 5-ஆமிடத்திலிருக்க அல்லது 3-ஆமிடத்திலிருக்க புத்திரர் அற்பம்.

இலக்கினம் 5-10-ல் சனி இருக்க குழந்தைக்கு அரிட்டம்.

சூரியன் கேந்திரத்திலிருக்க சந்திரன் 9-ஆமிடத்திலிருக்க அற்ப புதல்வர்.

பாபர் லக்கினத்திலும் சந்திரன் லக்கினத்திலு மிருக்க குழந்தை இறந்துபோகும்.

இலக்கினத்தினும் 12-ஆமிடத்தினும் செவ்வாயிருக்க, இதற்கு 7-ல் சனி இருக்க, இதற்கு 12-ல் சூரியனிருக்க, ஆண் பெண் இல்லை.

5-ஆமிடத்தில் சந்திரனிருக்க பிள்ளை பிழைப்பதில்லை யென வறிக.

நடத்தை

ஐந்தாமிடம் புதன் வீடாக விருக்க புத்திரரில்லை.

4-ஆமிடத்தில் ஒருகிரக மிருக்க அல்லது 5-ஆமிடத்தானை 7-ஆமிடத்ததிபனும் 6-ஆமிடத்ததிபனும் பார்க்க, இதாஸ்திரீ பிரியன்.

5-ஆமிடத்தை சுபர் நோக்காமலிருக்க 5-ஆமிடத்ததிபனும் இராகுவுங்கூடிட மைந்தரில்லை.

புதனும் லக்கினதிபதியுங்கூடி 10-ஆமிடத்திலிருக்க 7-ஆமிடத்ததிபனும் சந்திரனும் 3-ஆமிடத்திலிருக்க ஸ்திரீ வேட்டைக்காரன்.

4-ஆமிடத்தில் பாபர்நிற்க 5-ஆமிடத்ததிபனும் சனியுங் கூடிட 12-ஆமிடத்தில் பாபர்நிற்க தாய்ச்சாபம் பாலரில்லை.

2-ஆமிடம் 12-ஆமிடம் சுபர் பாபர் வீடாக 11-ஆமிடத்ததிபன் 12-ஆமிடத்திலிருக்க புத்திரரில்லை.

இலக்கினத்தினும் 8-ஆமிடம் 12-ஆமிடத்திபனும் சனி இருக்க 7-ஆமிடத்தில் பாபர்நிற்க புத்திரரில்லை.

புதன் சுக்கிரன் 10-8-ஆமிடத்திலிருக்க 8-ஆமிடத்ததிபனும் பாபரும் பார்க்க புத்திரரில்லை.

இலக்கினத்தில் சுபர்கள் இருக்க 10-ஆமிடத்தில் ராகு இருக்க தாய் மாமனுக்கபாயம்.

7-ஆமிடத்ததிபன் கேந்திர திரிகோணத்தி லிருக்க அவருடன் 6-ஆமிடத்ததிபனும் கூடிடில் புதல்வரில்லை.

10-ஆமிடத்ததிபனும் சனியுங் கூடிட சகோதரன் பிள்ளைக்கு அபாயம்.

9-ஆமிடத்தை குரு சனி இவர்கள் பார்க்க சூரியன் புதன் ஏக வீட்டிலிருக்க பிள்ளையை அன்னியர் வளர்ப்பார்கள்.

5-ஆமிடத்ததிபனும் பாபரும் 8-ஆமிடத்தி லிருக்க 12-ஆமிடத்தில் குருவிருக்க 4-ஆமிடத்தை சுபர்கள் பார்க்க பனிரண்டு வருஷம்.

இலக்கினம் 5-10-ல் செவ்வாயிருக்க மாதுலானுக்கு அரிட்டம்.

5-ஆமிடத்ததிபனும் சூரியனும் ராகு கூடியிருக்க தந்தை மைந்தனுக்குப் பகை.

4-ஆமிடம் 11-ஆமிடத்தில் சனி சந்திரன் செவ்வாய் சூரியன் இவர்களிருக்க, அவரை சுபர்கள் பாக்க அன்னைக் கன்னே வியம்.

5-ஆமிடத்தில் 11-ஆமிடத்தில் சனி சந்திரன் செவ்வாய் சூரியன் இவர்கள் இருக்க அவரை சுபர்கள் பார்க்க துன்பமில்லை.

இலக்கினத்தில் சந்திரன் சூரியன் குரு கூடியிருக்க தனமாகிய புலவன்,

இலக்கின முதல் எண்ணி லக்கினுதிபதி இருந்த வீடு சுபர் வீடாகில் தனவான்.

10-ஆமிடம் 2-ஆமிடம் லக்கினுதிபதியும் கேந்திரத்திலிருக்க அவரை சுபர்பார்க்க சிறுவயதில் தனவான்.

இலக்கினத்தில் சந்திரனிருக்க 4-ஆமிடத்தில் சனி செவ்வாயிருக்க 10-ஆமிடத்தில் புதன் சுக்கிரன் கூடிடில் பூச்சக்ரதனவான்.

இலக்கினம் 5-2-12-ல்-சுபர் மனையாகில் பொன்னுள தேயவான்.

ரிஷபவிராசியில் சந்திரனிருக்க விருச்சிகவிராசியில் குருவிருக்க தனவானெனவறிக.

தத்து புத்திரர்

5-ஆமிடத்ததிபனும் இராகு கேது இவர்கள் 8-ஆமிடத்தில் கூடிட தத்து புத்திரன்.

5-ஆமிடத்ததிபனும் செவ்வாயுங் கூடிட அவரை சனிபார்க்க 5-ஆமிடத்தில் நிற்க தத்து புத்திரன்.

5-ஆமிடத்ததிபனும் ராகு செவ்வாய் சூரியன் கூடிட மிருகங்களைப்போ லிருப்பானெனவறிக.

ஐந்தாம் பாவகம் முற்றிற்று.

ஆறும் பாவகம்

வாழ்க்கை

இராகும் 2-ஆமிடத்ததிபனும் கூடி 6-ல் அல்லது ராகு இருக்கும் சொந்தவீட்டானோடு 2-ஆமிடத்ததிபன் கூடிட பல்நோய்.

6-ஆமிடத்ததிபனும் பாபரும் தீக்கோளுடனிருக்க.புகழ்ந்திட வாழ்வான்.

6-ஆமிடத்தில் சுக்கிரனிருக்க 6-ஆமிடத்ததிபனும் கேந்திரத்திலிருக்க அவரை சுபர்பார்க்க ஞாதிக்குபகாரஞ் செய்வான்.

சுக்கிரன் 6-ஆமிடத்திலிருக்க செவ்வாய் லக்கினத்திலிருக்க மூக்கு வெட்டுண்டுபோகும்.

6-ஆமிடத்தில் ராகு இருக்க விஷங்கள் தீண்டாது.

சனி செவ்வாய் 2-ஆமிடத்ததிபனும் லக்கினத்திலிருக்க அல்லது 6-ஆமிடத்ததிபன் லக்கினத்திலிருக்க அல்லது செவ்வாய் குளிகன் லக்கினத்திலிருக்க காதுநோயும் காது வெட்டுண்டு போகும்.

சந்திரன் சனி பார்க்க லக்கினத்தில் சூரியன், அல்லது கூடி சுபர் நோக்காதிருக்க காது துண்டாகுமெனவறிக.

அலி

சந்திரனுக்கு 10-ல் செவ்வாயிருக்க சூரியன் 2-ஆமிடத்திலிருக்க உடல் ஊனம்.

சூரியன் சந்திரன் பார்க்க அல்லது நிற்க சனி புதன் பார்க்க அலி.

செவ்வாய் சூரியன் பார்க்க அலி.

சந்திரன் ஆண்ராசியி லிருக்க அது சுக்கிரன் வீடாக அலியாமெனவறிக.

கெண்டம்

7-ஆமிடத்தில் பாபரிருக்க அவரை சுபர்கள் நோக்காதிருக்க பல்நோய்.

6-ஆமிடத்ததிபனும் லக்கினாதிபதியும் சூரியனுங் கூடிடில் சுர கண்டம்.

சந்திரன் கூடிடில் சகலகாயம்.

செவ்வாய் கூடிடில் ஆயுதவிரணம்.

சனி கூடிடில் நீர்விரணம்.

இராகு கூடிடில் பாம்பால்அபாயம்.

இலக்கினதிபதியும் 4-ஆமிடத்ததிபனும் 8-ஆமிடத்தில் கூடிட அல்லது 6-ஆமிடத்திலிருக்க ஜீரணத்தாற் கெண்டம்.

சுக்கிரனும் 7-ஆமிடத்ததிபனும் நீச்சருடன் கூடி நீச்ச ஸ்தானத்திலிருக்க பெண்சாதியை புருஷன் கொலைசெய்வான்.

இலக்கினதிபதியும் 4-ஆமிடத்ததிபனும் சனியுங் கூடிட விஷ பட்சணத்தாற் கண்டம்.

4-ஆமிடத்ததிபனும் சனியுங்கூடி லக்கினத்திலிருக்க விஷபட்ச ணத்தாற் கண்டம்.

சுக்கிரன் சுபர் நோக்காதிருக்க அல்லது கூடாமல் நோக்க பெண்சாதி காயத்தால் இறப்பாள்.

6-ஆமிடத்ததிபனும் பாபருங்கூடி 8-ஆமிடத்திலிருக்க அங்கத் தில் விரணமெனவறிக.

ஆறும் பாவகம் முற்றிற்று.

ஏழாம் பாவகம்

மனைவியின்ஜாதி

7-மிடத்தில் குரு சுக்கிரனிருக்க அழகுள்ள ஸ்திரீ.

சுக்கிரனும் குருவுங்கூடிட பிராமண கன்னி

சூரியனும் செவ்வாயுங்கூடிட க்ஷத்திரியமயில்.

சந்திரனும் சுக்கிரனுங்கூடிட வைசியபெண்.

சந்திரனும் சனியுங்கூடிட சூத்திரபெண்.

சந்திரன் இராகு கேது கூடிட புலையன் பறஜாதிப்பெண்.

சுக்கிரன் செவ்வாய் 7-ஆமிடத்திலிருக்க விதவைப்பிரியான்.

7-ஆமிடச்சனி 6-8-12-லிருக்க விதவையை சேர்வான்.

7-ஆமிடத்ததிபனும் ராகு கேது இவர்கள் கூடி 8-6-12-லிருக்க ஈனகுல பெண்ணைச்சேர்வான்.

சந்திரனும் 7-ஆமிடத்ததிபனு மிருக்க வேலைக்கார ஈனஜாதிப் பெண்.

செவ்வாயும் 7-ஆமிடத்ததிபனு மிருக்க தீட்டுப் பெண்ணை சேர்வான்.

புதனும் 7-ஆமிடத்ததிபனுமிருக்க வர்த்தகம் எளியபெண்களை சேர்வான்.

சூரியனும் 7-ஆமிடத்ததிபனுமிருக்க தெய்வபக்தி பெண்களை சேர்வார்கள்.

சனியும் 7-ஆமிடத் ததிபனுமிருக்க கிழவிகளை சேர்வார்கள்.

மேற் சொல்லியதுகள் 4-ஆமிடத்தில் சூரியனிருக்க தோட்டம் சந்திரனிருக்க வீடு செவ்வாயிருக்க பாழடைஞ்சவீடு புதனிருக்க தபாஷான இடம் குருவிருக்க கோயில் சுக்கிரனிருக்க தண்ணீரிடம் சனி இராகு இருக்க மிருகங்கள் அடைக்கு மிடம்.

பாபர் 1-4-10-7-இந்த ராசிகளிலிருக்க அவரை சுபர் நோக்கா திருக்க மிருகங்களை சேர்வான்.

7-ஆமிடத்தில் செவ்வா இருக்க பாலில்லா மார்பாயிருக்கும்.

7-ஆமிடத்தில் சனி ராகு இருக்க அழகில்லாமல் தொங்கிக் கொண்டிருக்கும்.

7-ஆமிடத்தில் சுக்கிரனிருக்க அழகானதும் எடுப்பாயு மிருக்கும்.

7-ஆமிடத்ததிபன் புதன் சுக்கிரன் குரு சந்திரன் இவர்க ளிருக்க பிறருக்கும் ஆசையை தருவிக்கும் மார்பு.

சந்திரன் செவ்வாய் 6-ஆமிடத்ததிபனும் 4-ஆமிடத்திலிருக்க வேறோர் விஷயம்.

இலக்கினத்தினும் 7-ஆமிடத்திதிபனும் சந்திரனிருக்க 7-ஆ மிடத்தை சுபர்கூடி பார்க்க மாமியை மணப்பான்.

பாபர்பார்க்க 7-ஆமிடத்தில் இராகு கேது இருக்க பாபர் கேந் திரத்தில் இருக்கப்பார்க்க நாற்கால்பெண்ணை விரும்புவா னென வறிக.

கலியாணம்

சுக்கிரனை எத்தனை கிரகம் கூடியிருக்கின்றதோ அத்தனை மனை வியர்.

3-ஆமிடத்ததிபனும் 12-6-8-ஆமிடத்தில் பாபருடனிருக்க அவரை எத்தனைகோள் பார்க்கின்றனவோ அத்தனை தாரம்.

சுக்கிரன் தன்வீட்டிலிருக்க ஒருவிவாகம்.

2-ஆமிடத்ததிபன் அல்லது 7-ஆமிடத்ததிபன் அவர்கள் இடத்திலேயே யிருக்க ஒரு பெண்சாதி.

7-ஆமிடத்ததிபன் கேந்திர திரிகோணத்திலிருக்க ஒருதாரம்.

7-ஆமிடத்ததிபனும் சுபருங்கூடி பாபரிடத்திலிருக்க 7-ஆமிடத்தில் பாபர் இருக்கபார்க்க இரண்டு கலியாணம்.

7-ஆமிடத்ததிபன் 8-ஆமிடத்ததிபனும் திரிகோண கேந்திரத்தினு மிருக்க வேறேதாரம் விரும்பான்.

காரகனும் 7-ஆமிடத் ததிபனுங்கூடி பாபர்க்கு மத்தியிலிருக்க 7-ஆமிடத்தில் பாபர்கள் இருக்கப்பார்க்க அரிட்டம்.

7-ஆமிடத்ததிபனும் சனியுங்கூடி 6-8-12-லிருக்க வாலிபத்தில் மனைவி யுண்டாகும்.

இரண்டாமிடத் ததிபனும் பாபருமிருக்க அல்லது 7-ஆமிடத் ததிபனும் பாபருமிருக்க இரண்டு கலியாணம்.

7-ஆமிடத்தில் பாபரிருக்க அவரை 7-ஆமிடத்ததிபன் பார்க்க மூன்று கலியாணம்.

இலக்கினத்தில் பாபர் இருக்க 7-ஆமிடத்ததிபன் நீச்சத்தினும் சத்துரு வீட்டினுமிருக்க இரண்டு கலியாணம்.

7-ஆமிடத்திற்குப் 12-ல் சந்திரன் நிற்க சுக்கிரன் பாபருமிருக்க புருஷனைக் கொல்வாள்.

11-ஆமிடத்ததிபனும் 7-ஆமிடத்ததிபனும் கூடிட அல்லது பார்க்க திரிகோணத்திலிருக்க மூன்று விவாகம்.

2-ஆமிடத்ததிபனும் 7-ஆமிடத்ததிபனும் 6-ஆமிடத்ததிபனும் லக்கினத்தி லிருக்க கூட சுக்கிரன் குருவிருக்க அனேக பெண்சாதி.

7-ஆமிடத்ததிபன் உச்சத்தில் லக்கினத்தில் வலுவாகவிருக்க அநேக பெண்சாதி.

7-ஆமிடத்தில் 9-ஆமிடத்ததிப னிருக்க 7-ஆமிடத்ததிபன் 4-ஆமிடத்திலிருக்க அல்லது 7-ஆமிடத்ததிபனும் 11-ஆமிடத்ததிபனும் கூடி கேந்திரத்திலிருக்க அநேக பெண்சாதி.

சுக்கிரனும் 8-ஆமிடத்ததிபனுங் கூடி 3-ஆமிடத்திலிருக்க மனைவிக்கீனம்.

சூரியன் சுக்கிரன் 9-5-லிருக்க பெண்சாதிக்கீனம்.

இலக்கினத்தினும் 7-ஆமிடத்தினும் பாபர் நிற்க களத்திர ரோகம்.

சூரியனுக்கு 12-6-ல் செவ்வாயிருக்க பெண்சாதிக்குக் கண் தெரியாது.

குரு ராகு கேது 2-ஆமிடத்திலிருக்க குடும்பயேழை.

சனி குரு கூடி கன்னியாராசியிலிருக்க குருவும் லக்கினுதிபதியும் மீனராசியிலிருக்க மனைவிதானும் துன்பம் அரிட்டம்.

தேய்பிறை சந்திரனும் 5-ஆமிடத்திலிருக்க பாபர் 7-12-லிருக்க பெண்சாதி பிள்ளைகளில்லை.

2-ஆமிடத்ததிபனும் காரகனும் நீச்சம் 6-8-12-லிருக்க மனை விக்கினம்.

சுக்கிரனுக்கு 6-8-12-ஆமிடத்தில் குருவிருக்க கொண்ட மனை விக்கினம்.

இலக்னுதிபதியும் 7-ஆமிடத்ததிபனுங் கூடி 12-6-8-ஆமிடத்தி லிருக்க விவாகமில்லை.

2-ஆமிடத்ததிபனும் 3-ஆமிடத்ததிபனும் 6-8-12-லிருக்க ரோகங்கள்.

இலக்கினுதிபதி 6-ஆமிடத்ததிபனும் கூடியிருக்க போகமில்லை.

7-ஆமிடத்தில் குரு விருக்க அல்லது 6-8-12-லிருக்க அல்லது சத்துரு நீச்சத்திலிருக்க பாணிக்கிரகணம் செய்து மணம்புரிய மாட்டானெனவறிக.

மனைவி வரும்திசை

குரு கிழக்கு சுக்கிரன் வன்னி செவ்வாய் தெற்கு இராகு நிருதி சனி மேற்கு சந்திரன் வாய்வு திசை புதன்வடக்கு 7-ஆமிடத்ததிபன் குரு வீட்டிலிருக்க கலியாணம் தூரதேச மெனவறிக.

ஏழாம் பாவகம் முற்றிற்று.

எட்டாம் பாவகம்

தீர்க்காயுசு

கடகமுதல் 6-ராசியில் குருவிருக்க மகரமுதல் 6-ராசியில் சனி இருக்க கடகம் கேந்திரமாகவிருக்க பிறக்கும் பிள்ளை தீர்க்காயுசு.

பாபர் திரிகோணத்திலிருக்க சுபர் கேந்திரத்திலிருக்க பாபர் 8-ல் இராமலிருக்க வெகுவயது.

இலக்கினம் கடகவிராசியாக அதில் சந்திரன் குருவிருக்க சுக்கிரன் புதன் கேந்திரத்திலிருக்க செவ்வாய் சூரியன் சனி 3-6-11-லிருக்க வெகுவயது.

மகாமுதல் 6-ராசியில் சனியிருக்க மற்றராசிகளில் சந்திரனிருக்க கேந்திரத்தை குருபார்க்க தீர்க்காயுசு.

சந்திரன் சுபர்வீட்டிலிருக்க அவரை சனி பார்க்க தீர்க்காயுசு.

மிதுனமுதல் 6-ராசியில் குருவிருக்க மற்ற 6-ராசியிலும் திரிகோண கேந்திரத்திலும் புதன் சுக்கிரனிருக்க தீர்க்காயுசு.

இலக்கினம் கடகவிராசியாக சனி துலாத்திலிருக்க சந்திரன் ரிஷபத்திலிருக்க குரு மகரத்திலிருக்க வெகுவயது.

8-ஆமிடத்ததிபன் உச்சத்திலிருக்க லக்கினுதிபதியும் 8-ஆமிடத்ததிபனும் கேந்திரத்திலிருக்க அவரை சுபர்கள்பார்க்க வெகுவயது.

சுபர்கள் 7-8-6-ஆமிடத்திலிருக்க 3-11-ஆமிடத்தை சுபர்கள் பார்க்க தீர்க்காயுசு.

8-ஆமிடம் உச்சமாகவிருக்க லக்கினுதிபதியும் 7-ஆமிடத்ததிபனும் கேந்திரத்திலிருக்க அவரை சுபர்கள் பார்க்க வெகுவயது.

6-8-12-சுபர்கள் பார்க்க தீர்க்காயுசு உடையவனு மெனவறிக.

அற்பாயுசு

சூரியன் உதைய மாகிறதற்கு முந்தி $2\frac{1}{2}$-நாழிகை அல்லது அஸ்தமித்த பிந்தி $2\frac{1}{2}$-நாழிகையாகிலும் குழந்தை பிறந்தால் அற்பாயுசு.

சந்திரன் கேந்திரத்திலிருக்க பாபர் கூடினுல் அற்பாயுசு.

பாபர்கள் 6-8-12-ஆமிடத்திலிருக்க லக்கினாதிபதி கேவலனாக சுபர் நோக்காதிருக்க கொஞ்சம் வயது.

6-8-12-ஆமிடத்ததிபதி பாபியாயிருக்க அற்பாயுசு.

சூரியன் சந்திரன் சனி செவ்வாய் நால்வரும் நாலுகேந்திரத்திலிருக்க அற்பாயுசு.

பாபர் கேந்திரத்தில் இருக்க அவரை சுபர் பாராதிருக்க லக்கினாதிபதி கேவலனாக கொஞ்சம் வயது.

சந்திரன் சூரியன் 12-ஆமிடத்திலிருக்க 12-ஆமிடத்ததிபன் லக்கினத்திலிருக்க அற்பாயுசு.

மேஷ விராசியில் சனி சுக்கிரன் புதன் பாபர்களும், சூரியன் குரு சுபருடன் கூடினால் அற்பபலன்.

ஜனனம் கடகம் அல்லது விருச்சிகமாகவிருக்க பாபர் 1-2-10-11-12-லும் சுபர் 4-5-6-7-8-9-இருக்க அற்பாயுசு.

சந்திரன் 12-ஆமிடத்திலும் பாபர் 1-8-ஆமிடத்திலிருக்க 3-ஆமிடத்தில் இல்லாதிருக்க அற்பாயுசு.

பாபர் 2-12-லிருக்க சுபர் நோக்காதிருக்க கொஞ்சம் வயது.

சூரியன் கேவலமாக யிருக்க கொஞ்சம் வயதெனவறிக.

முக்கால வயது

8-ஆமிடத்ததிபன் கேந்திரத்தி லிருக்க லக்கினாதிபதியும் பாபரும் அல்லது வலுவாக யிருக்க வெகுவயது.

1-10-ல் 8-ஆமிடத்ததிபன் வலுவாகயிருக்க வெகுவயது.

சுக்கிரன் அல்லது புதன் அல்லது குரு கேந்திரத்திலிருக்க பார்க்க வெகுவயதெனவறிக.

மாரக திசை

மேஷவிராசியில் சனி சுக்கிரன் புதன் பாபர் சூரியன் குரு சுபர் கூடினால் சுக்கிரதிசையில் மாரகம்.

ரிஷபம் குரு செவ்வாய் சூரியன் பாபர் சூரியன் சனி சுபர் சுக்கிரன் 2-ஆமிடமாக மாரகம்.

மிதுனம் குரு செவ்வாய் சூரியன் பாபர் சுக்கிரன் சுபர் சந்திரன். சனி அற்பம் பாபர்திசை மாரகம் அல்லது செவ்வாய் திசையில் மாரகம்.

கடகத்தில் புதன் பாபர் குரு செவ்வாய் சுபர் இருக்க சூரியன் யோகம் மாரகம்.

சிங்கம் சுக்கிரன் புதன் பாபர் செவ்வாய் சுபர் இருக்க குரு சுக்கிரயோகம் மாரகன்.

கன்னி சூரியன் சந்திரன் குரு பாபர் புதன் சுபர் இருக்க புதன் சுக்கிரயோகம் சுக்கிரன் மாரகன்.

துலாம் செவ்வாய் சூரியன் பாபர் சனி புதன் சுபர் இருக்க சந்திரன் புதன் யோகம் செவ்வாய் மாரகன்.

விருச்சிகம் புதன் செவ்வாய் சுக்கிரன் பாபர் சந்திரன் யோகம் குரு மாரகன்.

தனுசு சுக்கிரன் பாபர் சூரியன் சுபர் புதன் யோகம் சுக்கிரன் மாரகன்.

மகரம் குரு செவ்வாய் சந்திரன் பாபர் சுபர் புதன் சுபர்யோகம் சுக்கிரன் மாரகன்.

கும்பம் குரு சந்திரன் செவ்வாய் பாபர் சுக்கிரன் சுபர் புதன் யோகம் குரு மாரகன்.

மீனம் சனி புதன் சூரியன் பாபர் செவ்வாய் சந்திரன் சுபர் குரு யோகம் செவ்வாய் மாரக னெனவறிக.

மாரககாரணமும் இடத்தையும், நடத்தையும்

செவ்வாய் 10-ஆமிடத்திலிருக்க சந்திரன் 8-ஆமிடத்தி லிருக்க சனி லக்கினத்திலிருக்க சூரியன் 4-ஆமிடத்திலிருக்க துஷ்டரால் மரணம்.

8-ஆமிடத்ததிபனும் செவ்வாயுங்கூடி 6-12-லிருக்க துஷ்டரால் மரணம்.

8-ஆமிடத்ததிபனும் லக்கினாதிபதியுங்கூடி 6-ஆமிடத்திலிருக்க அவரை சனிபார்க்க வாலிபத்தில் மரணம்.

லக்கினத்தினும் 8-ஆமிடத்தினும் செவ்வாய் சந்திரனிருக்க சனிபார்க்க அரிட்டம்.

சுக்கிரன் இரண்டு வலுவாக பாபர் மத்தியிலிருக்க உயரத்தி லிருந்து விழுவான்.

8-ஆமிடத்ததிபனும் ராகுங் கூடி 8-12-லிருக்க கள்ளரால் மரணம்.

சூரியன் 4-ஆமிடத்திலிருக்க செவ்வாய் 10-ஆமிடத்திலிருக்க சனி பார்க்க கள்ளரால் மரணம்.

இலக்கினதிபதியும் 4-ஆமிடத் ததிபனுங்கூடி 4-லிருக்க 10-ஆமிடத்ததிபன் பார்க்க தண்ணீர்க் கல்லரை.

8-ஆமிடத்ததிபனும் லக்கினதிபதியுங் கூடிட ஜலகண்டம்.

சூரியன் அல்லது சந்திரன் லக்கினத்திலிருக்க சுபர் பாபர் 5-8-9-லிருக்க தாயும் பிள்ளைகளும் ஆயுதமரணம்.

சூரியன்-சனி-அல்லது - புதன் - ராகு-லக்கினத்திலிருக்க-செவ்வாய் 8-ஆமிடத்திலிருக்க தாயும் பிள்ளைகளும் ஆயுதமரணம்.

இராகு சனி சூரியன் 7-ல் இருக்க பாம்பு கடிக்கும்.

சுக்கிரன் 4-ஆமிடத்திலிருக்க பாபர் 8-ஆமிடத்திலிருக்க சுபர் நோக்காதிருக்க பாம்பினால் மரணம்.

8-ஆமிடத்ததிபனும் 4-ஆமிடத்ததிபனும் 6-8-12-லிருக்க வாகனங்களால் மரணம்.

பாபர் 4-ஆமிடத்திலிருக்க 6-ஆமிடம் ஜலராசியாகில் தண்ணீர் பயம்.

சூரியன் 10-ஆமிடத்திலிருக்க செவ்வாய் 4-ஆமிடத்திலிருக்க குதிரைமேலேறி விழுந்திறத்தல்.

இலக்கினதிபதி கேவலனாக 4-ல் சூரியன் அல்லது பாபர் கூடியிருக்க 4-ஆமிடத்ததிபனும் கேவலமாக தண்ணீர்க் கல்லரை.

8-ஆமிடத்ததிபன் சனி அம்கிசத்திலிருக்க மரத்திலேறி விழுந்திறப்பான்.

சந்திரன் 10-ஆமிடத்திலிருக்க செவ்வாய் 9-ஆமிடத்திலிருக்க சனி லக்கினத்திலிருக்க சூரியன் 5-ஆமிடத்திலிருக்க புகையினால் மரணம்.

8-ஆமிடத்தில் சூரியனிருக்க நெருப்பினாலும் அல்லது 8-ஆமிடத்ததைப் பார்க்க புகையினால் மரணம்.

9-ஆமிடத்ததிபன் நீச்சத்திலிருக்க ஜன்னிவாதசுரம்.

சூரியன் 8-ஆமிடத்திலிருக்க நெருப்பு அல்லது 8-ஆமிடத்தைப்பார்க்க வயறுநோய்.

சந்திரன் தண்ணீர் அல்லது காற்று

செவ்வாய் ஆயுதம் அல்லது அதிகசூடு

புதன் சுரம் அல்லது சகலவித நோய்

குரு கிராணி அல்லது சகலவித நோய்

சுக்கிரன் தாகம் அல்லது காற்று

சனி பசி அல்லது காற்று.

செவ்வாய் 7-லிருக்க சனி சந்திரன் சூரியன் லக்கினத்திலிருக்க யந்திரத்தாலே.

சூரியன் 7-லிருக்க சனி 8-லிருக்க தேய்பிறைசந்திரன் 4-ஆமிடத்திலிருக்க பட்சிகளுக்கு இறையாவான்.

சூரியன் லக்கினத்திலிருக்க செவ்வாய் 5-லிருக்க சனி 8-லிருக்க சந்திரன் 9-லிருக்க இடி அல்லது வீடு விழுந்து சாவான்.

புதன் தனுசு அல்லது மீனத்திலிருக்க குரு மேஷ விருச்சிகத்திலிருக்க புலியால் கொல்லப்படுவான்.

இலக்கினத்தில் குருவும் 3-ஆமிடத்ததிபனு மிருக்க நாலுகால் ஜீவனுல் பயம்.

குரு 12-ஆமிடத்திலிருக்க தூரதேச மரணம்.

8-ஆமிடத்ததிபனும் 4-ஆமிடத்ததிபனுங் கூடி 2-ஆமிடத்திலிருக்க தகப்பன் வீட்டில் மரணம்.

சந்திரன் புடனுடன்கூடி குளிகன் புடம்கூட்டி சந்திரனிருக்க சுரம்.

சூரியன் புடனுடன் குளிகன் புடம் கூட்டி சூரியனிருக்க நலி.

இலக்கினத்தில் சனி குளிகன் கூடியிருக்க அல்லது 12-6-8-ஆமிடத்திலிருக்க மரணம்.

8-ஆமிடத்ததிபனும் லக்கினுதிபதியும் கூடியிருக்க கல்லினுல் அல்லது இடியினுல்.

8-ஆமிடத்ததிபன் நீச்சம் 12-6-8-லிருக்க குன்ம வியாதியால் மரணம்.

சந்திரன் சனி ரிஷபம் அல்லது துலாத்திலிருக்க கத்தியால் கொல்லப்படுவான்.

சுக்கிரன் சனி 2-12-லிருக்க சந்திரன் லக்கினத்திலிருக்க சூரியன் 7-லிருக்க வெண்குஷ்டம்.

5-9-மிதுனம் விருச்சிகம் மகரம் ரிஷபமாகில் அதை பாபர் பார்க்க அல்லது கூடியிருக்க குஷ்டம்.

சந்திரன் சனி-12-லிருக்க மண்டைநோய்.

சனி லக்கினத்திலிருக்க செவ்வாய் 5-9-7-லிருக்க மண்டை நோய்.

8-ஆமிடத்ததிபன் அல்லது லக்கினாதிபதியும் குளிகனும் கூடிட கால்சுரம் பின்னம் நோயினால் மடிவான்.

செவ்வாய்க்கு 7-ல் குருவும் லக்கினாதிபதியுமிருக்க மண்டை நோய்.

சனி செவ்வாய் 8-ஆமிடத்திலிருக்க லக்கினத்தில் சூரியனிருக்க சந்திரன் 8-ஆமிடத்திலிருக்க ஜலத்தில் இறப்பான்.

3-ஆமிடத்தில் நீச்சனிருக்க 6-ஆமிடத்தில் பாபரிருக்க பாஷாண பயம்.

4-ஆமிடத்ததிபன் லக்கினத்தி லிருக்க அல்லது 4-ஆமிடத்ததிபன் பார்க்க கூடியிருக்க தண்ணீரில் முழுகி விடுவான்.

சூரியன் செவ்வாய் 4-லிருக்க 4-ஆமிடத்ததிபன் அல்லது 10-ஆமிடத்ததிபன் பார்க்க அல்லது கூட கல்லினால் மரணம்.

4-ஆமிடத்தில் சனி ராகுகூடிட செவ்வாய் பார்க்க சுபர் பாரா திருக்க கல்லினால் மரணம்.

சனி 7-லும் குரு லக்கினத்திலுமிருக்க பலயீன மூள்ள குடல்.

சூரியன் 4-லிருக்க செவ்வாய் 10-லிருக்க தேய்வு சந்திரன் பார்க்க ஆயுதவிரணம்.

செவ்வாய் சனி மத்தியில் சந்திரனிருக்க சூரியன் மகரத்தி லிருக்க அஜீரணம் கஷ்டசுவாசம்.

சனி சூரியன் 8-ஆமிடத்திலிருக்க கோதார வியாதி.

சனி சூரியன் தேய்வு சந்திரனும் 8-ஆமிடத்திலிருக்க ஆயுதமரணம்.

சூரியன் அல்லது செவ்வாய் 4-ஆமிடத்திலிருக்க சனி ஈட்டி யால் கொல்லப்படுவான்.

சனி சூரியன் 9-ஆமிடத்தில் கூடிட செவ்வாய் பார்க்க சுரோ ணிதமறிவான்.

செவ்வாய்க்கு 9-ல் சூரியன் ராகு சனி சம்பந்தப்பட்டால் அம் பினால் சாவான்.

இராகு லக்கினத்திலிருக்க சனி செவ்வாய் திரிகோணத்திலிருக்க பேய் பிடிக்கும்.

சனி சந்திரன் செவ்வாய் கூடியிருக்க தன்னையே கொலை செய் வான்.

சனி சந்திரன் 7-ல் செவ்வாய் 10-ஆமிடத்திலிருக்க கிணற்றில் விழுந்திறத்தல்.

சூரியன் சனி செவ்வாய் கூடி 8-ஆமிடத்திலிருக்க லக்கினத்தில் புதன் ராகு சந்திரனிருக்க மெய்புழுத்து மடிவான்.

சனி 2-ஆமிடத்திலிருக்க சந்திரன் 4-ஆமிடத்திலிருக்க செவ்வாய் 10-ஆமிடத்திலிருக்க தேகத்தில் புழு புழுத்து சாவான்.

சனி சந்திரன் 12-8-லிருக்க சனி சந்திரன் 8-ஆமிடத்ததிபனுங்கூட பார்க்க கிணற்றில் வீழ்வான்.

8-ஆமிடத்ததிபனும் சனி செவ்வாயுங் கூடிட அல்லது செவ்வாய் சூரியன் 8-மிடத்திலிருக்க அல்லது 8-ஆமிடத்தைப் பார்க்க வெற்பிமேலேறி விழுந்திறப்பான்.

செவ்வாய் சூரியன் சுக்கிரன் கூடியிருக்க விலங்கு பூணுவான்.

பாபர் 9-ஆமிடத்திலிருக்க திரேகாணம் 8-ஆமிடமாக முன் மூன்று வீட்டை சுபர் நோக்காதிருக்க விலங்குடனிருந்து தன்கையினால் உயிர் விடுவான்.

சனி சந்திரன் செவ்வாய் கூடியிருக்க தன்னையே கொலை செய்வான்.

லக்கினத்தில் சனி குளிகன் கூடியிருக்க அல்லது 12-6-8-ஆமிடத்திலிருக்க மரணம்.

8-ஆமிடத்ததிபனும் லக்கினுதிபதியுங் கூடி 6-ஆமிடத்திலிருக்க சனிபார்க்க வாலிபதிசையில் அரிட்டம்.

குரு லக்கினத்திலிருக்க எல்லாக் கெடுதி நிவர்த்தி.

விருச்சிகம் அல்லது மிதுனவிராசியை குரு சூரியன் சந்திரன் செவ்வாய் சனிபார்க்க சுக்கிரன் பாராதிருக்க செத்துப் பிறக்கும்.

சந்திரனுக்கு இரண்டு பக்கத்திலும் வலுவான கிரக மிருந்தால் பயமில்லை.

சந்திரன் லக்கினத்தைப் பார்க்க குரு கேந்திரத்திலிருக்க பயமில்லை.

குரு 5-ஆமிடத்தி லிருக்க எல்லாரையும் பார்க்க பயமில்லை.

சந்திரன் லக்கினத்திலிருக்க பாபர் 2 - 12 - 7 - 8 - ஆமிடத்திலிருக்க சுபர் பார்வையில்லாதிருக்க தாய்க்கும் பிள்ளைக்கும் அபாயம்.

குரு லக்கினத்திலிருக்க எல்லாம் நிவர்த்தியாகும்.

எட்டாம் பாவகம் முற்றிற்று.

ஒன்பதாம் பாவகம்

பிதாவுக்கீனம்

சூரியன் அல்லது செவ்வாய் அல்லது சனி லக்கினம் 9-5-10-ஆமிடத்திலிருக்க பிதாவுக்கீனம்.

பாபர் 5-9-ஆமிடத்திலிருக்க ராகு அல்லது கேது கேந்திரத்திலிருக்க பிதாவுக்கீனம்.

9-மிடத்ததிபனுங் குருவுங்கூடி கேந்திர திரிகோணத்திலிருக்க அல்லது 9-ஆமிடத்திலிருக்க மகாதிசையில் அவரவர் பொசிப்பில் பூரண பாக்கியம் சேரும்.

பிதாவுக்கு நலம்

5-ஆமிடத்ததிபதி உச்சத்திலிருக்க பிதாவுக்கு நலம் பிணி காட்டும்.

இலக்கினத்தில் செவ்வாயிருக்க 7-ஆமிடத்தில் சூரியன் குருவிருக்க தந்தைக்கு நலம்.

சூரியன் சனி கூடிட அவரை சனிபார்க்க பிணி நீங்கும்.

9-ஆமிடத்ததிபனும் செவ்வாயும் சனியுங் கூடிட சுபர் பார்க்க கஷ்டமில்லை.

பிதாவுக் கரிட்டம்

சூரியனும் 9-ஆமிடத்ததிபனுங் கூடிட சனி பார்க்க பிதாவுக் கரிட்டம்.

சூரியனும் 9-ஆமிடத்ததிபனும் சனி செவ்வாயுங்கூடி 3-ஆமிடத்திலிருக்க பிதாவுக் கரிட்டம்.

9-ஆமிடத்ததிபன் புடத்தில் குளிகன் புடம் வாங்கி சூரியனிருக்க நிரயாணம்.

9-ஆமிடத்ததிபனும் சூரியனும் 3-6-12-லிருக்க தகப்பன் சீக்கிரத்தி லிறப்பான்.

சூரியனுக்கு இரண்டு பக்கமும் பாபரிருக்க பாபர் பார்க்க பிள்ளை கெர்ப்பத்தி லிருக்கும்போதே பிதாவுக் கரிட்டம் நேரும்.

சூரியனுக்கு 7-ல் செவ்வாய் அல்லது சனி இருக்க அல்லது பார்க்க தகப்பன் மரணம்.

5-ஆமிடத்ததிபன் மனை உச்சத்திலிருக்க சிலநாளிருந்து அரிட்டம்.

செவ்வாய் கேது சூரியன் குரு கூடி இருக்க மூன்று வருடத்தில் அரிட்டமெனவறிக.

பாக்கியம்

சந்திரன் 5-ஆமிடத்திலிருக்க சரம் லக்கினமாக 5-ஆமிடம் சரமாக பூரண ஐஸ்வரியம்.

திரவிராசியாக விருக்க	அரைபங்கு
உபயவிராசியாகில்	கால்பங்கு

9-ஆமிடத்ததிபனும் குருவுங் கூடி கேந்திர திரிகோணத்திலிருக்க அல்லது 9-ஆமிடத்திலிருக்க மகாதிசையில் அலரவர் புசிப்பில் பூரணபாக்கியஞ் சேரும்.

7-ஆமிடத்ததிபனும் 11-ஆமிடத்ததிபனுங் கூடி சுபர் வீட்டிலிருக்க அவர் திசையில் பாக்கியம்.

11-ஆமிடத்ததிபனும் 7-ஆமிடத்ததிபனும் மித்துரு சுபர் வீட்டிலிருக்க லக்கினுதிபதி கூடிடில் ஐஸ்வரியம் ஜீவபரியந்தமிருக்கும்.

11-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்ததிபனுங் கூடி 7-ஆமிடத்திலிருக்க 9-ஆமிடம் 7-ஆமிடம் உச்சம் அல்லது கேந்திரமாக 7-ஆமிடத்ததிபன் சுபனுக 9-ஆமிடத்திலிருக்க பாக்கியவான் மனைவிக்குச் சுகம்.

சந்திரன் குரு சுக்கிரன் கூடி 10-ஆமிடத்திலிருக்க தனவான்.

குரு சனி புதன் செவ்வாய் கூடியிருக்க வெகு பாக்கியவான்.

10-ஆமிடத்ததிபன் உச்சவீட்டிலிருக்க 10-ஆமிடத்தைப் பார்க்க பூமி செல்வமுண்டாம்.

பாபர் சத்துருவீட்டில் இருக்கப் பார்க்க தூரதேசத்து அன்னியரால் ஐஸ்வரியம்.

9-ஆமிடத்ததிபனும் காரகனுங் கூடி 6-ஆமிடத்திலிருக்க பிதா சொல் கேட்பவன்.

9-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்திலிருக்கின்றவனுங் கூடி நீச்சத்திலிருக்க பாபர் சத்துருவீட்டிலிருக்க அல்லது 8-12-ஆமிடத்தில் கூடியிருக்க பாக்கிய நஷ்டமாமெனவறிக.

ஒன்பதாம் பாவகம் முற்றிற்று.

பத்தாம் பாவகம்

துர்க்கர்மம்

8-ஆமிடத்ததிபன் 10-ஆமிடத்தில் பாபருடனிருக்க 10-ஆமிடத்ததிபனையும் லக்கினாதிபதியையும் பாபர்பார்க்க துர்க்கர்மம்.

11-ஆமிடத்ததிபனும் பாபரும் நீச்சத்திலிருக்க 6-8-12-ஆமிடத்திலிருக்க சுபர் பாராதிருக்க துர்க்கருமம்.

10-ஆமிடத்ததிபன் சுபனாய் வலுவாய் 10-ஆமிடத்திலிருக்க ஆகாதிகர்மம்.

10-ஆமிடத்ததிபனும் சுக்கிரனுங் குருவுங்கூடி உச்சத்திலிருக்க ஆகாதிகர்மம்.

10-ஆமிடத்ததிபனும் பாபரும் பாபர் வீட்டிலிருக்க 10-ஆமிடத்தைப் பார்க்க துர்க்கருமம்.

9-ஆமிடத்ததிபன் லக்கினத்திலிருக்க 5-ஆமிடத்ததிபன் சுபனாகவிருக்க பாபர் 3-6-லிருக்க நீசகன்மம்.

இலக்கினம் 7-ஆமிடத்தில் ராகு இருக்க சனி சுக்கிரன் கேந்திரத்திலிருக்க புதன் கூடிட சண்டாள போகமெனவறிக.

நற்கருமம்

10-ஆமிடத்ததிபன் வலுவாய் சுபருடன் கூடி 7-ஆமிடம் 4-ஆமிடம் லக்கினத்திலிருக்க நற்கருமம்.

10-ஆமிடத்ததிபன் சுபனாய் 2-9-11-ஆமிடத்தினும் உச்ச கேந்திரத்திலுமிருக்க நற்கருமம்.

10-ஆமிடத்ததிபனும் 12-ஆமிடத்ததிபனுங் கூடி 12-ஆமிடத்திலிருக்க நற்கர்மம் செய்பவன்.

10-ஆமிடம் மேஷம் ரிஷபம் சிங்கமாக அதில் சுபர் இருக்க உத்தம கடன் செய்பவன்.

குரு சுக்கிரன்கூடி 10-ஆமிடத்ததிபனை பார்க்க யாகம் செய்பவன்.

குரு சுக்கிரன் சுபர் வீட்டிலிருக்க இன்னம் எத்தனை கிரகங்கள் கூடுகிறதோ அத்தனை பெருமகம் புரிபவன்.

இலக்கினாதிபதி 10-ஆமிடத்திலிருக்க கர்மகாரகன் வலுவாயிருக்க கர்மங்குறையாது.

உபதேசம் முதலியது

10-ஆமிடத்ததிபனும் குருவும் வலுவாகயிருக்க மூன்று வேதங்கள் அறிவான்.

குருவும் 9-ஆமிடத்ததிபனுங் கூடி 9-ஆமிடத்திலிருக்க பலர்களிடத்து உபதேசவித்தை பெறுபவன்.

9-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்தில் இல்லாதிருக்க உபதேசம் பெறுபவன்.

குருவும் 9-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்திலிருக்க பலர்களிடத்துபதேசம் வசனம் வித்தையென வறிக.

சன்னியாசி

10-ஆமிடத் ததிபனும் 4-ஆமிடத்திலிருக்க 11-ஆமிடத்ததிபன் திரிகோணத்தி லிருக்க ராகுகேது தவிர மற்ற நாலுகிரகங்கள் 10-ஆமிடத்திலிருக்க சன்னியாசி.

செவ்வாய் சூரியன் சந்திரன் கூடி 10-ஆமிடத்திலிருக்க சன்னியாசி.

சூரியன் புதன் உச்சத்திலிருக்க 12-ஆமிடத்தில் சுக்கிரனிருக்க சனி சுபர் பார்க்க சன்னியாசி.

19-ஆமிடத்ததிபன் 9-ஆமிடத்திலிருக்க 9-ஆமிடத்ததிபன் வலுவாகயிருக்க சுக்கிரன் அல்லது குருபார்க்க தெய்வபக்தி.

சுக்கிரன் புதன் குரு 3 - ஆமிடம் 6 - 12 - லிருக்க ஞானமில்லாதவன்.

புதன் அல்லது செவ்வாய் குருவைச் சேர்ந்தால் சத்திரம் கோவில் கட்டுவா னெனவறிக.

பத்தாம் பாவகம் முற்றிற்று.

பதினொன்றும் பாவகம்

லாபம்

11-ஆமிடத்ததிபன் உச்சனாய் சுபர் மத்தியிலிருக்க 11-ஆமிடத்தில் சுபர் இருக்க லாபந்திரளாகும்.

11-மிடத்ததிபனை சூரியன் சந்திரன் கூடி பார்க்க வெகு லாபமுண்டாம்.

11-ஆமிடத்தில் சந்திரனிருக்க குரு பார்க்க பாக்கிய லாபஞ் சேரும்.

இலக்கினாதிபதி 11-ஆமிடத்திலிருக்க 11-மிடத்ததிபன் திசையில் வெகுலாபம் வரும்.

6-8-12-ஆமிடத்ததிபனுங் கூடிட அல்லது தனியே இருக்க பாபர் பார்க்க லாபமில்லை.

2-ஆமிடத்ததிபன் 11-ஆமிடத்திலிருக்க 11-மிடத்ததிபன் 2-மிடத்திலிருக்க அல்லது கேந்திரத்தி லிருக்க வெகு ஸ்திதிவந்தனுமெனவறிக.

பதினொன்றும் பாவகம் முற்றிற்று.

பனிரெண்டாம் பாவகம்

சுகவாழ்வு

12-ஆமிடத்தில் குரு விருக்க சுபர் கேந்திர உச்சத்திலிருக்க 11-ஆமிடத்தில் சுபரிருக்க மெத்தைகட்டில் சப்ரமஞ்சத்தில் வாழ்கின்ற மன்னவன்.

12-ஆமிடத்ததிபன் உச்சனாய் 9-ஆமிடத்ததிபனை பார்க்க உயர்ந்த சாமான்களை உடைத்தா யிருப்பான்.

12-ஆமிடத்ததிபன் 6-8-ஆமிடத்திலிருக்க சனி 12-ஆமிடத்திலிருக்க சுபர் நோக்காதிருக்க மெத்தையில் தூங்குவானெனவறிக.

பொன்முதலிய விரையம்

9-மிடத்ததிபன் 11-ஆமிடத்திலிருக்க 9-ஆமிடத்துக்கு 11-ஆமிடத்ததிபன் கூடிட அநேக பொன் தேடுவான.

9-ஆமிடத்ததிபன் 5-ஆமிடத்திலிருக்க 5-ஆமிடத்ததிபன் 9-ஆமிடத்திலிருக்க 2-ஆமிடத்திலிருக்க மூன்றுபேரும் லக்கினத்திலிருக்க கடன்கொடுத்து இழந்து போவான்.

2-ஆமிடத்ததிபன் மாரகத்தானோடு கூடிட 12-ஆமிடத்ததிபன் 2-ஆமிடத்திலிருக்க 8 - ஆமிடத்தில் 11 - ஆமிடத்திலிருக்க பொன் சேதம்.

சுக்கிரன் குருவுங்கூடி சந்திரன் பார்க்க சனி பார்க்க ஒருகாசு மீயான்.

தேய்பிறை சந்திரன் 12-ஆமிடத்திலிருக்க தனத்தை அரசர் கைக்கொள்வார்.

சந்திரன் குரு 12-ஆமிடத்திலிருக்க தனமிகத்தேடி சிறிது தனத்தோடு வாழ்குவான்.

இலக்கினாதிபதியும் நவாங்கிசாதிபதியுங் கூடி கேவலனா யிருக்க கள்ளரால் கொள்ளை போகும்.

5-ஆமிடத்ததிபன் கேவலமாக அல்லது பாபருடன் கூடிட 12-ஆமிடத்ததிபன் பார்க்க பிள்ளைகளால் பணவிரைய மாகுமென வறிக.

பனிரெண்டாம் பாவகம்

முற்றிற்று.

பெண்கள் ஜாதகம்

அழகு

சந்திரன் சுக்கிரன் லக்கினத்திலிருக்க அழகும் சுகமுண்டாம்.

இலக்கினத்தில் சந்திரனிருக்க அழகுடையவள்.

இலக்கினமுதல் 3-மிடத்தில் சுபர்களிருக்க சுகம் அழகு முண்டாம்.

இலக்கினத்தில் சந்திரனிருக்க லக்கினம் இரட்டை ராசியாக விருக்க அழகுள்ள மயில்.

இரண்டாமிடத்தை சுபர்பார்க்க ஜெகத்ரூபி.

இலக்கினத்தில் புதன் சுக்கிரன் கூடிட ஞானி இனிதுரைப்பாள்.

சுபர் 3-ஆமிடத்திலிருக்க வெகுதனம் தயவு சுகமுள்ளவன்.

குரு உச்சத்திலிருக்க வாலிப எவ்வன உருவுள்ளவன்.

இலக்கினதிபதியும் 9-ஆமிடத்ததிபனும் மாரகனாக விருக்க தோன்றலுடனிருப்பவள்.

இலக்கினத்தில் சந்திரன் சுக்கிரனிருக்க பெருமையுடன் காசினியில் வாழ்பவள்.

உதையத்தில் சந்திரன் புதன் கூடிட பலகலை உணர்பவள் நற்குணம்.

இரட்டை ராசியில் குரு செவ்வாய் புதன் வலுவாக யிருக்க பலகல்வியும் நற்குணமும் மாதர்க்குள் முக்கியமானவளெனவறிக.

பாவி

பாபர்கள் இந்த 2-ராசியிலுமிருக்க பொல்லாப் பாவக் கன்னி.

சூரியன் செவ்வாய் கூடியிருக்க முழுப்பாவி.

சிங்கம் லக்கினமாக சந்திரனிருக்க செவ்வாய் அங்கிசையிலிருக்க உரைக்கிலனுசாரி.

ரிஷபம் துலாம் இவைகளில் சந்திரனிருக்க செவ்வாய் அங்கிசையிலிருக்க கொடியாள்.

மேஷம் விருச்சிகம் லக்கினமாக சந்திரனிருக்க செவ்வாய் அங்கிசையிலிருக்க பரிவில்லாப் பாவி.

விதவை

பாபர் 8-ஆமிடத்திலிருக்க விதவை.

சந்திரன் 8-ஆமிடத்திலிருக்க விதவையாகி ஊரில் திரிவாள்.

7-ஆமிடத்ததிபனும் 9-ஆமிடத்ததிபனும் சூரியனுங்கூடி 6-8-லிருக்க விதவை.

9-ஆமிடத்ததிபனும் 8-ஆமிடத்ததிபனும் சுபர்வீட்டிலிருக்க வாலிபதிசையில் விதவை.

7-ஆமிடத்தில் 8-ஆமிடத்தில் சனி செவ்வாயிருக்க வாலிபத்தில் விதவை.

பாபர் 7-ஆமிடத்திலிருக்க வாலிபத்தில் விதவை.

8-ஆமிடத்தில் பாபரிருக்க விதவையா யிருப்பாள்.

சந்திரனும் புதனுங்கூடி லக்கினத்திலிருக்க விதவைத் தன்மையுள்ளவள்.

அஷ்டவர்க்கில் எத்தனை வருஷம் சேருகிறதோ அத்தனை வருஷததில் விதவை.

கணவனுக்கு முன் மரிப்பவள்

சுபர் 2-ஆமிடத்திலிருக்க கணவனைவிட்டு முன்போவாள்.

சூரியன் சனி கூடியிருக்க பாபர் 7-ஆமிடத்தை பார்க்க வாலிபத்தில் இறப்பவள்.

சூரியன் சனி கூடிட அவருடன் சுபர்கூட உடனே வேறொருவரை மணப்பாள்.

8-ஆமிடத்தில் பாபரிருக்க உபயத்தில் சுபரிருக்க சுமங்கிலியாய் மரிப்பாளெனவறிக.

புத்திரர்

ரிஷபம் கன்னி விருச்சகத்தில் சந்திரனிருக்க புத்திரர் அற்பம்.

மேஷம் விருச்சிகம் லக்கினமாக சந்திரனிருக்க செவ்வாய் அங்கிசையிலிருக்க பாலரில்லாத அடிமை.

9-ஆமிடத்ததிபன் 6-8-ஆமிடத்திலிருக்க சூத்திரன் பிள்ளை.

9-ஆமிடத்ததிபன் 12-ஆமிடத்திலிருக்க விப்பரர் பிள்ளையெனவறிக.

அற்பாயுசு

சந்திரனுக்கு 12-ஆமிடத்தில் குரு சுக்கிரனிருக்க அற்பாயுசு.

8-ஆமிடத்ததிபனும் சந்திரனுங் கூடி 11-8-ஆமிடத்திலிருக்க சதவயது.

3-ஆமிடத்ததிபனும் 5-ஆமிடத்ததிபனும் 7-ஆமிடத்ததிபனும் சந்திரனுங்கூடிட அற்பவயது.

9-ஆமிடத்ததிபனும் பாபரும் உச்சத்திலிருக்க சுமங்கலியாய் தீர்க்காயுசெனவறிக.

கன்னியஸ்திரீ

7-ஆமிடத்தில் பாபரும் 3-ஆமிடத்தில் சுபருமிருக்க சன்னியாசி பெண்.

பதிவிரதை

மகரம் கும்பம் லக்கினமாக சந்திரனிருக்க குரு அங்கிசையிலிருக்க பதிவிரதை.

மேஷ விருச்சிகம் லக்கனமாக சந்திரனிருக்க அங்கிசையிலிருக்க பதிவிரதை.

மகரம் கும்பம் லக்கினமாக சந்திரனிருக்க புதன் அங்கிசையிலிருக்க கணவனுடன் எப்போதும் சுகமுடன் வாழ்வாளென வறிக.

மலடி

மகரம் கும்பம் லக்கினமாக சந்திரனிருக்க சுக்கிரன் அங்கிசையிலிருக்க மலடி.

சனி செவ்வாய் லக்கினமாக விருக்க செவ்வாய் அங்கிசையிலிருக்க சுக்கிரனிருக்க மலடி.

பாபர் பார்க்க மலடியாய் பலபேரை இச்சித்துச் சேர்வாளென வறிக.

நடத்தை

சூரியன் புதன் கூடி இருக்க பலர்சிந்தனை அறிபவள்.

சூரியன் குரு கூடியிருக்க வஞ்சனை ஆள் முன்செய்யும் தொழில் அறிபவள்.

சூரியன் சுக்கிரன் கூடியிருக்க ஆயுதவகையால் நிதிதேடுவாள்.

சூரியன் சனி யிருக்க பித்தளை செம்புவிற் றுயிர்பவள்.

குரு சுக்கிரன் 6-ஆமிடத்திலிருக்க நோயுள்ள கணவன்.

சனிவலுவாக புதன் சந்திரன் சுக்கிரன் காரகத்திலிருக்க ஆண் ஒற்றை ராசியிலிருக்க லக்கினாதிபதி ஒற்றை ராசியிலிருக்க அவன் புள்ள புருஷன் சுவாமிக்கு நேசமுடனிருப்பாள்.

12-ஆமிடத்ததிபன் சுபனுய் வலுவாக யிருக்க மேல் மெத்தை மாடகூடம் உண்டாமெனவறிக.

பலருடன் சேர்பவள்

கடகம் லக்கினமாகவிருக்க சந்திரன் செவ்வாய் அங்கிசையிலிருக்க பலருடன் சேர்பவள்.

சிங்கம் லக்கினமாக சந்திரனிருக்க சனி அங்கிசையிலிருக்க பிறர்முகம் பார்ப்பவள்.

தனுசு மீனம் லக்கினமாக சந்திரனிருக்க சனி அங்கிசையிலிருக்க வெகுகாமி.

மகரம் கும்பம் லக்கினமாக சனி அங்கிசையி லிருக்க கீழ்ஜாதியாரை சேர்வாள்.

7-ஆமிடம் சூரியன் மனையாக சூரியனிருக்க கொண்டோனை ஓட்டிவிடுவாள்.

சனி புதன் 7-ஆமிடத்திலிருக்க என்னாளும் வழி நடந்தே திரிபவள்.

ரிஷபம் துலாத்தில் சந்திரனிருக்க சனி அங்கிசையிலிருக்க கணவனைவிட்டு சஞ்சலமாய் வேறொருவனை மணப்பவள்.

7-ஆமிடத்தில் சனி செவ்வாய் சுக்கிரன் கூடியிருக்க அலம் போவாள்.

7-ஆமிடத்தில் சுபரும் பாபருமிருக்க கெமனம் பரபுருடரை சேர்பவளென வறிக.

வாலிபத்தில் அமங்கலையாவாள்

செவ்வாய் சூரியன் கூடியிருக்க வாலிபத்தில் அமங்கலையாவாள்.
குரு சுக்கிரனிருக்க சந்திரன் பார்க்க வாலிபத்தில் கலியாணம்.
சந்திரன் குரு கூடி 7-ஆமிடத்திலிருக்க கிழப்புருடன்.
7-ஆமிடம் சுக்கிரன் மனையாக அனுகூலப்பறவை.
7-ஆமிடம் புதன் மனைவியாயில் புலவராவரெனவறிக.

பெண்கள் ஜாதகம் முற்றிற்று.

ஜாதகசித்தி என்னும்

அனுபோக சோதிட பிரம்ம ரஹஸ்யம்

2-காண்டமும் முற்றிற்று.

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1938.

சந்திரகாவியம்

மூலமும்-விருத்தியுரையும்

இவை பண்டைக்காலத்து சாஸ்திர மேதாவிகளால் நன்கு புகழப்பெற்று, ஒவ்வொரு ஜாதகங்களுக்கும், யோகபாவம், மாரகபாவம், நட்பு, ஆக்ஷி, உச்சம், நீச்சம், பகையென்னும் பஞ்சபலம். திசாபுக்தி காலங்களி லுண்டாகும் போதகன் வேதகன் பாசகன் காரகரென்பவ ரியல்பு முதலியனவற்றைத் தெளிவாயும், அனுபவத்தி லொற்றுமையுடனும் எழுதப்பட்டு மூலபாடமா யிருப்பது கருதியும் இதனை சோதிடர்கள் அறிவது மிக்க சிரமமாயிருப்பது கருதியும், ஷை செய்யுளுக்கு உரையும் பலவித நூற்களின் மேற்கோளாலும் நன்குய் விளக்கிக் காட்டியுள்ளன. இத்துடன் கன்மகாண்டமும், அதன் விருத்தியுரையும் சேர்த்துள்ளதால் தற்கால சோதிடர்களும் இதிலுள்ள விஷயங்களை எளிதிலறிவார்களென்றும் நம்புவதால், ஒவ்வொரு சோதிடர்களும் வாங்கி வாசித்து தன் சந்தேகம் நீங்கி ஜாதகபலன் உரைக்குமாறு வேண்டுகின்றனம்.

இதன் விலை அணா 0 9 0

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

சோதிட

சில்லரைக் கோர்வை

இப்பூமியின்கண் உதித்த மாந்தர்கட்கு நன்மை யுண்டானபோது தீமையும், தீமையுண்டானபோது நன்மையும் உண்டாவதும், மேற்சொல்லியுள்ள நன்மையும் தீமையும் அனுபவித்தே தீரவேண்டு மாகையாலும், அந்நன்மையும் தீமையும் வருங்கால மறியும்வண்ணம் ஆதியில் கணிதசாஸ்திரம் ஜோதிடத்தால் அவைகளை அறிந்துகொள்ளுமாறு அநேக சித்தர்களால் பற்பல நூல்களை வடமொழியில் எழுதப் பட்டன. அவைகளைத் தமிழால் மொழிபெயர்த்தும் நம்போன்று சிற்றறிவுள்ளோரும் அதைப் பயனடையும்வண்ணம் பற்பல நூல்களை ஒன்று சேர்த்து 'சோதிட சில்லரைக் கோர்வை' என்று பெயரளித்து, முறையே அறிவாளரும் சிற்றறிவுடையோரும் இதைக் கைக்கொள்வாராயின் கோசாரம், ஆரூடம், காரகம், கிரகநிலை, இராசிநிலை, ஆரூடம் சொல்லும் விதம், கணிதம் செய்யும்விதம், திசைபுக்தி அந்தரம் பிரிக்கும் விபரம், திசைப்பலன் சொல்லல், மாரக திசையறிதல், யோகதிசை, உற்பன்னதிசை இவை யாவும் ஆசானின்றி அனைவரும் தெரிந்து பயனடையுமாறு எளியநடையில் மதுரை. தம்புசாமி நாயுடு அவர்கள் குமாரரும் சோதிட வல்லவருமாகிய க. குப்புசாமி நாயுடு அவர்களால் பற்பல ஏட்டுப் பிரதிகளைக்கொண்டும் எழுதப்பட்டு சுத்தப்பிரதியாக அச்சிட்டுள்ளோம். ஆகையால் இதை ஒவ்வொருவரும் கைக்கொள்வராயின் பெரிதும் பயன்பெறலாம். ஒவ்வொருவரும் எமது பதிப்பைக் கவனித்து வாங்கக் கோருகின்றனம். விலை ரூபா 2 8 0

எமது விலாசம்:

அ. இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ்

24, தாண்டவராயப்பிள்ளைவீதி, சென்னை.